
கல்கி
KALKI
15-3-70
40
காசு

கல்கி


பொருளடக்கம்

சௌமிய, பங்குனி, 2 - 1970, மார்ச் 15

அட்டைப்படம்: குழலூதும் சிறுவன்
வண்ணப்படம்: பி. வி. சுப்பிரமணியம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20	ரூ. 10
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21	ரூ. 10·50
இதர நாடுகள்	ரூ. 40	ரூ. 20


மொழிவாரி மாநில அமைப்பு
பெல்காம் பிரச்னை
பொது நலனை வெட்டும் கோடாரி
பற்றாக்குறை பட்ஜெட்
வரி உயர்வு
Rali



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ❊ இதழ் 35

மாபெரும் கூட்டணி தேவை

தில்லி நிலவரம் இதுதான் : தாம் பதவி வகிப்பதால் ஜனங்களுக்கு நன்மை விளைகிறதா என்று பாராமல், அதை விடாது பற்றிக் கொண்டே இருக்கும் பேராசை ஸ்ரீமதி இந்திரா காந்தியிடம் காணப்படுகிறது. இதே சமயத்தில் எதிர்த் தரப்பில் இருக்கும் பல்வேறு கோஷ்டியினரோ ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குத் தயாராகவில்லை. எதிர்க் கட்சியினராக இருந்து அநுபவிக்கும் செல்வாக்கு, அதிகாரம், உரிமை ஆகியவற்றுடன் அவர்கள் திருப்தி அடைந்து விடுவதாகவே தோன்றுகிறது. ஆட்சியைத் தன் கைகளில் இறுகப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் அபாயம் நிறைந்த தலைமையை அகற்றுவதற்கு எவ்வளவு அவசரம் ஏற்பட்டுள்ளதென அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மக்களில் பெரும்பாலோர் விஷயங்களை நன்கு அறிந்தவர்கள் அல்லர். அவர்கள் வாய் திறப்பதில்லை. பத்திரிகைகளில் வரும் கருத்துரைகளைப் படிக்கிறவர்கள்கூட என்ன நடக்கிறது பார்ப்போம் என்று இருந்துவிடுகிறார்களே தவிர, நிகழ்ச்சிகளின் போக்கை உருவாக்குவதற்கு ஒன்றும் செய்வதில்லை. ஆட்சி பீடத்தில் உள்ள சீமாட்டிக்கு இவை யெல்லாம் மிகச் சௌகரியமாக இருக்கின்றன. ராஜீய வாதி என்ற முறையில் அவர் காட்டி வரும் சாமர்த்தியத்தை அந்நியப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன. ஆனால் அவர் நடந்து கொள்ளும் விதம் நேர்மை வழியிலிருந்து பெரிதும் மாறுபட்டது என்று இந்நாட்டு மக்கள் உறுதியாக நம்புகின்றனர். எதிர்த் தரப்பில் உள்ள ஜனநாயகக் கட்சிகள் செயலாற்றுவதற்கான திறமையற்று இருப்பதைக் கண்டு ஒரு பெரிய வல்லரசு சந்தோஷப்படுவதற்குக் காரணமுண்டு. இந்தியாவில் உள்ள பல்வேறு கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தமக்குச் சாதகமாக நாட்டு நடப்பு உருவாகி வருவதைக் கண்டு வெவ்வேறு அளவில் மகிழ்ச்சி அடைகின்றன.

நம்பிக்கை உண்டாவதற்கான வழி ஒன்றுதான். அதாவது, அரசாங்கம் எல்லாத் துறைகளிலும் பிரவேசித்து ஆதிக்கம் செலுத்தும் கோட்பாட்டை ஆதரிக்காத ஜனநாயகக் கட்சிகள் யாவும் ஒரு தலைமையின்கீழ் ஒன்றுபட வேண்டும். இப்போது தேச விவகாரங்கள்மீது ஸ்ரீமதி காந்தியும், கம்யூனிஸ்டுகளும், மற்ற சர்க்கார் சர்வாதீன ஆதரவாளர்களும்தான் கூட்டு ஆதிக்கம் பெற்றுள்ளனர். அவர்களுக்கு எதிராகப் பெரிய கூட்டணி ஒன்றை மேலே நான் குறிப்பிட்ட கோஷ்டிகள் உருவாக்க வேண்டும். நேர்மையுடன் நல்லாட்சி நடத்திச் சட்டத்தையும், அமைதியையும் இந்தியாவெங்கும் பாதுகாப்பது; அரசியல் சாஸனத்தின் நோக்கங்களையும், லட்சியங்களையும் திரித்துக் கூறாமல் உண்மை உணர்வுடன் அமுல் நடத்துவது என்ற உறுதியான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இந்தக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும். பெர்மிட், லைசென்ஸ் நிர்வாகத்தைக் கட்சிச் சார்பு இல்லாததும், சர்க்காரின் நிர்ப்பந்தமின்றிச் சுதந்திரமாகச் செயலாற்றக் கூடியதுமான ஓர் அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும். சர்க்காரின் நிர்ப்பந்தங்கள் இல்லாமல் தொழில்கள் விரிவு காண்பதற்குத் தாராளமாக வாய்ப்பு அளிக்க வேண்டும். முழு வேலை வாய்ப்பு, நியாயமான ஊதியம், தொழில் வளர்ச்சிக்காக முதலீடு செய்வோருக்கும் தொழிலாளருக்கு மிடையே நல்லிசைவும், ஒத்துழைப்பும் இருக்கச் செய்வது — ஆகியவை ஜனநாயகக் கூட்டணியின் நோக்கங்களாக இருக்க வேண்டும்.

வரிப் பளு இயன்ற அளவுக்கு அதிகப் பட்சமாகக் குறைக்கப்பட வேண்டும். சேமித்து மீண்டும் முதலீடு செய்ய அதிக வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

கூட்டணியில் சேரும் கட்சிகள் மட்டுமின்றி மக்களும் மதித்து நம்பிக்கை வைக்கக் கூடிய ஒருவர் அதன் தலைவராக வேண்டும்.

அசிரத்தையாலும், போதிய நாட்டுப் பற்று இல்லாததாலும் தேசம்

அபாயத்துக்கு உள்ளாகி விட்டது. இதிலிருந்து இந்தியா மீண்டு எல்லா வல்லரசுகளின் நன்மதிப்பையும் பெற்று, சரியான திசையில் மற்ற நாடுகளையும் செலுத்தக் கூடியவாறு தார்மீகச் செல்வாக்குப் பெறுவதற்கு நம் நாட்டு மக்களில் நல்லவர்கள் நிறைய ஏற்பட வேண்டும். இவ்வாறு இது நல்லவர்களின் நாடாகுமாகில் கூட்டணியை வழிகாட்டியாக இருந்து நடத்திச் செல்வதற்கு யோக்கியதாம்சங்களைப் பெற்ற ஒரு தலைவரும் தாமே தோன்றுவார். இப்படி ஓர் அற்புதம் நிகழும் என்று நம்பிக்கையுடன் இருப்போம். நம் கண்களுக்குப் புலப்படும் அனைத்துக்கும் அப்பால் ஒரு சக்தி இருந்து கொண்டு நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஆட்டி வைக்கிறது. மக்களின் இதயங்களையும் அதுவே இயக்குகிறது. காந்திஜி நம்மிடையே அவதரித்ததே ஓர் அற்புதம். சில சந்தர்ப்பங்களில் அத்தகைய அற்புதத்தில் நம்பிக்கை வைப்பதுதான் உண்மையான பிரத்தியட்ச உணர்வாக அமையக் கூடும்.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

மக்கள் மேலும் 170 கோடி ரூபாய்களை மத்திய அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டும். பட்ஜெட்டில் துண்டு விழுந்துள்ள 225 கோடி ரூபாயை ஈடு கட்டும் விளைவுகளையும் மக்கள் தாங்கியாக வேண்டும். பட்ஜெட் பற்றுக்குறை என்பதும் ஒரு வரிதான். ஏனெனில், அதைச் சரிக்கட்டப் பணம் அச்சிடுவதால், பணப் புழக்கம் அதிகமாகி நாணய மதிப்புக் குறைகிறது. இதனால் மிக ஏழையாக உள்ளவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

எல்லா மக்களும் உபயோகிக்கும் சர்க்கரை, தேயிலை, மண்ணெண்ணெய் இவற்றுக்கும் வரி விதித்திருப்பது, இன்றைய சர்க்கார் சோஷலிஸத்துக்குப் பாத்தியதை பாராட்டுவதைக் கேலிக்கிடமாக்குகிறது. புது வரிகளுக்கு உரிய விகிதத்துக்கு அதிகமாகவே விலைவாசிகள் உயரும். இது ஏழைகளும், மத்தியதர மக்களும் உபயோகிக்கும் பண்டங்களையும் பாதிக்கும். குதிரையின் முதுகிலேயே சுமைகளைக் கட்டினாலும் சரி, அல்லது பாரத்தைச் சாரதி தன்னுடைய தோளில் வைத்துக் கொண்டிருந்தாலும் சரி, மொத்தப் பளுவையும் குதிரைதான் தாங்கியாக வேண்டும். இவ்வாறே வரி எந்த வர்க்கத்தின் மீது விதிக்கப்பட்டாலும் பொது மக்கள்தான் கடைசியில் அதன் சுமை முழுவதையும் தாங்கியாக வேண்டும்.

*

பிப்ரவரி மாதம் 22ந் தேதி குருஜி கோல்வால்கர் புது தில்லியில் பேசினார். அக்கூட்டத்துக்குத் தில்லியில் உள்ள பிரமுகர்கள் பார்லிமெண்டு அங்கத்தினர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், தொழில் வர்த்தகத் துறையினர், பத்திரிகையாளர் போன்றோர் வந்திருந்தனர். அங்கே அவர் பேசியதை ஜனசங்கத்தின் பத்திரிகையான ''ஆர்கனைஸர்'' வெளியிட்டிருக்கிறது. அவர் பின்வருமாறு பேசினார் என்று படித்து மகிழ்ந்தேன்:

''மற்ற சமயங்கள் பிற மதங்களைச் சகித்துக்கொண்டாலும் அவை தம்மைவிட மட்டமானவை என்றே கருதுகின்றன. ஆனால் ஹிந்து மதமோ எல்லா மதங்களும் சமமானவை என்றே நம்புகிறது. கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களும் தமது சமயங்களை ஒழுங்காகப் பின்பற்றுவதற்கு உண்மையான ஹிந்து துணை புரிவான். பல்வேறு சமயங்களையும் பிரிவுகளையும் இந்தியாவில் ஞானிகள் சிருஷ்டித்தது போட்டா போட்டி அடிப்படையில் அல்ல; தமது தனிப் பெருமையை உணர்த்துவதற்காக அல்ல. பிரதான தேசிய வழிக்குத் துணைச் சாதனங்களாகவே அவை உருவாக்கப்பட்டன.''

''உன்னை ஈசுவரன் என்று அழைக்கிறார்கள் சிலர்; அல்லா என்று உன்னை அழைக்கிறார்கள் சிலர்; ஆண்டவனே! எல்லா மனிதர்களின் மனத்தையும் நல்வழியில் செலுத்துவாயாக''— காந்திஜியின் ஆசிரமத்தில் அன்றாடம் பாடுவதற்கு வினோபா பாவே உருவாக்கித் தந்த பாடல் இது. ''வானிலிருந்து பெய்யும் மழை அனைத்தும் கடலில் சங்கமமாகிறது. ஆண்டவனை மக்கள் எந்த விதத்தில் வழிபட்டாலும் அது கேசவனையே அடைகிறது'' என்று மகாபாரதம் கூறுகிறது. அனாதி காலமாகப் பிற மதங்கள் விஷயத்தில் ஹிந்து சமயம் காட்டி வந்துள்ள மனப்பான்மை இதுதான். ■



திரு எஸ். நாராயணசாமி (சித்ரா) மேல் சபைக்கு, சென்னை பட்டதாரிகள் தொகுதியில் சுதந்திரக் கட்சி அபேட்சகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பட்டதாரி வோட்டர்களை அவருக்கே வோட்டளிக்கும்படி நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். எல்லா நற்பணிகளுக்கும் நல்ல ஆதரவு தேடித் தரக்கூடியவர். முக்கியமாக நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படவும் தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் தேடித் தருவதிலும் மிகத் தீவிரமாகப் பாடுபடக்கூடியவர்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி



கலைஞர்களுக்குக் கௌரவம்

1. தெய்வத் தமிழிசையால் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்துள்ள இசையரசு திரு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் ராஷ்டிரபதி வி. வி. கிரி அவர்களிடமிருந்து 1969ம் ஆண்டுக்கான சங்கீத நாடக அகாதெமியின் கர்நாடக வாய்ப்பாட்டிசை விருதைப் பெறுகிறார்.



2. சம்பிரதாய சுத்தமாகப் பரதநாட்டியம் போதிப்பதில் சிறப்புப் பெற்றுள்ள திரு கே. சுவாமிநாதப் பிள்ளையவர்கள் ராஷ்டிரபதியிடமிருந்து நாட்டியத்துக்கான விருதைப் பெறுகிறார்.



3. வீணை விற்பன்னர்களில் ஒருவராகத் திகழும் திரு ஏ. நாராயண அய்யங்கார் அவர்களுக்குக் கர்நாடக வாத்திய இசைக்கான சங்கீத நாடக அகாதெமி விருதைத் திரு கிரி அவர்கள் வழங்குகிறார்கள்.

என்ன சேதி?

இந்தியாவின் நண்பர்

திருமதி மோனிக்கா பெல்டன் என்ற பிரிட்டிஷ் ஆசிரியை காலமான செய்தி கேட்டுத் தமிழ் நாட்டில் பலரும் வருத்தமடைவார்கள். திருமதி மோனிக்கா பெல்டன் பிரிட்டனில் தொழிற் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். எனினும் அவர் முக்கியமான பணியாகக் கொண்டது எழுத்துத் தொழில். பல நல்ல கதைகள், புத்தகங்கள் எழுதியுள்ளார். அமெரிக்காவும் ருஷ்யாவும் அணுகுண்டு சோதனைகள் நடத்தி உலகைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தையும் கடல் நீரையும் விஷமயமாக்கி வருவதைக் கடுமையாகக் கண்டித்து அவரளவில் உலகத் தலைவர்களின் மனச்சாட்சியைத் தூண்டி வந்தார். இப்பணியில் ஈடுபட்டு அவர் இந்தியாவுக்கு வந்து புதுதில்லியில் தங்கியிருந்தபோது அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு ஒன்று நடப்பதை அறிந்து அங்கு சென்றார். அவர் சென்ற அன்று ராஜாஜி நகைச்சுவையுடன் கலந்து ஓர் அரிய உரையை நிகழ்த்தியதைக் கேட்ட அம்மையார், ''உலகில் ராஜாஜியைப் போல் பேசக் கூடியவர் ஒருவர் தானே உண்டு'' என்று வியந்தார். அவரைப் பற்றியும், அவரது தேசப் பணியைப் பற்றியும் விசாரித்து அறிந்தார். அவற்றைக் கேட்கக் கேட்க ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுத ஆர்வங் கொண்டு சென்னையிலேயே வந்து தங்க ஆரம்பித்தார். இந்தியர்களை — தமிழர்களை — சகோதரர்களாகவும் பாரத நாட்டைத் தாயகமாகவும் கொண்டு வாழ்ந்து வரலானார். ஆனால் அம்மையார் எழுத விரும்பிய புத்தகத்துக்கு ராஜாஜி எவ்வித உதவியும் நல்க மறுத்து விட்டார். அதுமட்டுமல்ல; அந்த முயற்சியைக் கைவிடும்படி வற்புறுத்தி வந்தார். இருந்தாலும் ராஜாஜியை அவர் அடிக்கடி சந்தித்து அளவளாவிய நிகழ்ச்சிகளையும் உரைகளையும் அவ்வப்போது தொகுத்து வந்தார். அதனை ''ஐ மீட் ராஜாஜி'' (நான் ராஜாஜியைச் சந்திக்கிறேன்) என்ற தலைப்பில் ஓர் அருமையான புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்.



மோனிக்கா பெல்டன்

ராஜாஜிக்கு அடுத்தபடி அவர் உள்ளம் கவர்ந்தவர் சமீபத்தில் காலஞ்சென்ற சகோதரி சுப்புலட்சுமி அம்மையாராகும். அவரது தியாக வாழ்க்கை, இந்தியப் பெண் குலத்துக்குச் செய்துள்ள தொண்டு பெல்டன் அம்மையாரை உருக்கியது. சகோதரியின் வாழ்க்கை வரலாற்றை அவர் வாய் மூலமாகவே கேட்டு ஓர் அரிய நூல் வெளியிட்டிருக்கிறார். அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் 'சேவைக்கு ஒரு சகோதரி' என்ற தலைப்பில் கல்கியில் வெளியாகி அதைப் படிக்கும் பேறு நம் வாசகர்களுக்குக் கிட்டியது.

ஸ்ரீமதி பெல்டன் அறிவும் அடக்கமும் பண்பும் பரிவும் நிரம்பப் பெற்று வாழ்ந்தவர். அவர் மறைவு இந்தியாவுக்கு நஷ்டமேயாகும்.

பாரதிதாசனுக்குப் பரிசு

கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிசிராந்தையார் என்ற நூலுக்கு சாகித்திய அகாடெமியின் பரிசு வழங்கிக் கௌரவித்திருப்பது தமிழ்ப் பற்றுள்ள அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி யளிக்கும்.



திரு பாரதிதாசன்

பாரதிதாசன் அவர்கள் ஒரு புரட்சிக் கவி. நூதனமான கருத்துக்களைத் தேன் மணக்கும் சொற்களிலே அற்புத காவியங்களாக வடித்துத் தரக்கூடிய அரிய ஆற்றல் மிக்க கவிஞராக வாழ்ந்தார். அவர் தமது வாழ்நாளிலேயே தமது கவிதையில் மோகம் கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் பார்க்கும் அரும் வாய்ப்புப் பெற்றார். தமது கவிதைக்கு இருக்கும் ஆற்றலை நிதர்சனமாகக் கண்டார். அதைவிட ஒரு கவிஞனுக்குக் கிடைக்கக் கூடிய பேறு என்ன இருக்க முடியும்?


அநுதாபம்

''பட்ட காலிலே படும்'' என்பதுபோல் ஏற்கனவே புத்திரசோகமுற்றுள்ள ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், தமது வாழ்க்கைத் துணைவியார் ராணி மெய்யம்மை ஆச்சியாரையும் இழந்து மற்றொரு பெரும் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார். அவருக்கு நமது அநுதாபங்கள்.



ராணி மெய்யம்மை

ராணி மெய்யம்மை ஆச்சியார் பரோபகார சிந்தையும், தர்ம எண்ணமும் தெய்வ பக்தியும் மிக்கவர். பல நல்ல அறப் பணிகளைப் புரிந்திருக்கிறார். சமீபத்தில் சில காலமாகக் கடும் நோய்வாய்ப்பட்டிருந்து தமது அறுபத்தி மூன்றாவது பிராயத்தில் தேகவியோகம் அடைந்துள்ளார்.


'அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும்
ஒரே போல்
கெட்டிக்காரி!'
ஹார்லிக்ஸ் அவளைக் கெட்டிக்காரியாக மாற்றிற்று!
வளரும் குழந்தைகளுக்கு தெம்புடன் திகழத் தேவையான அதிக சக்தியை அளிக்க ஹார்லிக்ஸ் உதவுகிறது. டாக்டர்கள் குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். உங்கள் மகளுக்கும் ஹார்லிக்ஸ் தேவை!
ஆனால், சில நாட்களுக்கு முன் அவளுக்கு ஒரே மந்தம். நான் டாக்டரை விசாரித்தேன்.
டாக்டர் சொன்னார்: "அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்."
ஹார்லிக்ஸ் சாப்பிட்ட பின் அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரேபோல் கெட்டிக்காரியாக மாறிவிட்டாள்!
HL 7573 A
Horlicks
ஆடைச் சத்து நிறைந்த பாலுடன் கோதுமை மாவு மற்றும் மால்ட்டேட் பார்லியின் போஷாக்குச் சத்துக்கள் சேர்ந்தது
ஹார்லிக்ஸ் அதிக சக்தியை அளிக்கிறது!

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி




மூப்பத்தியொன்றும் அத்தியாயம்

பசும் பட்டாடை

மறுநாள் மாலையில் வந்தியத்தேவன் முதன் மந்திரி அநிருத்தரின் ஓலையுடன் அரிசிலாற்றங் கரையோடு குடந்தை நகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். குதிரையை விரட்டாமல் மெள்ளச் செலுத்திக் கொண்டு இருபுறமும் தோன்றிய இனிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டு போனான்.

ஐப்பசி மாதத்தின் ஆரம்பத்தில் சோழ வள நாடு பூரணப் பொலிவுடன் விளங்கிற்று. இயற்கை அரசி பச்சைப் பட்டாடை உடுத்தி நவ யௌவன சௌந்தரியத்துடன் திகழ்ந்தாள். அந்தப் பச்சைப் பட்டாடையில்தான் எத்தனை வித விதமான பசுமைச் சாயல்கள்! கழனிகளில் கதிர் விடுவதற்குத் தயாரா யிருந்த நெற் பயிர்கள் ஒரு சாயல்; நடவு நட்டுச் சில காலமாகியிருந்த இளம் பயிர்கள் இன்னொரு சாயல்; அப்போதுதான் நடவாகியிருந்த பசும் பொன்னிறப் பயிர்கள் வேறொரு சாயல்! ஆலமரத்தில் தழைத்திருந்த இலைகள் ஒரு பசுமை; அரச மரத்தில் குலுங்கிய இலைகள் இன்னொரு விதப் பசுமை; தடாகங்களில் கொழு கொழுவென்று படர்ந்திருந்த தாமரை இலைகளின் மோகனப் பசுமை; வாழை இலைகளின் கண் கவரும் பசுமை; தென்னங் குருத்துகளின் தந்த வர்ணப் பசுமை; பூமியில் இளம் புல்லின் பசுமை; ஓடைகளில் தெளிந்த நீரின் பசுமை; நீரில் அங்குமிங்கும் தத்திப் பாய்ந்த தவளைகளின் பசுமை.



இவ்வளவு விதவிதமான சாயல்கள் வாய்ந்த பச்சைப் பட்டாடையின் அழகைத் தூக்கிக் காட்டுவதற்கென்று நட்சத்திரப் பொட்டுக்கள் பதித்தது போல் குவளைகளும் குமுதங்களும் செந்தாமரை மலர்களும் செங்கழுநீர்ப் பூக்களும் ஆங்காங்கு ஜொலித்துக் கொண்டிருந்தன.

இந்த அழகையெல்லாம் வந்தியத்தேவன் இரு கண்களாலும் பருகிக் கொண்டு பிரயாணம் செய்தான். ஆடி மாதத்தில் அந்த வழியாக அவன் சென்ற போது பார்த்த காட்சிகளுக்கும் இப்போது காணும் காட்சிகளுக்கும் உள்ள வேற்றுமையை அவன் உணர்ந்திருந்தான். ஆடி மாதத்தில் ஆற்றில் புது வெள்ளம் நொங்கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது. இப்போதோ பிரவாகத்தின் வேகமும் கோபமும் தணிந்து, செந்நிறம் மாறி, பளிங்கு போல் தெளிந்து, உல்லாஸமாகப் பவனி சென்றது. புது வெள்ளத்தின் 'ஹோ' என்ற இரைச்சலும், மேலக் காற்று மரக்கிளைகளைத் தாக்கிய போது உண்டான பேரோசையும், ஆயிரமாயிரம் புள்ளினங்களின் கோலாகலத் தொனிகளும் அப்போது ஒரு மாபெருந் திருவிழாவின் ஆரவாரத்தைப் போல் கேட்டன. இன்றைக்கோ குளிர்ந்த வாடைக் காற்றில் இலைகள் அசைந்த மர்மர சத்தமும், மடைகளில் தண்ணீர் பாய்ந்த சலசலப்பு ஓசையும், மழையை எதிர்பார்த்த மண்டுகங்களின் சுருதி பேதக் குரல்களும், பலவகைச் சில்வண்டுகளின் ஸ்வர பேத ரீங்காரங்களும் சேர்ந்து இயற்கை மாதரசியின் சோக சங்கீத கோஷ்டிகானத்தைப் போல் ஒலித்துக் கொண்டிருந்தன.

வந்தியத்தேவனுடைய உள்ளத்திலும் அப்போது ஏதோ ஒருவகையான இனந் தெரியாத சோகமும் குடிகொண்டிருந்தது. இதன் காரணம் என்னவென்று யோசித்து யோசித்துப் பார்த்தும் அவனுக்குப் புலப்படவில்லை. உண்மையில் அவன் அபரிமிதமான உற்சாகம் கொள்வதற்கு வேண்டிய காரணங்கள் இருந்தன. இந்த வழியாக இரண்டு மாதங்களுக்கு முன்னால் போனபோது என்னென்ன மனோராஜ்யங்கள் செய்தானோ, அவ்வளவும் நிறைவேறி விட்டன. அவன் கனவிலும் நடக்கும் என்று கருதாத காரியங்



களும் நடந்தேறி விட்டன. சுந்தர சோழச் சக்கரவர்த்தியைத் தரிசித்தாகி விட்டது. தஞ்சாவூர், பழையாறை, மாதோட்டம், அநுராதபுரம் முதலிய மாபெரும் நகரங்களைப் பார்த்தாகி விட்டது. சோழ நாட்டின் கண்

ணுக்குக் கண்ணாக விளங்கிய பொன்னியின் செல்வனுடைய சிநேகம் கிடைத்து விட்டது; அந்த வீர இளவரசனுக்கு உதவி புரியும் பேறும் கிடைத்து விட்டது. தமிழகத்தின் அழகுத் தெய்வமும், சோழர் குல விளக்குமான அரசிளங்குமரி குந்தவையை ஒரு முறை பார்ப்பதற்கே எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும். அப்படியிருக்க அவளுடைய தூய இதயத்தின் நேயத்தைப் பெறுவதென்பது எத்தகைய பெறற்கரும் பாக்கியம்? அதை எண்ணியபோது அவன் உள்ளம் பெருமிதத்தினால் பொங்கியது. ஆனால் அந்தப் பெருமித குதூகலத்துடனே ஏதோ ஒரு வேதனையும் தொடர்ந்து வந்தது. அவ்வளவு பெரிய பாக்கியத்துக்கு நான் உண்மையில் உரியவன்தானா? அது நிலைத்து நிற்குமா? கைக்கு எட்டியது வாய்க்கெட்டுவதற்குள் எவ்வளவோ தடங்கல்கள் ஏற்படக் கூடும் அல்லவா?



ஆகா! தடங்கல்களுக்கு என்ன குறைவு? உலகமே தடங்கல் மயந்தான்! ரவிதாஸனைப் போன்ற மாய மந்திரவாதிகளும், நந்தினியைப் போன்ற மாய மோகினிகளும், பழுவேட்டரையர்களைப் போன்ற சதிகாரர்களும், கந்தமாறனையும் பார்த்திபேந்திரனையும் போன்ற சிநேகத் துரோகிகளும், பூங்குழலியையும் வானதியையும் போன்ற பித்துக்கொள்ளிப் பெண்களும், வீர வைஷ்ணவ ஒற்றர்களும், காளாமுக சைவர்களும், கொள்ளிவாய்ப் பேய்களும், ஆழந் தெரியாத புதை சேற்றுக் குழிகளும் நிறைந்த உலகமல்லவா இது? கடவுளே! மேற்கூறிய அபாயம் ஒவ்வொன்றிலிருந்தும் எப்படியோ இது வரை தப்பித்து வந்து விட்டேன்! அவை எல்லாவற்றையும்விடப் பெரும் அபாயகரமான காரியத்தில் இப்போது முதன் மந்திரி அநிருத்தர் என்னை ஏவியிருக்கிறார்! ஒரு பக்கத்தில், எளிதில் மூர்க்காவேசம் கொள்ளக்கூடிய ஆதித்த கரிகாலர்; மற்றொரு பக்கத்தில் பெரிய பழுவேட்டரையரைப் பொம்மையைப் போல் ஆட்டி வைக்கும் மாய சக்தி வாய்ந்த மோகினி; — இவர்களுடைய நோக்கத்துக்குக் குறுக்கே நின்று நான் தடை செய்து வெற்றி பெற வேண்டுமாம்! இது நடக்கக் கூடிய காரியமா? அந்தப் பிரம்மராயருடைய மனத்தில் என்னதான் உண்மையில் எண்ணியிருக்கிறாரோ தெரியாது! அரசிளங்குமரியிடமிருந்து என்னைப் பிரித்து விடுவதே அவருடைய நோக்கமா யிருக்கலாம் அல்லவா? ஆழ்வார்க்கடியான் வழியில் வந்து சேர்ந்து கொள்வான் என்று இருவரும் சொன்னார்கள்! அவனையும் இது வரையில் காணோம்! அந்த வீர வைஷ்ணவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் இதுவரையில் எனக்கு ஒரு கெடுதலும் செய்ததில்லை; பல முறை உதவிதான் புரிந்திருக்கிறான். அவனுடன் சேர்ந்து பிரயாணம் செய்தால், ஏதாவது உற்சாகமாகப் பேசிக்கொண்டிருப்பான். பிரயாணத்தில் அலுப்புத் தட்டாமல் இருக்கும். இனி எங்கே வந்து அவன் நம்முடன் சேர்ந்து கொள்ள முடியும்? அவனுக்காக எத்தனை நேரந்தான் இந்தக் குதிரையை இழுத்துப் பிடித்து மெள்ளச் செலுத்திக் கொண்டு போவது?....

ஆகா! அதோ கும்பலாயிருக்கும் மரங்கள்! நதி வெள்ளத்தில் முதலைகளைப் போல் கிடக்கும் அந்த வேர்கள்! இங்கேதான் பொம்மை முதலை மீது வேல் எறிந்த படலம் நடைபெற்றது! வாரிணியும் தாரகையும் செந்திருவும் மந்தாகினியும் நம்முடைய வீரச் செயலைப் பார்த்துக் கலகல வென்று சிரித்தது இவ்விடத்திலேதான்! அரசிளங்குமரி நமக்குப் பரிந்து அந்தப் பெண்களை அதட்டியதும் இதே இடத்தில் தான்! சற்று இங்கே நின்று பார்க்கலாம்!.....

வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து இறங்கி நதிக் கரையின் ஓரமாகச் சென்று நின்றான். மரத்தின் வேர்களைச் சுற்றிச் சுழற்றிச் சுழலிட்டுக் கொண்டு ஓடிய தெளிந்த நீர்ப் பிரவாகத்தைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.... ஆகா! அந்தச் சுழலில் ஒரு முகம் தெரிகிறது! அது யாருடைய முகம்? சொல்ல வேண்டுமா? அரசிளங்குமரி குந்தவைப் பிராட்டியின் இன்பப் பொன் முகந்தான்!....

"கண்டேன் கண்டேன் கண்டேன்
கண்ணுக்கினியன கண்டேன்!"

என்று பாடிய குரலைக் கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தான். உன்னதமான மரத்தின் உச்சாணிக் கிளை ஒன்றில் ஆழ்வார்க்கடியான் அமர்ந்திருப்பது தெரிந்தது.

"ஓகோ! வீர வைஷ்ணவரே! நான் உம்முடைய திருக் கண்களுக்கு அவ்வளவு இனியவனாக இருக்கிறேனா? நானும் உம்மைச் சிறிது நன்றாகப் பார்க்கிறேன். கீழே இறங்கி வருக!" என்று சொன்னான் வந்தியத்தேவன்.

வீர வைஷ்ணவன் மரத்திலிருந்து இறங்கியவண்ணம், "நான் உன்னைச் சொல்லவில்லை, அப்பனே! உடையில் வாளும் கையில் வேலும் ஏந்திய நீ என் கண்ணுக்குப் பயங்கரமாகவல்லவோ புலப்படுகிறாய்?" என்றான்.

"பிறகு, யாரைப் பற்றிச் சொன்னீர், வைஷ்ணவரே!"

"முழு முதற் கடவுளாகிய திருமால் வாமனாவதாரம் எடுத்து வந்து வானத்தை அளப்பதற்காக ஒரு பாதத்தைத் தூக்கிய போது உங்கள் சிவ பெருமானுடைய கண்களுக்கு...."

"வைஷ்ணவரே! நிறுத்தும்! இம் மாதிரியெல்லாம் சிவனைத் தாழ்த்திக் கூறுவதை நிறுத்திவிடும். இல்லாவிடில் பெரிய அபாயத்துக்கு உள்ளாவீர்!"

"என்ன அபாயம், அப்பனே! முதலையைக் கொன்று யானையைக் காத்த பெருமானின் சக்கரம் இருக்கும்போது என்னை யார் என்ன செய்ய முடியும்?"

"நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். அப்புறம் உமது இஷ்டம்."

"எனக்கு என்ன அபாயம் வருகிறது என்று சொல், தம்பி!"

"பழையாறையில் ஜனங்கள் கொந்தளித்து அரண்மனை வாசலுக்கு வந்

தார்கள் அல்லவா? அப்போது சில காளாமுகர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டேன்.''

''என்ன பேசிக் கொண்டார்கள்?''

''சோழ நாட்டில் பெருகி வரும் வீர வைஷ்ணவர்களை மகா காளிக்குப் பலி கொடுத்து, அவர்களுடைய மண்டை ஓடுகளைக் குவித்து அடுக்கி, அவற்றின் பேரில் நின்று ஆனந்தத் தாண்டவம் ஆட வேண்டும் என்று சொன்னார்கள்!''

ஆழ்வார்க்கடியான் தன் மண்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு, ''இது கெட்டியாகத்தான் இருக்கிறது! காளாமுகத் தாண்டவத்தைத் தாங்கக் கூடியதுதான்'' என்றான்.

''நான் கேள்விப்பட்டதற்குத் தகுந்தாற்போல் இன்றைக்கு நான் வரும் வழியெல்லாம் காளாமுகர்கள் மண்டை ஓடுகளையும் சூலாயுதங்களையும் தாங்கிக் கொண்டு அலைகிறார்கள். நீர் சிவனே என்று இந்த முன் குடுமி வேஷத்தை மாற்றிக் கொண்டு....''

''முடியாது, அப்பா, முடியாது!''

''என்ன முடியாது?''


''நீ சொன்னாயே, அந்தப் பெயரைச் சொல்ல முடியாது. 'விஷ்ணுவே!' என்று சொல்லி எனது வேஷத்தை மாற்றிக் கொண்டாலும் மாற்றிக் கொள்வேன்.... அதோ பார்!''

ஆற்றங்கரைச் சாலையில் அப்போது ஒரு பல்லக்கு போய்க் கொண்டிருந்தது. அதற்குள் ஒரு பெண்மணி இருப்பது தெரிந்தது. ஆனால் யார் என்று தெரியவில்லை. யாரோ ராஜ குலத்துப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். யாராயிருக்கும்? பல்லக்குச் சுமப்பவர்களைத் தவிர ஒரு தாதிப் பெண் பக்கத்தில் போய்க் கொண்டிருந்தாள். ஒருவேளை அரசிளங்குமரியாயிருக்கலாமோ! அப்படியிருக்க முடியாது.

''வைஷ்ணவரே! அந்தப் பல்லக்கில் இருப்பது யார் தெரியுமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''தம்பி! நான் சொல்வதைக் கேள். உனக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக் கொள்ளாதே! அதனால் பல தொல்லைகளை நீ ஏற்கனவே அநுபவித்திருக்கிறாய் அல்லவா! வழியோடு எத்தனையோ பேர் போவார்கள்; உனக்கு என்ன அதைப் பற்றி? குதிரை மேல் ஏறிக் கொள்; தட்டி விடு!'' என்றான்.

''ஓகோ! அப்படியா சமாசாரம்? வீர வைஷ்ணவர் இப்போது பெரிய வைராக்கியசாலி ஆகிவிட்டதாகத் தோன்றுகிறது. வீர நாராயணபுரத்தில் நடந்ததை மறந்து விட்டீரா? அங்கே மூடு பல்லக்கில் சென்ற பெண்



''குழாயில் பாம்பு வந்ததைத் தொடர்ந்து என் தண்ணீக் குழாயையும் இப்படி ஆக்கிட்டேன்!''

ணுக்கு ஓலை ஒன்றைச் சேர்ப்பிக்கும்படி நீர் எனக்குச் சொல்லவில்லையா?''

''அதெல்லாம் பழைய கதை! இப்போது எதற்கு எடுக்கிறாய்?''

''போனால் போகட்டும். நீர் என்னோடு வழியில் வந்து சேர்ந்து கொள்வீர் என்று சொன்னீர்கள். உமக்காகவே இத்தனை நேரம் மெள்ள மெள்ளக் குதிரையைச் செலுத்திக் கொண்டு வந்தேன். இனியாவது என்னோடு வரப் போகிறீரா, இல்லையா?''

''நீ குதிரையில் போகிறாய்! நான் கால்நடையாக வருகிறேன். நாம் எப்படிச் சேர்ந்து பிரயாணம் செய்ய முடியும். நீ கொள்ளிடக் கரையில் போயிரு. அங்கே நாளைக் காலையில் உன்னுடன் வந்து சேர்ந்து கொள்கிறேன்.''

ஆழ்வார்க்கடியான் வேறோர் இரகசிய வேலையில் ஈடுபட்டிருக்கிறான் என்றும், தன்னுடன் வரமாட்டான் என்றும் வந்தியத்தேவன் நிச்சயமடைந்தான். ''சரி! உமது இஷ்டம்!'' என்று கூறிக் குதிரை மீது தாவி ஏறிக் கொண்டான். தான் போகவேண்டிய திசையை நோக்கினான். வட கிழக்குத் திசையின் அடிவாரத்தில் கரிய மேகங்கள் திரள்வதைக் கண்டான்.

''வைஷ்ணவரே! இன்று மழை பெய்யுமா?'' என்று கேட்டான்.

''அப்பனே! எனக்கு என்ன ஜோசியமா தெரியும்? ஐப்பசி பிறந்துவிட்டதல்லவா? மழை பெய்தாலும் பெய்யும். நீ எல்லாவற்றுக்கும் சீக்கிரமாகக் குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு போ! இராத்திரி தங்குவதற்கு ஏதேனும் ஒரு சத்திரம் சாவடியைப் பார்த்துக் கொள்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

வந்தியத்தேவன் அவ்விதமே குதிரையைத் தட்டி விட்டான். ''எனக்கு என்ன ஜோசியமா தெரியும்?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டது அவனுடைய மனத்தில் பதிந்திருந்தது. அதிலிருந்து குடந்தை ஜோதிடரின் நினைவு வந்தது. போகும் வழியிலேதான் அந்தச் சோதிடரின் வீடு இருக்கிறது. அவரைப் பார்த்து விட்டுப் போனால் என்ன? சோழ சிங்காதனம் ஏற ஆசைப்படுகிறவர்களுக்குள்ளே யாருக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கப் போகிறது? பொன்னியின் செல்வரைத் துருவ நட்சத்திரத்துக்குச் சமமானவர் என்று குடந்தை சோதிடர் சொன்னாரல்லவா? அவரோ இராஜ்யம் ஆளுவதில் மனத்தைச் செலுத்தவே மறுக்கிறார்! இலங்கைச் சிம்மாதனத்தையும் மணிமகுடத்தையும் எவ்வளவு அநாயாசமாக மறுதளித்தார்? அவருக்குப் பல கண்டங்கள் நேரிடுமென்று சோதிடர் கூறியது ஓரளவு பலித்துத்தான் இருக்கிறது. அது போலவே வருங்காலத்தில் அவர் மகோந்நதம் பெற்று விளங்குவார் என்பதும் பலிக்குமா? அது எப்படிச் சாத்தியமாகக் கூடும்?.... என்னுடைய வாழ்க்கைக் கனவுகள்தான் எவ்வளவு தூரம் பலிக்கப் போகின்றன. என் முன்னோர்கள் காலத்தில் இழந்துவிட்ட இராஜ்யம் திரும்பக் கிடைக்குமா? நான் இப்போது எதற்காகப் புறப்பட்டிருக்கிறேனோ, அது எவ்வளவு தூரம் நிறைவேறும்? ஆதித்த கரிகாலர், நந்தினி, — இவர்களுக்குக் குறுக்கே நின்று தான் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியுமா? இது வரையில் இரண்டு மூன்று தடவை நந்தினியிடம் சிக்கிக் கொண்டு தப்பிப் பிழைத்தோம்! மறுபடியும் அது முடியுமா? பழுவூர் இளைய ராணியை எண்ணிய போது வந்தியத்தேவனுடைய மனத்தில் ஒரு திகில் உண்டாயிற்று. அவள் அவனிடம் மிக்க பிரியமும் மரியாதையும் காட்டிப் பேசியதென்னவோ உண்மைதான்! ஆனால் அவள் உள்ளத்தை அவனால் அறிய முடியவில்லை. ஏதோ ஒரு முக்கிய காரிய நிமித்தமாக அவனை அவள் விட்டு வைத்திருப்பதாகவே தோன்றியது. அதனாலேயே வந்தியத்தேவனிடம் அவள் அவ்வளவு பொறுமையாக இருந்திருக்கிறாள். அது என்ன காரியமாக இருக்கும்?

வந்தியத்தேவனுடைய குதிரை சற்று முன் அந்த வழியே சென்ற பல்லக்கைத் தாண்டிச் சென்றது. இம்முறை அவன் பல்லக்கை மோதவும் விரும்பவில்லை. பல்லக்கு அவனை மோதவும் இஷ்டப்படவில்லை. ஆனால் குதிரை பல்லக்கைத் தாண்டிய போது பல்லக்கின் திரை சிறிது விலகியது. உள்ளே வீற்றிருந்த பெண் கொடும்பாளூர் இளவரசி வானதி என்பதை அறிந்து கொண்டான். குதிரையை நிறுத்தலாமா என்று ஒரு கணம் யோசித்தான். பிறகு அதை மாற்றிக் கொண்டு மேலே சென்றான். வானதியைப் பற்றி இளைய பிராட்டி கூறியது நினைவு வந்தது. நாலு புறமும் அபாயங்கள் சூழ்ந்த இக்காலத்தில் கொடும்பாளூர் இளவரசி தனியாக எங்கே புறப்பட்டாள்? தகுந்த பாதுகாப்புக்கூட இல்லையே? அதோடு இன்னொரு விசித்திரத்தையும் அவன் கண்டான். சற்றுத் தூரத்திலிருந்து பயங்கரத் தோற்றமுடைய இரண்டு காளாமுக சைவர்கள் வானதியின் பல்லக்கை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் எதற்காக அப்படிப் பார்க்கிறார்கள்? அவர்கள் இரண்டு பேரும் யார்? அரிச்சந்திர நதிக் கரையில் தான் படுத்துறங்கிய போது தன் பக்கத்தில் வந்து நின்று பேசியவர்கள் அல்லவா?


வானதியிடம் வந்தியத்தேவனுக்கு அவ்வளவு அனுதாபம் இல்லை என்பது உண்மையே. பொன்னியின் செல்வருடைய உள்ளத்தில் பூங்குழலி பெற வேண்டிய இடத்தை வானதி அபகரிக்க விரும்புவதாகவே அவன் எண்ணினான். அதனால் அவள் பேரில் கோபம் கொண்டிருந்தான். ஆனாலும் இளையபிராட்டி அவளிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தாள் என்பதை அவனால் மறக்க முடியவில்லை. எனவே, வானதிக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் இளையபிராட்டி அதனால் அளவில்லாத துன்பம் அடைவாள். ஆனால் அபாயம் எதற்காக நேர வேண்டும்? ''சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக் கொள்ளாதே! உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போ'' என்று ஆழ்வார்க்கடியான் கூறிய புத்திமதி நியாயமானதுதான். ஆயினும், வானதியின் பல்லக்கு சென்றதைக் காளாமுகர்கள் இருவர் மறைவான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டு நின்ற காட்சி திரும்பத் திரும்ப அவன் ஞாபகத்துக்கு வந்து கொண்டிருந்தது.

இதோ குடந்தை ஜோதிடரின் வீடு வந்துவிட்டது! எல்லாவற்றுக்கும் அவரைக் கேட்டுப் பார்க்கலாம்...அடடே! இத்தனை நேரம் அந்த விஷயம் மூளைக்கு எட்டவில்லையே? வானதி தேவியும் குடந்தை சோதிடர் வீட்டுக்குத்தான் வருகிறாள் போலும்! பழம் நழுவிப் பாலில் விழுந்தது! வானதி வந்து சேர்வதற்குள் நம்முடைய காரியத்தையும் நாம் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு எண்ணிச் சோதிடர் வீட்டு வாசலில் குதிரையை நிறுத்தி விட்டு வந்தியத்தேவன் அந்தச் சிறிய வீட்டுக்குள் நுழைந்தான். **(தொடரும்)**

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி



20

சத்திய மார்க்கம் எவ்வாறு கத்தி முனை போன்றதோ, அவ்வாறே அஹிம்ஸா மார்க்கமும். இழுத்துக் கட்டிய கயிற்றின் மேல் ஆட்டக்காரன் சாமர்த்தியமாக நடக்கிறான். அப்பியாசத்தினால் இந்தக் கஷ்டமான காரியத்தைச் செய்யப் பயில்கிறான். சத்தியமும் அஹிம்சையும் கூடிய மார்க்கத்தில் வழி பிசகாமல் நடப்பதற்கு அதைவிட அதிகமான பயிற்சி வேண்டும். இடைவிடாத கவனம் வேண்டும். அஹிம்சை என்றால் பிறரை அடிக்கலாகாது குத்தலாகாது என்று மட்டும் அல்ல. அது சாமானியம். 'இன்னா செய்யாமை' என்றால் எந்த விதத்திலும் புண்படுத்தலாகாது என்பது. வெறுப்பும் தூஷணையும் தேகத்திலே உண்டாக்கிய புண்ணைப் போலவே ஆகும். பொய்யும் அடக்கம் அற்ற காரியமும், பகை எண்ணமும், அசூயையும், பொருள் நசையும், எல்லாமுமே இன்னா செய்ததாகும். இவை அனைத்தையும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு எந்த உயிருக்கும் எந்த நோவும் உண்டாக்காமல் பிழைக்க இயலுமா? இயலாது.

நாம் உண்ணும் உணவும் கூடப் பிற உயிர்களுக்கு ஆக வேண்டியதை நாம் எடுத்துக் கொண்டதாகும். நாம் நடக்கும் பாதையில் கண்ணுக்குக் காணப்படாத அநேக கிருமிகளை நாசம் செய்கிறோம். உயிரை விட்டு விட்டாலே தான் இந்த ஹிம்சைகளைச் செய்யாமல் தவிர்க்க முடியும். உயிரை விட்டாலுமே என்ன? உயிரை நாம் அழிக்க முடியாது. அது வேறு உடலைத் தேடிச் செல்லும். உடலை நீப்பது தற்கொலையால் முடியாது. வேறு உடல் அந்த உயிருக்குக் காத்திருக்கிறது. உடலைப் பற்றி நிற்கும் பற்றுக்களை நீக்கினாலே தான் உடலை நீத்ததாகும். பற்றுக்களை அறவே நீப்பது கடவுளைக் காண்பதே ஆகும். இது அவசரத்தில் முடியுமா? முடியாது. இந்த உடல் நமது என்று எண்ணுவது பிரமை. அது நமதல்ல. அது நம்மிடம் இருக்கும் அளவு அதைச் சரியாகப் பரிபாலிக்க வேண்டியது. அவ்வளவே. உடலையும் உடலுக்கு வேண்டிய எல்லாவற்றையுமே இந்த முறையில் பரிபாலித்து வந்தால் உடலின் பாரம் ஒரு காலம் நீங்கும். நமக்குள்ள சக்தியைக் கொண்டு உடலுக்கு ஏற்பட்டிருக்கும் வரம்புகளை உணர்ந்து இடையறாத முயற்சி செய்ய வேண்டும்.

அஹிம்சையும் சத்தியமும் பின்னிப் பிணைந்து நிற்கிறபடியால் அவற்றை ஒன்றினின்று மற்றொன்றை வேறுபடுத்த முடியாது. தட்டிப் பார்க்கும் ஒரு ரூபாயின் முன்புறம் பின்புறம்போல் இரண்டும் சேர்ந்ததே ஒரு பொருள். எது முன்புறம் எது பின்புறம் என்று கூடச் சொல்ல முடியாது. அஹிம்சை முக்கியமா, சத்தியம் முக்கியமா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. சத்தியமே முடிவு. அஹிம்சையே மார்க்கம். ஒரு முடிவை அடைவதற்கு ஒரு சாதனம் கண்டால் அந்தச் சாதனம் இடைவிடாத அப்பியாசத்தில் இருக்க வேண்டும். ஆனபடியால் அஹிம்சையே வாழ்க்கையின் பிரதான கடமையாகிவிடுகிறது. சாதனத்தைக் கவனித்தோமானால் முடிவை அடைவது நிச்சயம். என்ன இடையூறு நேர்ந்தாலும், என்ன கஷ்டங்களைக் கண்டாலும் தோல்விகளை அனுபவித்தாலும் முறையைக் கைவிடலாகாது.

(எரவாடா சிறையில் எழுதியது.)

இன்னா செய்யாமை என்பது பெருஞ் சக்தியாகும். எதிர்மறை மொழித் தொடராயினும், அது ஒரு சக்தியின் கருமூலமாகும். நமக்குள் மறைந்து நிற்கும் பரம்பொருளின் சக்தியாகும். உயிருக்குள்ள ஆத்ம சக்தியாகும். அந்தச் சக்தியின் முழு வடிவத்தை நாம் காணப் பெறவில்லை. கண்டால் அதன் ஜோதி வேகத்தைத் தாங்க மாட்டோம். ஒரு சிறிதளவேனும் அது நம்முள்ளிருந்து வேலை செய்ய ஆரம்பித்தால் வியப்புக்கு உரிய காரியங்கள் நடைபெறும். ஆகாயத்தில் நிற்கும் சூரியனுடைய ஒளி உலகம் முழுதும் பரவி உயிர் கொடுப்பது போல், பராசக்தியில் ஒரு சிறு பாகமான நம்முடைய அஹிம்சை, வியப்புக்குரிய வேலை செய்யும். சூரியனண்டை நெருங்கினால் எரிந்து போவோம். அது போல் நாமும் அஹிம்சையைப் பூரணமாக அடைய முடியாது. பராசக்தியாக நாம் ஆகிவிட முடியாது. ஓரளவு நெருங்கலாம். அவ்வளவே. ஒரு துகள் ரேடியம் என்கிற தாதுப்பொருள் புற்று நோயில் உண்டாகும் விஷச் சதையைத் தீர்ப்பது போல் ஓரளவு அஹிம்சையும் சமுதாயத்திலுள்ள புற்றுநோயை யாரும் காணாமல் வேலை செய்து தீர்க்கும்.

(ஹரிஜன் 12-11-1938)



2066 சீதாலக்ஷ்மிகள்!



இரண்டாயிரத்து அறுபத்தி ஆறு பெண் மணிகளுக்கு முன்னால் என்னை மேடை ஏற்றி விட்டார் திரு என். ராமஸ்வாமி அய்யர். திணறிப் போனேன். 'வீட்டில் ஒரு பெண் மணியிடம் பேசிச் சமாளிக்க முடியவில்லையே; இத்தனை ஆயிரம் பெண்மணிகளிடம் எப்படிப் பேசிச் சமாளிக்கப் போகிறோம்' என்ற திகில் என்னைப் பற்றிக் கொண்டது.

"கஜவதன கருணா சதன...."

சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரியில் சங்கீதத்தில் பி. ஏ. பட்டம் பெறப் போகிற மாணவிகள் சிலர் ஒவ்வோர் அடியாகப் பாட மற்ற இரண்டாயிரத்துச் சொச்சம் மாணவிகளும் ஒரே குரலில் கணீரென்று அதைத் திருப்பிப் பாடினார்கள். திருச்சியிலேயே மிகப் பெரிய அரங்கமான இந்தக் கல்லூரியின் அகிலாண்டேசுவரி ஹாலில் வரிசை வரிசையாக மாணவிகள் நின்று பாடியது கண்கொள்ளாக் காட்சி என்றால் அது நூற்றுக்கு நூறு உண்மை. அத்தனை மாணவிகளும் ஒரே சமயத்தில் நமது கண் வீச்சுக்குள் அடங்க முடியாதுதான்!

பிரார்த்தனை நேரம் முடிந்ததும், "பேசுகிறீர்களா?" என்று திரு ராமஸ்வாமி என்னைப் பார்த்துப் பயமுறுத்தினார். அப்போது என் முகம் ரொம்பக் கலவரமடைந்து காணப்பட்டிருக்க வேண்டும். கல்லூரி முதல்வர் காமாட்சி இருந்த பக்கமாகத் திரும்பி, "எல்லாரையும் வகுப்புகளுக்கு அனுப்பி விடு" என்றார். 'பிழைத்தேன்' என்று எண்ணிக் கொண்டேன்.



□ கல்லூரிக்குள் கோயில்.

□ ராமஸ்வாமி அய்யரை வாழ்த்தி, பள்ளிக்கு வரவேற்று அழைத்துச் செல்லும் சாவித்திரி வித்தியாசாலை மாணவிகள்.

□ சீதாலக்ஷ்மி கல்லூரிக்கு ஸ்ரீ வி. வி. கிரி விஜயம் செய்த போது.





□ 2066 சீதா லக்ஷ்மிகள்- ஒரு பகுதி.



□ வீணை வகுப்பு.





இந்தக் கல்லூரியில் உள்ள மூன்று மாடிக் கட்டிடங்கள் எல்லாம் பலமான அஸ்திவாரத்தில் அமைந்துள்ளன என்பதை அவற்றைப் பார்க்கும் எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். அதே போல் இறை உணர்ச்சி என்ற பலமான அஸ்திவாரத்தின் மீது கல்விக் கட்டிடம் எழும்பியிருக்கிறது இங்கே.

கல்லூரிக்குள்ளேயே ஒரு கோயில். சீதாலட்சுமண சமேதராய் ராமபிரான் காட்சி தருகிறார். இப்பால் பக்தனுக்குப் பக்தனாக அனுமனின் அடக்கமான திருவுருவம். இவற்றுக்கு முன்னால் காஞ்சி பெரியவாள் அனுப்பித் தந்த விநாயகரின் சலவைக் கல் சிலை.

''கல்லூரிக்குள் கோயிலா? செக்குலர் ஸ்டேட் ஆச்சே?'' என்று சிலர் ராமஸ்வாமியிடம் வந்து சந்தேகத்துடன் கேட்டதுண்டு. அவர்களுக்குப் பதில் சொல்லாமல் ராமஸ்வாமி அய்யர் திருச்சியில் அமைந்துள்ள இரு பிரபலமான சிகரங்களைக் கட்டிக் காட்டி விடுவார். ஒன்று உச்சிப் பிள்ளையார் கோயில்; மற்றொன்று செயிண்ட் ஜோஸப் கல்லூரியின் மாதா கோயில். 'மதச்சார்பற்ற அரசு' என்பதற்குச் சரியான அர்த்தம் தெரியாமல் பேசியவர்கள் தெளிவு பெற்றுத் திரும்பி விடுவார்கள்.

''இந்தக் கல்லூரி உருவான கதையைச் சொல்லுங்கள்'' என்று ராமஸ்வாமி அய்யரைக் கேட்டேன். அவர் நிஜமாகவே ஒரு கதை சொல்ல ஆரம்பித்து விட்டார்.

'' 'அகப்பட்டு விட்டது ஒரு வாடம்; இன்னும் மூன்று வாடங்களும் ஒரு குதிரையும் கிடைத்தால் நான் குதிரை சவாரி செய்வேன்' என்று ஒருவன் சொன்னானாம். அந்தக் கதை தெரியுமில்லையா உங்களுக்கு? சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி உருவானதும் அதைப் போன்ற கதைதான்'' என்று தொடங்கினார் அவர்.

அந்தக் காலத்தில் ராமஸ்வாமி அய்யர் பி.ஏ., பி.எல்., ஜில்லாவின் பல மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளுக்கும் மாட்டு வண்டியிலும் கால்நடையாகவும் வழக்காடப் போவார். வேட்டியை உயர்த்திக் கட்டி, செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு சேறு, சகதியையும்,

□ பத்மஸ்ரீ ராமஸ்வாமி அய்யர்

□ தந்தையின் அடிச்சுவட்டில் சென்று கல்வித் தாபனத்தின் மானேஜிங் டிரஸ்டியாக இயங்கி வரும் திரு ஆர். பஞ்சாப கேசன் பி. எஸ்ஸி., பி. எல்.

□ கல்லூரியின் முதல்வர் வி. காமாட்சி, எம்.ஏ., பி. டி.

சென்னை பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் இஞ்சினியரிங் பிரிவில் டாக்டர் பட்டம் பெற்றவர் 'நியூட்டன்'. சந்தேக மிருந்தால் 21 ம் பக்கம் புரட்டவும்!

வாய்க்கால் வரப்பையும் கடந்து செல்வதும் உண்டு. பிரபல கிரிமினல் லாயர். கிரிமினல் லாயரைத் தேடிக்கொண்டு எப்படிப்பட்டவர்கள் வருவார்களோ அப்படிப்பட்டவர்கள் தான் ராமஸ்வாமி அய்யரையும் தேடிக் கொண்டு வந்தார்கள். "எதற்கு இந்த உத்தியோகம்? கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் கட்டிக் கொண்டு அழுகிற வேலை?" என்று சில நண்பர்கள் அவரிடம் வெறுத்துரைத்தார்கள்.

"யாராவது காந்தியவாதி மீதோ அல்லது மடாதிபதி மீதோ போலீஸார் கிரிமினல் வழக்குத் தொடர்ந்தால் நான் அவர்களுக்காக வழக்காடத் தயார்தான்; ஆனால் அப்படி நேர்வதில்லையே என்ன செய்ய?" என்று பதில் சொன்னார் ராமஸ்வாமி.

அன்றைக்கு எப்படி நறுக்குத் தெறித்தாற்போல் பேசினாரோ, அப்படியேதான் இன்றும் தமது எழுபத்தி நாலாவது வயதிலும் பேசுகிறார்.

குற்றம் சாட்டப்பட்டவனுக்காக வழக்காடவேண்டியது தமது கடமை என்ற அளவில் அயராது உழைத்த அவர், சமூகத்துக்குப் பணியாற்றவும் தயங்காது முன்வந்தார். இவரது சமூக சேவைகளைப் பாராட்டி ராவ் சாகேப், ராவ்பகதூர் ஆகிய பட்டங்களை அன்றைய பிரிட்டிஷ் அரசு வழங்கிக் கௌரவித்தது. சுதந்திர பாரத அரசு சும்மா விடுமா? அதுவும் தன் பங்குக்கு ஒரு பத்மபூஷணை அளித்தது.

இவரது சேவா மனப்பான்மை பிரசித்தி பெறத் தொடங்கியதும் திருச்சியிலிருந்த சில பெரிய மனிதர்கள் பொறுமைப்படாமல் ரொம்பச் சந்தோஷப்பட்டார்கள். ஏனெனில் அப்போது சாவித்திரி வித்தியாசாலை என்ற பெயர் கொண்ட ஒரு பெண்கள் பள்ளிக்கூடம் தனது பெயருக்குப் பொருத்தமில்லாத விதத்தில் மடிந்து போகத் தயாராகிக் கொண்டிருந்தது! இந்தப் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பை ராமஸ்வாமி அய்யர் தலையில் கட்டினால் அதை உயிர்ப்பித்துதாருமென்பது அந்தப் பெரிய மனிதர்களுக்குத் தெரியும்!

1938ல் ராமஸ்வாமி அய்யர் 30 செண்ட் நிலத்தில் சாவித்திரி வித்தியாசாலைக்குக் கட்டிடம் அமைத்து அதைத் திறந்து வைக்க அன்றைய சென்னை மாகாணப் பிரதம மந்திரி ராஜாஜியை அழைத்து வந்தார். கதவுகளோ ஜன்னல்களோ இல்லாமல் ஏற்கெனவே திறந்து கிடந்த அந்தக் கட்டிடத்தை ராஜாஜி திறந்து வைத்தார்!

ராமஸ்வாமி அய்யர் பொறுப்பேற்றுக் கொண்ட வேளை, ராஜாஜி கட்டிடத்தைத் திறந்து வைத்த முகூர்த்தம் — இன்று அப்பள்ளி கல்லூரியாகவும் வளர்ந்து முப்பத்திரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் எழுபத்தைந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்தையும் பெற்றிருக்கிறது! பதினோரு மாணவிகளுடன் தொடங்கியது சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி. அன்று சேர மாணவிகள் முன் வரவில்லை; இன்று கல்லூரியில் இடமில்லை!

இத்தனைக்கும் இந்தக் கல்லூரியில்தான் எத்தனை கட்டிடங்கள்! தெருவில் நின்று பார்க்கும்போது ஏதோ சின்ன இடம் என்று எண்ணும்படி இருக்கிறது. உள்ளே போனாலோ, கட்டிடம், கட்டிடத்துக்குப் பின்னால் கட்டிடம், பக்கவாட்டில் கட்டிடம், அதற்குப் பின்னால் கட்டிடம் என்று பலப்பல, பல மாடிக் கட்டிடங்கள் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. கல்லூரியின் எட்டுக் கட்டிடங்கள் தவிர, மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்குமாக ஒன்பது ஹாஸ்டல்கள். மேலும் இரண்டு கட்டிடங்கள் இப்போது எழுப்பப்பட்டு வருகின்றன.

சில வருஷங்களுக்கு முன்னால் கீத்துக் கொட்டகைகளில் நடந்த வகுப்புக்கள் இன்று சிமெண்ட் கட்டிடத்தில் நடக்குமளவுக்கு முன்னேறியும்கூடத் திரு ராமஸ்வாமிக்குத் திருப்தியில்லை. 'போஸ்ட் க்ராஜுவேட்' ஆராய்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; பெண்களுக்கான ஒரு சர்வகலாசாலையாகவே இது உரு மாற வேண்டும். அதற்கு ஒரு பெண்மணியே துணைவேந்தராக நியமிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகிறார்.

"அளவுக்கு மீறிய ஆசையோ" என்றால், உடனே, "சுயநலனுக்கு நான் ஆசைப்படக் கூடாது; பெண் கல்வி வளர வேண்டும் என்று ஆர்வம் காட்டுவதில் தவறென்ன?" என்கிறார்.

சட்ட நிபுணர்; வழக்காடி வழக்காடி உரமேறிய நெஞ்சினர்; வாசாலமாகப் பேசும் திறன் படைத்தவர் — இந்த இயல்புகளெல்லாம் சென்னை பல்கலைக் கழகத்துடன் போராடிக் காரியங்களைச் சாதித்துக்கொள்ளப் பெரிதும் துணை புரிந்திருக்கின்றன.

பெண் கல்வி வளர வேண்டும் என்பதோடு கல்வித் தரமும் உயர வேண்டும் என்று இவர் விரும்புவது கல்லூரி ஆண்டு மலருக்கு இவர் வழங்கியுள்ள ஒரு கட்டுரையிலிருந்து தெரிகிறது. அந்தக் காலத்தையும் பார்த்துள்ள இந்தக் காலத்து மனிதர்கள் பலருக்கும் இப்படித் தோன்றுவது இயல்பே. ராஜாஜி ஓரிடத்தில் எழுதுகிறார்:

"1894ல் நான் சென்னை சர்வகலாசாலையில் பௌதிகமும் ரசாயனமும் படிக்க ஆரம்பித்தபோது ஏற்கெனவே, ஜூக்ஸிட் எழுதிய மூன்று புத்தகங்கள், பௌதிகம் ரசாயனம் ஆகியவற்றின் ஆரம்ப நிலை நூல்கள், டி. எச். ஹக்ஸ்லியின் மனித சரீர சாஸ்திரம் பற்றிய நூல், ஸ்மித் எழுதிய கிரேக்க, ரோமானிய சரித்திரங்கள், இந்திய பிரிட்டிஷ் சரித்திரங்கள் ஆகியவற்றைப் படித்தறிந்திருந்ததுடன் அல்ஜிப்ரா, ட்ரிக்னமெட்ரி ஆகியவற்றிலும் கணிசமான அளவு முன்னேறியிருந்தேன். குறிப்பிட்ட ஒரு துறையில் விசேஷக் கல்வி பெறத் தொடங்கு முன்னர் நன்கு படித்தறிந்திருக்க இணைனு விருந்தேன்...."


ஜெகசிற்பியன் எழுதும்
திய சமூக நாவல்
காணக் கிடைக்காத தங்கம்!
4-1970
மிழ்ப் புத்தாண்டு மலரில் ஆரம்பமாகிறது

ஒரு வயதுக்குள் உங்கள் குழந்தையின் பிறப்பு எடை மும் மடங்கினும் மேலாகப் பெருக விரும்பினீர்களானால்...



சுயேச்சையான டாக்டர்கள் தரும் இந்த அறிக்கையைப் படியுங்கள்

எல்லாக் குழந்தைகளுக்கும் லீவர்ஸ் குழந்தை உணவு தரப்பட்டது...நம்மவர் குழந்தைகள், ஐரோப்பிய, அமெரிக்கக் குழந்தைகளுக்கு ஈடான வளர்ச்சியை நிரூபித்தன... 5-6 மாதங்களிலே எடை இரு மடங்குக்கு மேலாகியது, ஒரு வயதிற்குள் மும் மடங்கை மிஞ்சிவிட்டது.'

பாரத நாட்டுக் குழந்தைகளுக்கென்றே ஆக்கம்பெற்றது லீவர்ஸ் குழந்தை உணவு.

*அறிக்கையின் ஒரு பகுதியே இது. முழு அறிக்கையின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள் : நியூ ஃபுட்ஸ், இந்துஸ்தான் லீவர் லிமிடெட்., போஸ்ட் பாக்ஸ் 995, பம்பாய்-1.

லீவர்ஸ் குழந்தை உணவு



தலைசிறந்த டாக்டர்களால் தகுதி நிரூபணம் பெற்ற பாலுணவு

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

இந்த அளவுக்குக் கல்வித் தரம் இன்றைக்கு எங்கே இருக்கிறது?

இந்தக் கல்லூரியின் ஆண்டு மலரைப் புரட்டிக்கொண்டே வரும்போது இங்கு படிக்கும் மாணவியர் பரீட்சையில் தேறுவது மட்டுமின்றிப் பொது அறிவை விருத்தி செய்து கொள்வதிலும் கவனம் செலுத்துவது புலனாகிறது. ஒழுக்கம், இறையுணர்ச்சி ஆகியவற்றில் காந்திக்கு இருந்த நம்பிக்கை, ஆங்கிலத்தின் முக்கியத்வம், நாட்டின் பொருளாதார நிலை போன்ற பல விஷயங்களையும் பற்றிய கட்டுரைகளுடன் 'வெற்றிகரமான இல்வாழ்க்கை' என்பது பற்றியும் ஒரு கட்டுரை இடம் பெற்றிருக்கிறது! அதையொட்டி ஆசிரியைகள், மாணவிகள் பலர் தங்கள் கணவன்மார்களுடனும் குழந்தைகளுடனும் எடுத்துக் கொண்ட படங்களையும் பிரசுரித்திருக்கிறார்கள்! இந்த யதார்த்த நோக்கு வரவேற்கத் தக்கதல்லவா?

பரீட்சைகளிலோ மாணவிகள் அநாயாசமாகத் தேறுகிறார்கள். எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் நூறு சத விகிதம், தொண்ணூற்றெட்டு சதவிகிதம் என்ற ரீதியில் தான் தேறிய மாணவிகளின் எண்ணிக்கை அமைந்திருக்கிறது.

வெறுங்கையால் முழம் போடுவதுபோல் இல்லாமல், 1951ல் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிக்கு ராமஸ்வாமி அய்யர் தமது நிலபுலன்களையும் செல்வத்தையும் ஓரளவு கொடுத்தார். ஆனால் அவை எந்த மூலைக்கு? இத்தனை குறுகிய கால அளவில் கல்லூரி இவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் ராமஸ்வாமி அய்யர் கூசாமல் பலரிடம் போய்க் கையேந்துவதுதான். டால்மியா கொடுத்த ஒரு பெருந் தொகை தவிர மற்றவையெல்லாம் ஐந்து, பத்து, நூறு என்று சிறுகச் சிறுக வந்த தொகைகளே. அவைதாம் இன்று பெரிய பெரிய கட்டிடங்களாகவும் பரிசோதனைச் சாலை உபகரணங்களாகவும் உருமாறி இருக்கின்றன.

இடையில் சில சந்தர்ப்பங்களில் அவருக்கு அலுப்பு, சலிப்பு ஏற்படாமல் போகவில்லை. ஆனால் அதிசயம் என்னவென்றால், அப்படிப்பட்ட நிலையிலும் அவரால் கல்லூரிக்கு உழைப்பதை நிறுத்த முடியவில்லை. அவர் வாழ்க்கையின் ஓர் அங்கமாகி விட்டது இந்தக் கல்வி நிறுவனம். 'சரி, இது அகிலாண்டேசுவரி சித்தம். இதை நமது ஐந்தாவது குழந்தையாகப் பாவித்துப் பராமரித்து வரவேண்டியதுதான்' என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

''மாணவிகள் தங்கியிருக்க வசதி செய்யாமல், பரீட்சையில் தேறியவர்களுக்குப் பட்டமளிப்பதுடன் திருப்தி அடையும் ஒரு பல்கலைக் கழகம் உயர்ந்ததா அல்லது பேராசிரியர்களோ பரீட்சைகளோ இல்லாமல் பல இளைஞர்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்துப் பல்வேறு விஞ்ஞான விஷயங்களைப் பற்றி மூன்று அல்லது நான்கு வருஷங்கள்வரை அவர்கள் உரையாடிக் கொண்டிருக்க வழி செய்து தரும் ஓர் அமைப்பு உயர்ந்ததா என்று கேட்டால் பின்னதே சிறந்தது என்று தயக்கமின்றிக் கூறுவேன்.'' இப்படி கார்டினல் நியூமன் சொன்னதாக சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி முதல்வர் காமாட்சி கல்லூரி ஆண்டு மலரில் எழுதியிருக்கிறார். இந்தக் கொள்கைக்கு அநுசரணையாகவே ஐம்பத்தைந்து சத விகிதம் மாணவிகள் இங்கு ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறார்கள். சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வேறு எந்தப் பெண்கள் கல்லூரியிலும் இந்த அளவுக்கு ஹாஸ்டல் மாணவியர் கிடையாது.

கல்லூரியைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வரும்போது சுற்றிலும் வேலி போடப்பட்ட சிறு தோட்டம் நம் கண்ணைக் கவருகிறது.

''இதுதான் காமகோடி பார்க்'' என்கிறார் ராமஸ்வாமி.

நம் முகத்தில் ஒரு கேள்விக் குறி தோன்றுகிறது. திரு ராமஸ்வாமி தொடருகிறார்:

''ஆமாம், ஆசார்யாள் இங்கு வந்திருந்தார்கள். அப்போது பூந்தொட்டிகள் சில இரவல் வாங்கிக் கொண்டு வந்து வைத்திருந்தேன்.

'' 'நான் போனதும் இந்தச் செடிகளும் போய்விடுமோ?' என்றார் ஆசார்யாள்.

''அது போதாதா, அவர் மனத்தைப் புரிந்து கொள்ள? தொட்டிகள் சென்றன. ஆனால் அவற்றுக்குப் பதில் வேறு புதிய செடிகள் வந்தன. காமகோடி பார்க் உருவாக்கினேன். பிறிதொரு சமயம் ஆசார்யாளைத் தரிசிக்க நேர்ந்தபோது, 'சரக்கொன்றை பூத்துக் குலுங்குவதை நீங்கள் பார்க்க வேண்டும்' என்றேன்.

'' 'அடாடா! அம்பாளுக்கு மஞ்சள் பாவாடை அணிவித்தது போலிருக்குமே!' என்றார் பரவசத்துடன்.''

இதைக் கேட்டுக் கொண்டே நடக்கும் நமக்கு மெய் சிலிர்க்கிறது.

ஆசார்யாளின் அருள் பார்வை இந்தக் கல்லூரி மேல் பட்டு விட்டது. கல்லூரியின் பெயரே லட்சுமிகரமாகப் பொருந்தியிருக்கிறது. மேலும் மேலும் இந்த நிறுவனம் வளரக் கேட்பானேன்?

இந்த வளர்ச்சிக்கு அநுசரணையாக சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் உதவிக் கச்சேரி இம்மாதம் 15ந் தேதி சீதாலக்ஷ்மி கல்லூரியில் விசேஷமாக அமைக்கப்பட்ட பந்தலில் நடைபெறுகிறது. ரசிகப் பெருமக்கள் கலைத்தேவியைத் திருப்திசெய்து திருமகளின் அருள்பெற ஓர் அரிய வாய்ப்பு.

— குட்டிகிருஷ்ணன்



யூனியன் நீர்ப்பாசன விவசாய மந்திரி டாக்டர் கே. எல். ராவுக்கு கல்லூரியில் படிக்கும் போது 'நியூட்டன்' என்ற செல்லப் பெயர் உண்டாம்! அவர் தான் முதலில் அப்பிரிவில் பட்டம் பெற்றவர்.

— க நாகரன்



சிலையைத் தேடி.. 24
கதை: வாண்டுமாமா
மதிப்புமிக்க புத்தர் சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்த ஒரு மிதவை தேவை. அதில்லாமல் அதைத் தூக்கிச் செல்ல முடியாது. அப்படியொரு சாதனத்தைக் கொண்டு வரப் புறப்பட்டான் தீசன்.
தீசா, தயவு செய்து சொல்லு. என் தம்பியை என்ன செய்தாய்?
என் திட்டங்களில் இனி நீங்கள் குறுக்கிடுவதை நான் விரும்ப மாட்டேன் தெரிந்ததா? இனி நீயும் இங்கிருந்து வெளியேற முடியாது. நான் வருகிறேன்.
நீலா விடுவித்துக் கொள்ளப் போராடினாள். கட்டு இறுகியது. கண்ணீர் வழிந்தது.
ஐயோ! இந்த இக்கட்டிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்குமா? ரவி என்ன ஆனானோ தெரியவில்லை. தீசன் கொடியவன் என்று நம்பி— மோசம் — போனேனே..
உருண்டான், புரண்டான், ரவி. தூரத்திலே கிடந்த — உடைந்த கண்ணாடிக் குப்பி அவனுக்குப் புதிய தெம்பை அளித்தது.
அதன் அருகில் எப்படியாவது போய் விட வேண்டும். உடைந்த கண்ணாடிப் பகுதியின் கூர்மையான பாகம் இந்தக் கயிற்றை அறுத்து விடும்...
இதே சமயத்தில் கடல் நீர் மோதித் தாக்கும் ஒரு சிறு பாறை மீது — ஒரு பெரும் பாறையின் மறைவில் — கை கால்கள் கட்டப் பட்டு நினைவிழந்து கிடந்தான் ரவி. அவனுக்கு நினைவு வந்த போது கட்டுகளிலிருந்து விடுபட பெருமுயற்சி செய்தான்.
நான் நீந்திக் கொண்டிருக்கும் போது யாரோ என் தலையில் அடித்துத் தாக்கியது நினைவிருக்கிறது. என்னைத் தாக்கியவன்தான் இப்படிக் கொண்டு வந்து இங்கு கிடத்தியிருக்க வேண்டும்.. ஆனால்.. ஏன் இப்படி? நீலா எங்கே..? ஆண்டவா நான் விடுதலை பெற வேண்டும்....
ரவியின் முயற்சி வீண் போகவில்லை. கைக்கட்டுகள் தெறித்து விழுந்தன.
நீலா தங்கிய இடத்துக்குப் போய்த் தேட வேண்டும். ஆண்டவா, அவளுக்கு அபாயம் ஏதுமில்லாதிருக்க வேண்டும். கடவுளே!
எப்போதோ ஒரு காலத்தில் மூழ்கிய கப்பலை நீலா இங்கெல்லாம் தேடி இருப்பாளா?



உடைந்த கப்பலை ரவி சுற்றிவரும் போது திடீரென்று தூரத்தில் எதிர்ப்பட்டது ஓர் உருவம்....
நீர்மூழ்கி மனிதன்! யாராக இருக்கும்? என்னைத் தாக்கிக் கட்டிப் போட்டவன் இவனாக இருக்குமானால், இவன் இப்போது தேடுவது நீலாவாகத்தானிருக்க வேண்டும். நான் அக்கா தெரியும் அந்தக் குகைக்குள் போய்ப் பார்க்கிறேன்.
விடுதலை முயற்சியில் தோல்வி கண்டு உடல் சோர்ந்து போகிறாள் நீலா.
நான் இங்கேயே இப்படியே இருந்தால் செத்துத்தான் போவேன். கடலுக்கடியிலே உள்ள இந்தக் குகையைப் பற்றியோ இதில் நான் இப்படிக் கட்டுண்டு கிடப்பதைப் பற்றியோ யாருக்குத் தெரியப் போகிறது?
திடீரென்று தொலைவிலுள்ள கடல் நீரில் சலசலப்பு ஏற்படுகிறது. அடுத்த விநாடி....
ரவி...!
அக்கா...! நீலா, உன்னை நான் கண்டு பிடித்து விட்டேன்!
ரவியினால் நீலாவின் கட்டுக்கள் அவிழ்க்கப் படுகின்றன.
யாரோ என்னைத் தலையில் அடித்து மயக்கமடையச் செய்து கை கால்களைக் கட்டிப் போட்டிருந்தார்கள் அக்கா. ஆனால் நான் விடுவித்துக் கொண்டு விட்டேன்.
உன்னையும் என்னையும் கட்டிப் போட்டது நீசன். அவன் நம் விரோதி. நமக்கு அது தெரியாமல் ரவி.. ரவி! தங்கப் புத்தரை அவன் கடத்திக் கொண்டு போகப் போகிறான். இதோ! நான் புத்தர் சிலையைக் கண்டு பிடித்ததை உன்னிடம் சொல்லவேயில்லையே. அக்கா பார்....
தங்கப் புத்தரைக் கண்டு ரவி பிரமித்துப் போகிறான். நீலா நான் அதைக் கண்ட சாகசங்களை விளக்கிறாள்.
உன்னைத் தனியே விட்டுப் போய் ஆத்திரமூட்டியவனான அந்த நீசன். நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறதக்கா. நாம் இங்கிருந்து தப்பி விட வேண்டும்.
அவர்கள் திரும்பிய அதே சமயத்தில் நீரினடியில் வெளிச்சம் தெரிந்தது.
ரவி, நாம் தப்பியோட முடியாது. அதோ நீசன் திரும்பி விட்டான். அந்த வெளிச்சம் அவன் 'டார்ச்' விளக்கினுடையது தான்.




"பழமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளுக்கும், பற்களுக்கும் தீங்கு இழைக்கக்கூடும்.''

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே ***சிக்கனமாக***
இருக்கும்போது பழமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TM



குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி

அத்தியாயம் 9

''அப்பா!....''

''என்னம்மா, காந்தி?''

''வாசுவின் அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது? வீட்டுக்குச் சின்னப் பெண்ணானாலும் நான்தானே கேட்க வேண்டி யிருக்கிறது!''

''என்னம்மா செய்வது? உங்கள் அம்மா இருந்திருந்தால் நீ பேச வேண்டிய அவசியமே நேர்ந்திருக்காது.''

''அம்மா இருந்தால் நாங்கள் ஏனப்பா இப்படி அநாதைகளாக இருக்கப் போகிறோம்?''

''கவலைப்படாதே, காந்தி! நான் எல்லாம் ஏற்பாடு செய்து விட்டேன்.''

காந்தி வியப்புடன் தந்தையை நோக்கினாள்.

கோசல்ராம் ரூபகுமாரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டவர், வீடு சேர்வதற்குள்ளாகவே ஒரு முடிவுக்கு வந்திருந்தார்.

'ரூபகுமார் சொல்வது போல் வாசு ஒன்றுக்கும் உபயோகமில்லாதவன். அவருக்கோ மகன் கிடையாது. வீட்டுக்கு வரும் மூத்த மருமகன் தலையெடுத்துக் குடும்பத்தையும், வியாபாரத்தையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். எனவே அவன் வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டு வரும் திறமை உள்ளவனாக இருக்க வேண்டும். வாசுவுக்கு இதெல்லாம் என்ன தெரியும்?

'அதனால் ரூபகுமாருடன் ரமாவின் விவாகத்தை நிச்சயித்து விடவேண்டும். காந்திக்கு விருப்பமிருந்தால் வாசுவை மணந்து கொள்ளட்டும். இல்லாவிட்டால் தனக்குப் பிடித்தவனைப் பார்த்து மணந்து கொள்ளட்டும். வாசு எக்கேடாவது கெட்டுப் போகட்டும்... இந்தக் காகிதப் பேரத்தை விட்டுவிடக் கூடாது. பங்குகளை அடமானம் வைக்காமல் ரூபகுமாரிடம் பணம் பெற இதுதான் சரியான வழி.'

''காந்தி! பெண்களின் நலனில் அப்பாவுக்கும் பங்கு உண்டு என்பதை நீ ஒப்புக் கொள்கிறாய் அல்லவா?''

''என்ன பேச்சப்பா நீங்கள் பேசுகிறீர்கள்?''

''பிள்ளையின் சௌகரியத்தைக் கேட்க வேண்டாமா?''

''அவர்தான் துடித்துக் கொண்டிருக்கிறாரே!''

''அப்படியா? ரூபகுமார் என்னிடம் சொல்லவேயில்லையே!''

காந்திக்கு எரிச்சலாக வந்தது. ''ரூபகுமாரைப் பற்றி இங்கு எதற்கு அப்பா பேச்சு?''

''அவன்தானே அம்மா மணமகன்! இந்த வீட்டு முதல் மருமகனாக வரப் போகிறவன்! விவாகத்துக்கு முக்கியப்பட்டவன்!'' மிக்க அமைதியோடு கூறினார் கோசல்ராம்.

''என்ன?'' ரமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன?'' — காந்தி பெருங் குரலில் கேட்டாள்.

''காந்தி! நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். பெண்கள் நலனில் ஒரு தந்தைக்கு அக்கறை உண்டு என்பதை நீ மறந்து விடக் கூடாது.''

''பெண்களுக்கான நலனா அப்பா இது?... நலனா என்று கேட்கிறேன்...? ரமாவின் விருப்பத்துக்கு எதிராகச் செய்வது அவளுக்கு நீங்கள் செய்யும் நலனா?''

''ஒரு பெண் படுகுழியில் வீழ்ந்தால் அதைப் பார்த்துக் கொண்டு ஒரு தகப்பன் சும்மா இருக்க முடியுமா?''

''அப்பா! உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஏற்பாட்டைக் கைவிட்டு விடுங்கள். ரூபகுமாருக்கும் எனக்கும் சம்பந்தத்தைக் காட்டி விடாதீர்கள். வாசு ஒருவரையே நான் விரும்புகிறேன். அவரையே

மணக்க ஆசிர்வதியுங்கள்.'' — ரமா கெஞ்சினுள், கல்லும் உருகிவிடும்படி.

''ரமா! காந்தியைப் போல் உனக்குத் துடிதுடிப்புக் கிடையாது. நான் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொள். ரூபகுமார்தானம்மா உனக்கு எவ்விதத்திலும் சிறந்தவன்.''


''நானும் வாசுவும் காதலிக்கிறோம் என்பதை அறிந்து வில்லன் போல் குறுக்கிடுகிறீரே, அவரா நல்லவர்?'' என்று ரமா துடிப்போடு கேட்டாள்.

''காதல் விவகாரத்தில் நல்லவன் கெட்டவன் என்றே நாம் பாகுபாடு செய்ய முடியாதம்மா. நான் ஒன்று கேட்கிறேன், நீ பதில் சொல்லுவாயா? நீயும் ரூபகுமாரும் முன்பே காதலிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இடையே வாசு குறுக்கிட்டு உன்னை அடைய விரும்புகிறுன். அப்போது அவன் உங்களுக்குத் தொந்தரவு தராமல் சும்மா இருந்து விடுவானு? இப்போது எந்த வாசுவை நீங்கள் நல்லவன் என்று கூறுகிறீர்களோ, அவனையே அப்போது மனம் இல்லாதவன் என்று கூற மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?''

ரமாவும் காந்தியும் திகைத்துப் போய்க் கோசல்ராமை நோக்கினுர்கள். ஒன்றையுமே அறியாதவர் எனச் சொல்லப்படும் அப்பா எவ்வளவு 'பாயிண்டா'க எடுத்துப் பேசுகிறுர்? அவர் சொல்வதும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒன்றுதானே?

''ஏனம்மா இருவருமே பதில் கூருமல் இருக்கிறீர்கள்? வாசு மௌனமாக நகர்ந்து விடுவான் என்று நீங்கள் உறுதி கூறிவிட முடியுமா? அத்தகைய தேவாம்சம் படைத்தவனுக அவன் இருக்க முடியாதம்மா.''

காந்தி தன் நெஞ்சை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.



அப்பாவின் கூற்றுப்படி பார்த்தால் அவள் ஒரு தேவாம்சம் பொருந்தியவள்தான். தன் காதலை வெளிக்காட்டாது, தன் காதலனுக்கே ரமாவை மணம் முடிக்க ஏற்பாடு செய்திருக்கிறாள் அல்லவா?

கோசல்ராம் தொடர்ந்தார்: ''வில்லனைக் கிளம்பினால் அவனும் ரூபகுமாருக்கு மேல்தான் இருப்பான். அப்போது ரூபகுமார் வாசு இருவர் குணத்தையும் நோக்கினால் அதிக பேதம் இருக்காது.''



''இருக்கலாம். ஆனால் நான் வாசுவைத்தான் காதலிக்கிறேன்.''

''உன் நலன் பொருட்டு நீதான் அம்மா மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். நான் என் முடிவை மாற்றுவதற்கில்லை. உன் விவாகம் ரூபகுமாருடன்தான் நடக்க வேண்டும். ஒருவகையில் அவன் உனக்கு முறைப் பையனும் கூட'' என்று கூறி அவர் எழுந்து சென்று விட்டார்.

ரமா விசித்து விசித்து அழலானாள். 'வாசு இதைக் கேட்டால் என்ன சொல்வார்? எப்படியெல்லாம் குதிப்பார்? வில்லனுக்கு வில்லனாக நிற்கப் பழகுகிறேன் என்றாரே... அசட்டுத்தனமாக ஏதாவது செய்ய முற்பட்டு விடுவாரோ? ஆண்டவனே! இதென்ன சோதனை!'

காந்தியும் நெஞ்சுருகக் கிடந்தாள். ரமாவின் விசிப்பைப் பார்க்கப் பார்க்க அவள் உள்ளம் தவித்தது. வாசுவிடமிருந்து ரமா பிரிக்கப்படுவதால் அவனுக்கு நன்மையே என்றுகூடக் கூறலாம். பிறகாவது வாசு ஒருகால் காந்தியை நேசிக்கலாம் அல்லவா?

சே! அப்படி நினைத்துக் குதூகலிக்கலாமா அவள்? இதற்காகவா அவள் இத்தனை நாட்களும் தன் மனத்தை அடக்கிக் கொண்டிருந்தாள்?

''ரமா!''

ரமா தலையை நிமிர்த்தவே இல்லை.

''அப்பாவின் மீது முழுக் குற்றத்தையும் நான் சுமத்த மாட்டேன். இது ரூபகுமார் வேலையாகத்தான் இருக்கும்.''

''இருக்கலாம். ஆனால் அப்பாவுக்குப் பாசம் வேண்டாமா?''

''விவாக விஷயத்தில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் அபிப்பிராய பேதம் இருப்பது சகஜம்தான். அதற்காக அப்பாவுக்குப் பாசமே இல்லை என்று கூறிவிட முடியுமா?''

அதே சமயம் கோசல்ராம் மீண்டும் அங்கு வந்தார். ''இதோ பாருங்கள், ரமா, காந்தி! உங்கள் இருவருக்கும் வாசு இந்த வீட்டு மருமகனாகத்தான் வரவேண்டும் என்ற விருப்பம் இருந்தால் காந்தி வாசுவை மணந்துகொள்ளட்டும். எனக்கு

ஒரே வாக்கியம்!

''உலக சரித்திரம்'' என்ற தலைப்பில் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். ஏராளமான படங்களுடன் கூடிய இந்தப் புத்தகத்தில் இருப்பது ஒரே ஒரு வாக்கியம் தான்! அந்த வாக்கியமாவது :

ஆதாமும் ஏவாளும் ஆப்பிளைச் சாப்பிட்டதிலிருந்து மனிதன் தான் செய்யக்கூடிய அபத்தத் தவறுகள் எதையும் செய்யாமலிருந்ததே யில்லை.

(சுரேஷ்ராம் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து)

ஆட்சேபணை இல்லை'' என்றார். புரியாத தத்துவமாக இருந்தது அவர் பேச்சு.

காந்தியின் செவிகளில் இன்பத் தேன் பாய்ந்தாற் போலிருந்தது.

ரமா வெகுண்டு எழுந்தாள் : ''என்ன அர்த்தமற்ற பேச்சு! காந்தியும் வாசுவும் விவாகம் செய்துகொள்ளட்டும் என்கிறீர்களே! இருவர் மனமும் ஒப்ப வேண்டாமா? என் நல்வாழ்வை உத்தேசித்து ரூபகுமாருடன் என் விவாகத்தை முடிக்க விரும்புகிறீர்களே! அந்த நல்வாழ்வு காந்திக்கு அவசியமில்லையா? வாசுவை மணந்து அவள் ஏழைமையில் இருந்தால் உங்கள் மனம் நிம்மதி கண்டு விடுமா?''

கோசல்ராம் வெலவெலத்துப் போய் விட்டார். காந்தியோ பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டு ரமாவைத் துளைப்பவள்போல் நோக்கினாள்.

* * *

''மிஸ்டர் ஆனந்த்!''

''ஓ! மிஸ்டர் ரூபகுமாரா? எங்கே இப்படி?'' இருவருக்கும் பேச்சுத் தொடர்ந்த இடம் சைனா பஜார்.

''பரிசுப் பொருளா, பரிசுப் பொருளா? ஒன்று வாங்க வேண்டும். அதற்காகத்தான் இந்தப் பக்கமாக வந்தேன்!'' என்றான் ரூபகுமார்.

''யாருக்கு?''

''நம்ம ரமாவுக்குத்தான். நல்ல பொருளாகச் சொல்லுங்களேன்!''

''முகூர்த்தத்துக்குத் தேதி வைத்தாகி விட்டதா? எனக்குத் தெரியாதே?''

''இன்னும் தேதி வைக்கவில்லை. மாமா என் சௌகரியத்தைக் கேட்டுப் போயிருக்கிறார்.''

''உங்கள் சௌகரியத்தையா?''

''ஆமாம், பின்னே யார் சௌகரியத்தைக் கேட்பார்கள், மணமகன் சௌகரியத்தைக் கேட்காமல்?.... நீங்களும் வாசுவும் பழைய சமாசாரத்தையெல்லாம் மறந்து கண்டிப்பாக எங்கள் இருமணத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றான் ரூபகுமார்.

பூமியே கிடுகிடுவென்று நடுங்குவது போலிருந்தது ஆனந்துக்கு.

''ரமாவின் ஒப்புதல் கிடைத்து விட்டதா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. மாமா இப்போதுதான் என் வீட்டுக்கு வந்து கூறினார்.''

மேற்கொண்டு ரூபகுமாரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க ஆனந்த் அங்கே நிற்கவில்லை. ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு வாசுவின் வீட்டுக்கு விரைந்தான்.

அந்த வேளையில் ஆனந்தைக் காணத் தேவகிக்கு வியப்பாயிருந்தது.

''என்னப்பா ஆனந்த்?'' என்று கேட்டாள்.

''வாசு இருக்கிறானா?''

''இந்த வேளையில் அவன் வீட்டில் எப்படி அப்பா இருப்பான்? வழக்கம் போல் ஆபீசுக்குப் போயிருக்கிறான்.''

''வழக்கப்படிதானே போயிருக்கிறான்?'' 'வழக்கப்படி' என்ற சொல்லில் அழுத்தம் கொடுத்துக் கேட்டான் ஆனந்த்.

''ஆனந்த்! உன் பேச்சு எனக்கு விளங்கவில்லையே!''

''அப்படியானால் உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?''

''என்ன விஷயம்? சொன்னால்தானே தெரியும்?''

''ரூபகுமார் கூறியதெல்லாம் உண்மைதானா?''

''ரூபகுமார் என்ன கூறினான்? அவன் கூறியது உண்மையா இல்லையா என்று நான் எப்படிக் கூற முடியும்?''

''ரூபகுமாருக்கும் ரமாவுக்கும் இருமணமாமே?''

''உண்மையாகவா?'' என்று வீறிட்டாள் தேவகி. ''இப்படி ஏதோ நடக்கப் போகிறதென்று நான் எதிர்பார்த்ததுதானடா! இதை வாசு எப்படித் தாங்கப் போகிறானோ? அதை நினைத்தால்தான் என்னவோ செய்கிறது! ஏன், ஆனந்த்! நான் இப்போதே ரமாவின் வீட்டுக்குப் போய்....''

அவள் முடிப்பதற்குள்ளாக, ''அம்மா, இதற்கு ரமா சம்மதம் தந்திருப்பாள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இது கட்டாயக் கல்யாணமாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றான் ஆனந்த்.

''இருக்கலாம். அவள் அப்பாவைப் பார்த்து இரண்டில் ஒன்று...''

ஆனந்த் அவளைத் தடுத்து நிறுத்த விரும்பவில்லை.

ரமா தன் அறையை விட்டு வெளியே வரவேயில்லை. தந்தையை எவ்வளவு



மார்ச் 14 முதல்
அரக்கர் ஆணவம் அடக்கி, தேவர்கள்
துயர் துடைக்கமுருகன் அவதரித்த
கதையை விளக்கும் உன்னதச் சித்திரம்
ஜெமினி கணேஷ்
பத்மினி
ராஜஸ்ரீ..
வித்யா
ஸ்ரீதேவி
T.K.பாலச்சந்திரன்
நீலா புரொடக்ஷன்ஸ்
குமார
சம்பவம்
ஈஸ்ட்மென் கலர்
டைரக்ஷன்
சுப்பிரமணியம்
சங்கீதம்
தேவராஜன்
மெரிலாண்ட்
ஸிட்டி தியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்



நோபல் பரிசு கிடைத்ததாகத் தந்தி வந்த போது கவியரசர் சில ஆசிரியர்களோடுஎங்கோ உலாவப்போயிருந்தார். எப்போதுமே குழந்தை போன்ற இயல்புள்ள ஆசிரியர் அஜீத் சக்கரவர்த்தி (இவர் தாம் முதன் முதல் இரவீந்திரருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் காட்டி அவருக்கு உற்சாக மூட்டியவர்) விரைந்து வந்து மாணவர்களுக்குச் செய்தியை அறிவித்தார்.

உலாவி விட்டுத் திரும்பி வந்ததும் ரவீந்திரர் தந்தியைப் பார்த்தார். அமைதியாகவே அதை நேபாலராய் என்ற ஆசிரியரிடம் கொடுத்து "இனி ஆசிரமச் செலவுக்குச் சிரமப் பட வேண்டியதில்லை" என்றார்!

இரவீந்திரநாத் தாகூர் என்ற நூலிலிருந்து.
தமிழில்: நவாலியூர் சோ. நடராஜன்.
பிரசுரம்: தேசிய நூற்குழு, 135, தர்ம பால மாவத்தை, கொழும்பு-7.

தவறாக எடை போட்டு விட்டாள் அவள்! ஒன்றுமே தெரியாதவர், கபடற்றவர் என்று காட்டியதெல்லாம் வேஷம்தானா? அல்லது புழுவைக் கொட்டிக் கொட்டிக் குளவி ஆக்குவது போல் ரூபகுமார் அவள் தந்தையை இப்படி மாற்றி விட்டானா? ஆண்டவா, இந்த உயிர் ஏன் இன்னும் போகவில்லை ?... வாசு என்ன கூறுவார்? அவருக்கு என்ன பதில் சொல்வது? ரூபகுமாரோடு அவள் வாழ்க்கை — இதை அவள் நடத்த முடியுமா? அம்மா! நீ ஏன் போய் விட்டாய்? உன்னிடமே என்னையும் அழைத்துக் கொள். இந்தத் தந்தையிடம் விட்டு வைக்க உனக்கு எப்படி மனம் வந்தது...?

காந்தி !

அவளும் ஒன்றும் புரியாத நிலையில் இருந்தாள். அப்பா சொல்லி விட்டார், காந்தியும் வாசுவும் மணந்து கொள்ளட்டுமென்று! என்ன இன்சுவையாக அவள் காதுகளில் அந்த வார்த்தைகள் விழுந்தன! அதனால்தானே, ரமா தந்தையைக் கோபித்தபோது அவள் பற்களை நறநறவென்று கடித்தாள்.... இவள் யார் இடையே? வாசுவுக்கும் ரமாவுக்கும் இனி சம்பந்தமில்லை என்று தீர்த்து விட்டார் அப்பா. பிறகு, வாசுவை யார் விவாகம் செய்து கொண்டால் ரமாவுக்கு என்னவாம் ?

சே! இதற்காகவா இத்தனை நாட்களும் மனத்தைக் கல்லாக்கி வைத்துக் கொண்டிருந்தாள் காந்தி! இந்த ஏற்பாட்டுக்கு அவள் முனைந்திருந்தால் எப்போதோ நிறைவேற்றிக் கொண்டிருக்கலாமே! வாசுவுக்கும் ரமாவுக்கும் இடையே ரூபகுமார் புகுந்து பலப்பல செய்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். அவற்றையெல்லாம் பலனற்றதாகச் செய்ய அவளே முனைந்திருக்கிறாள். அப்படி இருக்கும்போது திடீரென்று ஏன் இந்த எண்ணம்? சகோதரிக்குத் துன்பம் ஏற்படும்போது, தான் தாயாக நின்று துயர் தீர்க்கப் போவதாகவல்லவோ சங்கற்பம் செய்தாள்! சகோதரி தவித்துப் புழுவாய்த் துடிக்கும்போது தனக்குச் சாதகமாக ஒன்று நடக்கப் போகிறதென்று நினைத்து மகிழலாமா ?

கூடாது. கூடவே கூடாது. சகோதரியின் நல்வாழ்வு ஒன்றுதான் அவள் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

காந்தி எழுந்திருந்து ரமாவிடம் சென்றாள்.

"அழாதே, ரமா! எழுந்திரு. அப்பாவிடம் மீண்டும் வாதாடிப் பார்ப்போம். அப்பா எங்கேயோ போய்விட்டு இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறார்."

"காந்தி! ரூபகுமார் தம் பிடிவாதத்தை எப்படிச் சாதித்துக் கொண்டு விட்டார், பார்த்தாயா? ஒன்றும் தெரியாத அப்பாவின் மனத்தைக் கலைத்துத் தம் பக்கம் இழுத்துக் கொண்டு விட்டாரே!"

"நீ எனக்குப் புதியதாகச் சொல்ல வேண்டுமாக்கும். நீ கண்களைத் துடைத்துக் கொண்டு முதலில் எழுந்திரு."

ரமா மெள்ள எழுந்தாள்.

இதே நேரத்தில் வாசலில் யாரோ வரும் சத்தம் கேட்டது. காந்தி சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

"அட, கடவுளே, இவர் வருகிறாரே!"
"யார், காந்தி ?"
"வாசுவின் அம்மா !"

உள்ளே நுழைந்த தேவகி ரமாவின் அலங்கோல நிலையைக் கண்டதும் திகைத்துப் போய் விட்டாள். "நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா, அம்மா? உங்கள் அப்பா வீட்டில் இருக்கிறாரா ?" என்று கேட்டாள்.

காந்தி கலங்கவில்லை. தேவகியைத் தந்தையிடம் அழைத்துச் சென்றாள்.

கோசல்ராமின் முகம் சிறுத்தது.

(தொடரும்)

ராமாயணம்

ராஜாஜி

ஒருவனாக நின்று எப்படி இந்தப் பெருஞ் சேனையைத் தாக்கி வெற்றியடையப் போகிறான் என்று ரிஷிகள் கவலை கொண்டார்கள். அச்சமயம் வில்லை வளைத்து நின்ற ராமசந்திரன் முகத்தில் ஜொலித்த தேஜஸானது, பினாகி வில்லை வளைத்த ருத்திரனுடைய தேஜஸைப் போலவே ஜொலித்தது.

அரக்கர் சேனை வேகமாக வந்து விட்டது. சிம்ம நாதங்களும் வில்களின் டங்காரங்களும் பேரிகை நாதமும் கிளம்பி வனம் நிறைந்து விட்டது. காட்டு மிருகங்கள் எல்லாம் பயந்து இங்குமங்கும் சிதறியோடின. ராமன் வில்லைப் பிடித்து நாண் ஏற்றி நின்றான். ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் சூழ்வன போல் ராக்ஷஸ சேனை ராமனைச் சூழ்ந்தது.

யுத்தம் ஆரம்பித்து மிகக் கோரமாக நடந்தது. ராமன் உடல் எல்லாம் அடிபட்டும் அசையாமல் நின்றான். இந்தப் பெருஞ் சேனையிடமிருந்து எப்படி ராமன் தப்புவான் என்று தேவர்களும் கவலைப்பட்டார்கள்.

ராமனுடைய பாணங்களுக்கு ஆயிரக்கணக்கான ராக்ஷஸ வீரர்கள் இரையானார்கள். தூஷணனே நேரில் ராமனுக்கு எதிரில் நின்று யுத்தம் செய்தான். ராமன் தன் வில்லை வளைத்து மண்டலமாகத் தன்னைச் சுற்றிப் பாணங்களைச் செலுத்தி வந்தான். வில்லில் அம்பும் பாணமும் பூட்டுவதாவது, அவை நாணினின்று விடுபடுவதாவது கண்ணுக்குத் தெரியவில்லை. ராமசந்திரன் நின்ற இடத்திலிருந்து சூரிய மண்டலத்திலிருந்து கிரணங்கள் வீசுவது போல், பாணங்கள் பூமியில் எட்டுத் திசைகளிலும் பரவிச் சென்று ஆயிரக்கணக்கான வீரர்கள், தேர்கள், யானை, குதிரை முதலிய வாகன விலங்குகள் அடிபட்டுப் பலபலவென்று பூமியில் வீழ்ந்து மாள்வதுதான் காணப்பட்டது. ஆகாயத்தில் அவன் செலுத்திய பாணங்கள் அரக்கருடைய உடல்களைத் துளைத்து ரத்தத்துடன் வெளிப்பட்டுக் கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போல் காணப்பட்டன.

அரக்கருடைய சேனை நிர்மூலமாயிற்று. ராமன் காலாந்த ருத்திரனைப் போல் நின்றான்.

* * *

மறுபடியும் தூஷணன் ஒரு பெரும் படைப் பகுதியுடன் ராமன் மேல் பாய்ந்



தான். கொஞ்ச நேரம் அவனுடைய அட்டகாசம் நடந்தது. பிறகு ராமனுடைய பாணங்களுக்கு அவன் தேர், தேர்க் குதிரைகள், சாரதிகள் எல்லாம் இரையாகி அவனே கீழே குதித்துத் தண்டாயுதத்துடன் ராமன் மேல் பாய எத்தனித்தான். ராமனுடைய பாணங்களால் அவன் இரு கைகளும் அறுபட்டுத் தரையில் பெரிய யானையைப் போல் விழுந்து மாண்டான்.

தூஷணன் மாண்டதைப் பார்த்து மற்ற ராக்ஷஸப் படை வீரர்கள் ஒன்று சேர்ந்து ராமசந்திரன் மேல் பாய்ந்தார்கள். அவர்களும் கோதண்டத்திலிருந்து வெளிப்பட்ட பாணங்களுக்குப் பலியானார்கள்.

இவ்வாறு கரனுடைய சேனை முற்றிலும் மாண்டது. சமுத்திரம் போல் ஓசை கிளப்பிய பெருஞ் சேனை அவ்வளவும் சப்தம் அடங்கிப் போய்ப் பிரேதங்களாகவும், வெட்டித் துண்டாக்கப் பட்ட ஆயுதங்களாகவும் தேர்களாகவும் கிடந்தது.

* * *

கரன், திரிசிரஸ் இருவருமே மிஞ்சினார்கள். அடங்கா ரோஷத்துடன் கரன் முன் சென்று ராமனோடு யுத்தத்தில் கலக்கப் போனான். திரிசிரஸானவன் கரனை நிறுத்தி, ''நான் முன்னால் சென்று ராமனைக் கொல்வேன். வெற்றியுடன் ஜன ஸ்தானம் திரும்புவோம். அல்லது ராமனால் நான் மாண்டபின் நீ ராமனை எதிர்ப்பாய்'' என்று சொல்லி அவனைத் தடுத்து விட்டு அந்த மூன்று தலை அரக்கன் தேர் ஏறி ராமனைத் தாக்கினான்.

திரிசிரஸ் ராமன் பேரில் பாணங்கள் விட்டான். அவற்றைப் பொறுத்து ராமன் கால சர்ப்பங்களைச் செலுத்த ஆரம்பித்தான். முடிவில் திரிசிரஸ் ரத்தம் கக்கித் தரையில் விழுந்து மாண்டான். அவனுடன் வந்த அரக்கர்கள் மான்களைப் போல் ஓடினார்கள்.

இதைப் பார்த்த கரன் பயந்தோடிய அரக்கர்களை நிறுத்தி, தன் ரதத்தை ராமன் மேல் செலுத்தினான். அவனுடைய கர்வம் இதற்குள் அழிந்து விட்டிருந்த போதிலும் பலத்த யுத்தம் செய்தான். இருவருடைய பாணங்களும் ஆகாயத்தை மறைத்தன.

கரன் யமனைப் போல் தேரில் நின்று பாணங்கள் விடுத்தான். ராமசந்திரன் தன் வில்லின் மேல் கொஞ்ச நேரம் சாய்ந்து நின்றான். அச்சமயம் கரன் விடுத்த அம்புகளால் ராமனுடைய கவசம் அறுபட்டுக் கீழே விழுந்தது. உடல் வெளிப்பட்டுச் சூரியனைப் போல் சக்கரவர்த்தித் திருமகன் பிரகாசித்தான்.

ராமன் வைஷ்ணவ வில்லை எடுத்தான். கரனுடைய ரதம், வில் எல்லாவற்றையும் துவம்சமாக்கினான். ரதமும் வில்லும் இழந்த கரன் கதாயுதம் எடுத்து ராமனை எதிர்க்க நின்றான். யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தேவ ரிஷிகணங்கள் அச்சமயம் கவலையுடன் கைகூப்பி நின்றார்கள்.

'' ஏ, கரனே !'' என்று ராமன் சொன்னான். ''மக்களை இம்சித்து வந்தாய். உலகத்தாருக்குத் துக்கம் விளைவித்து வருபவன் எவ்வளவு பலவானானாலும் மாள்வான். வனத்தில் தவம் செய்தும் விரதம் காத்தும் வந்த ரிஷிகளை ஏன் துன்புறுத்தியும் கொன்றும் வந்தாய்? அந்தப் பாவங்களின் பயனை இப்போது அடையப் போகிறாய். பாப காரியங்களைச் செய்து உலகத்தின் வெறுப்பைச் சம்பாதித்தவர்கள் அழிந்து போவது நிச்சயம். ரிஷிகளைக் கொன்று தின்றீர்களே, அந்த ரிஷிகள் விமானத்தில் அமர்ந்து வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கொடிய அரக்கர்களை நிர்மூலமாக்கவே நான் தண்டகாரண்யத்துக்கு வந்திருக்கிறேன். என் பாணங்கள் உன் குலத்தார் உடல்களில் புகுந்து உயிரைக் குடிக்கும். செய் யுத்தம். உன் தலை பனங்காய் போல் கீழே உருளப் போகிறது!''

''அடே, மனிதப் பூச்சியே!'' என்றான் கரன். ''தசரதன் மகனே! ஏன் அதிகமாகப் பேசுகிறாய்? பாமர அரக்கர்களைக் கொன்று விட்டாய் என்று கர்வம் கொண்டு விட்டாயா? வீரன் தன்னைத் தானே புகழ்ந்து பேசிக் கொள்ள மாட்டான். நீ பேசுவது அற்பர்கள் பேச்சு. குலத்திலிருந்து நீக்கப்பட்ட க்ஷத்திரியர்கள்தான் இப்படி வீரம் பேசுவார்கள். பொருளற்ற பேச்சுப் பேசாதே ! யுத்தம் செய். மரணம் அடுத்து நிற்கும்போதுதான் இத்தகைய தற்புகழ்ச்சிப் பேச்சு கிளம்பும். உன்னுடைய அற்ப குணம் இதனின்று வெளியாயிற்று. காட்டுப் புல் பெரிதாக எரிவது போல் மிகப் பிரகாசமாகப் பேசுகிறாய். அது பயனற்ற நெருப்பாகும். இதோ கதையைப் பிடித்து நிற்கிறேன். உன் உயிரைக் கொண்டுபோகும் யமனாக நிற்கிறேன். மாலை ஆகப்போகிறது. யுத்தம் நிறுத்த வேண்டியதாகும். ஆனபடியால் உடனே உயிரை இழக்கத் தயாராக நில். நீ கொன்ற இவ்வளவு பேர்களின் பழியைத் தீர்க்க நான் வந்தேன்!'' என்று சொல்லிக் கையில் பிடித்த கதாயுதத்தைச் சுழற்றி ராமனை நோக்கி எறிந்தான்.

ராமனுடைய பாணங்களால் கதாயுதம் அந்த நிமிஷத்தில் துண்டிக்கப்பட்டு வேகமற்றுத் தரையில் விழுந்தது.

“அரக்கனே! உன் வீரப் பேச்சு முடிந்ததா? இன்று நீ சாவாய். இந்த வனம் இனிச் சுகமாக இருக்கும். முனிவர்களை இம்சித்த உன் ரத்தத்தைப் பூமி குடிக்கப் போகிறது” என்றான் ராமன்.

இவ்வாறு ராமன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கரன் அங்கிருந்த ஒரு பெரிய ஆச்சா மரத்தைப் பிடுங்கி உதட்டைக் கடித்துக் கொண்டு, “நீ செத்தாய்” என்று சொல்லி ராமன் மேல் எறிந்தான்.

இதையும் ராமன் தன் திவ்விய பாணங்களால் தடுத்து வெட்டித் தள்ளி, இனித் தாமதம் கூடாது. இவனைச் சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்று பல பாணங்களை அவன் மேல் எய்து, அவன் உடலை ரத்தப் பிரவாகத்தில் மிதக்கச் செய்தான்.

பெருங்காயங்கள் அடைந்த வெறியுடன் கரன் ராமன் மேல் ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். வில் வளைத்துப் பாணம்விட இடமில்லாமல் நெருங்கவே ராமன் பின்னுக்குக் குதித்து ஓர் இந்திர பாணத்தை விடுத்து அரக்கனுடைய மார்பைப் பிளந்தான். கரன் மாண்டான்.

ஆர்த்தெ ழுந்தனர் ஆடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்த னும்பொலிந் தான்கதிரோன்திசை
போர்த்த மென்பனி போக்கியதென்னவே

தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். “பாப கர்மங்கள் நிகழ்த்திய அரக்கனைக் கொன்று ஒழித்தான். தண்டக வனத்தில் இனிச் சுகமாக மக்கள் இருக்கலாம். மூன்று நாழிகைக்குள் கரதூஷணர்களையும் திரிசிரனையும் அவர்களுடைய சேனையையும் ராமசந்திரன் நிர்மூலம் செய்து விட்டான். இவன் அல்லவோ வீரன்?” என்று சொல்லிக் கொண்டு தேவர்கள் திரும்பினார்கள்.

சீதையும் லக்ஷ்மணனும் மலையினின்று திரும்பினார்கள். ரிஷிகளுக்குக் கொடுத்த அபய உறுதியை, சொல்லியவண்ணம் காத்த தனி வீரன் ராமனைத் தம்பி தழுவிக் கொண்டு அடைந்த மகிழ்ச்சி சொல்லுக்கு அடங்காது.

அரக்கர் உடல்களினின்று சிதறி விழுந்த ரத்தத்தையும் பாதங்களில் பட்டு நின்ற யுத்த களத்துத் தூசியையும் தம்பியும் தேவியும் விட்ட கண்ணீர் கழுவி விட்டது என்கிறார் கம்ப நாட்டாழ்வார்.

விண்ணில் நீங்கிய வெய்யவர் மேனியின்
புண்ணின் நீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவினார்.

ஒருவன் தனியாக எவ்வாறு இவ்வளவு காரியங்களைச் செய்து தீர்த்தான்? ஒரு பசு மாடு தன் கன்றைக் காக்க மக்கள் கூட்டத்தின் மேல் பாய்ந்து அவர்கள் அத்தனை பேரும் விழுந்து ஓடிச் சிதறிப் போவதைப் பார்த்தால் உண்மை உணர்ச்சி பாய்ந்த ஓர் உயிருக்குள் எவ்வளவு வேகமும் சௌரியமும் பலமும் வந்து சேரும் என்பதை ஒருவாறு காணலாம். தெய்வமே மனித உருவத்தில் வந்து அநாதைகளுக்கு அபயம் தந்து அந்தச் சத்தியத்தைக் காக்க முனைந்து விட்டால் அந்த மனிதன் எவ்வளவு செய்வான் என்பதைச் சிந்தனைச் சிற்ப சக்தியைக் கொண்டு காணலாம். ராமனை அவதார புருஷனாகத்தான் கம்பரும் வால்மீகியும் எடுத்துக் கொண்டு வெவ்வேறு விதத்தில் நமக்கு நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கிறார்கள். சில இடங்களில் தெய்வப் பிரசாதம் பெற்ற வீரனாகவும் சில இடங்களில் தெய்வமாகவேயும் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் ராமன் தன்னைத் தெய்வமாக எப்போதும் எண்ணவில்லை. மனிதனாகவே, க்ஷத்திரிய வீரனாகவே, சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, தரும முயற்சிகளில் ஈடுபட்ட மானிடனாகவே, வேதாந்த ஞானம் பெற்ற தீரனாகவே, எல்லையற்ற சக்தியைப் பெறக்கூடிய ஆத்மாவாகவே தன்னை எண்ணி வந்தான்.

அரக்கருடைய பெருஞ் சேனை ராமனைத் தாக்க, திமுர் என்று வந்து நின்று ‘அதோ அவன் தான்” என்று சூர்ப்பனகை அவர்களுக்குக் காட்டிய சமயம், ராமன் என்ன செய்து கொண்டிருந்தான் என்பதைக் கம்பர் பாடுகிறார்.

துமிலப் போர்வல் அரக்கர்க்குச்
சுட்டினான்
அமலத் தொல்பெயர் ஆயிரத்(து)
ஆழியான்
நிமலப் பாத நினைவின் இருந்தஅக்
கமலக் கண்ணனைக் கையினில்
காட்டினான்.

நாராயணனே தானே ராமன் என்று அறிவான். ஆனால் ராமன் தானே நாராயணன் என்று எண்ணவில்லை. நாராயணனைத் தியானித்து ஆன்ம பலமும் எல்லாப் பலமும் பெற்று வந்தான். (தொடரும்)

என் குருநாதன்

ஸ்வாமி விவேகானந்தர்

[ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் 135வது ஜயந்தி நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.]

“தருமம் நலிவுற்று, அதருமம் ஓங்கும் போதெல்லாம் நான் மக்களை ரட்சிப்பதற்கு அவதரிக்கிறேன்” என்று ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில் பிரகடனம் செய்திருக்கிறான்.

இந்தியாவில் மேல் நாட்டு முறைகள் பரவி, தாய் நாட்டின் அத்யாத்ம லட்சியங்கள் உள்ளபடி உணரப்படாமல், தவறான 'சீர்திருத்தங்கள்' பெருகி வந்த போது, 1836ம் ஆண்டு பிப்ரவரி 18ந் தேதியன்று, வங்காளத்தின் ஒரு பட்டிக்காட்டுக் கிராமத்திலிருந்த ஓர் ஏழைப் பிராமணத் தம்பதிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தத் தம்பதியர் உண்மையான ஆசாரப் பிராமணனுக்குரிய பரிபூரண தியாக வாழ்வை வாழ்ந்தவர்கள். என் குருநாதனின் அன்னை எத்தனையோ நாட்கள் முழுப் பட்டினி கிடந்து, பிறருக்கு உணவு படைத்தவள்!

என் குருவின் சிறு பிராயத்திலேயே அவரது தந்தை காலமாகி விட்டார். பாலன் பள்ளி சென்றான். ஊரில் பணக்காரக் கலியாணங்களில் நடக்கும் வித்வத் சதஸ்களில் ஒன்றுக்கு அவன் சென்றான். அங்கு தர்க்கம், ஜோதிஷம் முதலிய பல விஷயங்களில் பண்டிதர்கள் விவாதிப்பதைக் கண்டான். 'இவர்களுடைய கல்வி அறிவின் பயனெல்லாம் இந்த வாதச் சண்டைக்கும் அதனால் கிடைக்கும் தட்சிணைக்குக்கும் தானே? இப்படிப்பட்ட ஓர் இலட்சியத்துக்கே உதவும் பள்ளிப் படிப்பு எனக்கு இனி வேண்டாம்' என்று அந்த அற்புத பாலன் தீர்மானித்து விட்டான். தந்தையும் இறந்து, குடும்பமும் ஏழைமையில் தத்தளிக்கையில், படித்து உத்தியோகம் செய்யாமல் தான் பிறருக்குப் பாரமாக இருக்கக் கூடாது என்பதால், கல்கத்தாவுக்கு அருகே ஒரு காளி கோயிலில் அர்ச்சகராக அமர்ந்தான்.

கோயிலில் ஆனந்தமாதாவின் உருவம் இருந்தது. 'இது வெறும் உருவம்தானா? உருவத்தின் பின் ஏதும் இல்லையா? உண்மையாகவே இப்பிரபஞ்சத்தில் ஆனந்த ரூபிணியான அன்னை இல்லையா? அவள் உயிர் வாழ்ந்து உலகைக் காப்பது உண்மையே அல்லவா? இந்தக் கருத்துக்கள் வெறும் கனவா? சமயம் என்பது சத்தியமே அன்றோ?' என்றெல்லாம் அவர் எண்ணலானார். இந்த எண்ணம் அவரை அப்படியே ஆட்கொண்டது! அவர் சிந்தனை 'கடவுளைக் காண முடியுமா?' என்பதிலேயே குத்திட்டு நின்றது. இந்தச் சிந்தனை வேகத்தில் அவரால் வேறேதுமே செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. பூஜையின்போது தேவிக்கு நிவேதனம் செய்யவும், தீபாராதனை காட்டவும்கூட மறந்து போய் அவர் நின்ற நாட்கள் உண்டு; பல மணி நேரம் விடாமல் தீபாராதனை செய்த நாட்களும் உண்டு.

அர்ச்சகப் பணியும் செய்ய இயலாமல் ஒரு சிறிய வனத்தில் சென்று வாழலானார். சூரியன் உதித்தானா அஸ்தமித்தானா என்றுகூடத் தெரியாத நாட்கள் அவை.

மாலையில் ஆலய மணி ஓசையும், துதி ஒலியும் வனத்தை எட்டும். “அம்பிகே, உன்னை நான் காணாமல் இன்னொரு நாளும் வியர்த்தமாகக் கழிந்ததே” என்று அலறுவார் என் குரு. தரையில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு துடிப்பார். அம்பாளுக்காகச் சகலத்தையும் துறந்தாலே அவள் வருவாள் என்பதால் பணம் காசு இவற்றின் சம்பந்தத்தை அடியோடு துண்டித்து எறிந்தார். காமத்தையும் அடியோடு களைந்தவர் அவர். “உலகம் முழுதும் அம்பாளின் வெளியீடு; எனவே





பெண்கள் அனைவரும் அன்னை'' என்பது அவரது தத்துவமாயிற்று. அதை வாழ்க்கையில் அப்படியே கடைப்பிடித்தார்.

உலகம் அவரைப் பைத்தியம் என்று எண்ணும் நிலையில், ஆனால் உலகுக்கே கலை ஊட்டும் அற்புதப் பைத்தியங்களில் ஒருவராக, அவர் சத்திய தரிசனம் வேண்டிப் பல நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓயாமல் ஆன்மிகப் போராட்டம் கண்டார். பிறகு அற்புத தரிசனங்கள் பெற்றார். இயற்கையின் இரகசியங்கள் அவருக்குத் தம்மைத் தாமே திறந்து காட்டிக் கொண்டன. ஒவ்வொரு திரையாக அறுந்து விழுந்தது. சாட்சாத் அம்பிகையே அவருக்குக் குருவாக வந்தாள்; அவர் நாடிய சத்தியங்களில் அவருக்குத் தீட்சை தந்தாள்.

இச்சமயத்தில், அவரால் பிற்காலத்தில் வித்யா ஸ்வரூபிணி என்றே போற்றப்பட்ட ஒரு சந்நியாசினி வந்தாள். அவருக்கு இந்திய மதத்தின் நானாவித வழிகளைப் போதித்தாள்; பலவித யோகங்களைப் பயிற்றுவித்தாள்.

அதன்பின் மெத்தக் கற்ற ஒரு வேதாந்தி சந்நியாசி வந்தார். அவர் இந்த யுவனுக்கு வேத தத்துவங்களைப் போதித்தார். அவருக்கு சந்நியாசம் தந்தார்.

முன்பு என் குருவை உலகம் பைத்தியமாக எண்ணிய போது, அவரது மனத்தைச் சமநிலைப்படுத்துவதற்கு விவாகம் உதவி புரியும் என்று எண்ணிக் கொண்டு அவரது உறவினர்கள் ஒரு சிறு பெண் குழந்தையை அவருக்கு மணம் முடித்தனர். ஆனால் அவரோ மணமாகித் திரும்பியபின் 'பைத்தியத்தி'ல் மேலும் ஊறியிருந்தார். தொலை தூரத்தில் தன் வீட்டிலிருந்த அந்தப் பெண் தன் கணவன் சமய ஆர்வம் அதிகமாகிப் பலரால் பைத்தியமாகக் கருதப்படுவதாக அறிந்தாள். உண்மையை அறிய, அவளாகவே நடந்து வந்து கணவனின் இருப்பிடம் அடைந்தாள். அவர் அவளுடைய பாதத்தில் விழுந்து வணங்கினார். ''என்னைப் பொறுத்தமட்டில் எல்லாப் பெண்களிலும் அம்பாள் தன்னையே காட்டிக் கொண்டிருக்கிறாள். உன்னையும் அப்படித்தான் திவ்விய அன்னையாகப் பார்க்கிறேன். ஆனாலும் நீ என்னை சம்சாரத்துக்கு இழுக்க விரும்பினாலும் சரி, நான் உன்னை மணம் புரிந்து கொண்டு விட்டதால் நீ விதிக்கும்படி பணி புரிகிறேன்'' என்றார்.

அந்தப் பெண் பரிசுத்தமான உன்னத ஆன்மா. அவரை லௌகிகத்தில் திருப்பத் தான் விரும்பவில்லை என்றாள். எனினும் அவருக்கு அருகிலேயே இருந்து பணி புரிந்து, அவரிடம் உபதேசம் பெற விரும்புவதாகச் சொன்னாள். அவ்வாறே அவள் அவரது சிஷ்யர்களிடை தலைசிறந்ததோர் இடத்தைப் பெற்றாள்.

அவருக்கு அடுத்தபடியாக ஏற்பட்ட விருப்பம், பல்வேறு மதங்களின் உண்மையை அறிய வேண்டும் என்பதே. அவர் எல்லா மதத்தலைவர்களையும் அணுகினார். எல்லாச் சமய இலக்கும் ஒன்றே — மொழியும், முறைபாடும் தான் மாறுபடுகின்றன என அநுபவபூர்வமாகக் கண்டார்.

அப்பழுக்கற்ற தூய்மை அவரது வாழ்வில் மேவியது. நம்முடைய வாழ்வு காணும் போராட்டங்களுக்கெல்லாம் அவர் அப்பாற்பட்டவரானார். தமது வாழ்வின் முக்கால் பகுதியில் அவர் படாதபாடு பட்டுச் சேமித்த ஆன்மீகச் செல்வம் இனி அவரால் மனித குலத்துக்கு வழங்கப்படும் தருணம் வந்தது. உபதேசப்பணி தொடங்கியது. ஆசாரியன் என்ற உயர் ஸ்தானத்தை எண்ணாமலே இப்பணியைச் செய்தார். அவரது முயற்சி இன்றி அவரது தூய நடத்தையே தானாக அவரிடம் சீடர்களைச் சேர்த்தது.

கிராமத்துக் கொச்சை மொழியில் பேசியே, ஒவ்வொரு பதத்தின் மூலமும் ஆன்ம சக்தியையும் ஒளியையும் ஊட்டும் இந்த அற்புத மனிதரை நாடி ஆயிரக் கணக்கில் மக்கள் வந்தனர். அவர் கல்கத்தாவுக்கு வந்தார். ஆண்டு தோறும் சமய நம்பிக்கையற்ற, உலகாயதவாதிகளை நூற்றுக் கணக்கில் படைத்துக் கொண்டிருந்த 'படிப்பாளி'களின் மாநகரம் அது. ஆனால் இப்படிப்பட்ட படித்த நாஸ்திகர்களும் அவரிடம் உபதேசம் பெற்றனர். அவர் தினம் இருபத்தி நான்கு மணியும் பேசவேண்டியதாயிற்று. உடல்நிலை குலைந்தபோதிலும், மனிதகுலத்திடம் அவருக்கு இருந்த அடர்ந்த அன்பு காரணமாக, மிக மிகத் தாழ்ந்தோரையும் புறக்கணிக்காமல் உபதேசித்தார். இதனால் அவரது தொண்டை பயங்கரமாகப் பாதிக்கப்பட்டது. அப்போதும் நாடிவந்தோருக்கு உபதேசிப்பதை அவர் நிறுத்தவில்லை. யாரேனும் தடுத்தால், ''ஒரே ஒரு மனிதனுக்கு உதவி செய்வதற்காக இதுபோல் இருபதாயிரம் உடல்களைக் கூட நான் விடத் தயார்'' என்பார். ''யோகியான தாங்கள் தங்கள் மனோசக்தி கொண்டு நோயைத் தீர்த்துக் கொள்ளலாகாதா?'' என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் மிக மென்மையாக, ''நண்பா, இந்த மனம் ஆண்டவனுக்கு அர்ப்பணமாகிவிட்டது. அதை அங்கிருந்து திருப்பி எடுத்து வந்து, ஆன்மாவை அடைக்கும் கூண்டாகிய இவ்வுடலின்மீது செலுத்தச் சொல்கிறாயா?'' என்றார்.

அவரது உடல்நிலை மிகவும் மோசமாகி விட்டது. கூட்டமும் அதிகரித்தது. அவர் உபதேசிப்பதும் அதிகரித்தது. ''என்னால் பேச முடியும் வரை நான் உபதேசித்தேயாக வேண்டும்'' என்றார். அப்படியே செய்தார்.

வேதங்கள் கூறும் பரம புனிதமான பதத்தை மொழிந்தவாறு சமாதி அடைந்தார்.

அத்தியாயம் 30
கயவரை விரட்ட வழி



சாருலதா
கி. ராஜேந்திரன்

ஒரு நோயாளியின் பழைய எக்ஸ்ரே படம் வேணுகோபாலுக்குத் தேவையாக இருந்தது. புதிய எக்ஸ்ரே படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக் குறிப்பிட்ட கால அளவில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நிர்ணயிக்க விரும்பினான்.

''பழைய எக்ஸ்ரே படத்தை உங்களிடம்தான் விட்டு விட்டுப் போய் விட்டேனுங்க'' என்று நோயாளி சொல்லவே, மேஜை டிராயர்களை ஒவ்வொன்றாக இழுத்துப் பார்க்க ஆரம்பித்தான். தேடியது கிடைத்தது. அதற்கு முன்னால் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு காலண்டரும் அகப்பட்டது.

அதை எடுத்துப் பிரித்தான். காந்திஜியின் ஆறு படங்களுடன்கூடிய காலண்டர் அது. ஊட்டியில் சாருலதாவின் பங்களாவில் அந்தக் காலண்டர் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தனக்குக் கோபம் வந்ததும், காந்திஜியின் படங்கள் அந்த வீட்டில் மாட்டப் படுவது பொருத்தமாயில்லை என்று தனக்குத் தோன்றவே, அதனைக் கழற்றிச் சுருட்டிப் பெட்டியில் போட்டுக் கொண்டு வந்ததும் அவன் நினைவுக்கு வந்தன. சென்னை திரும்பிய பிறகு, தலைசிறந்த ஓர் ஓவியர் தீட்டிய அந்த ஆறு வண்ணப் படங்களையும் ஃபிரேம் போட்டு மாட்ட வேண்டும் என்று நினைத்து டிராயரில் வைத்துப் பூட்டியவன் அதைப் பற்றி அப்பால் மறந்தே போனான்.

இப்போது காலண்டரைப் பிரித்துப் பார்த்தபோது காந்திஜி அவனை நோக்கிப் பொக்கை வாய் திறந்து சிரித்தார். 'ஒரு வேளை ஏளனப் புன்சிரிப்பா அது?' இல்லை, அனுதாபத்துடன் கூடிய அன்புச் சிரிப்புதான் என்ற முடிவுக்கு வந்தான் வேணுகோபால்.

எக்ஸ்ரேக்களை ஆராய்ந்து பார்த்து, அன்றையக் கடைசி நோயாளிக்கு மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடுமாறு கூறி, தைரியமும் சொல்லி அனுப்பிவிட்டு அமர்ந்தவன், சுருண்டிருந்த அந்தக் காலண்டரை மறுபடியும் எடுத்துப் பிரித்தான்.

''மே ஐ கம் இன்?'' என்று குரல் கேட்டது.

வேணுகோபால் நிமிர்ந்தான். ''வாங்க, சாரங்கன்! வாங்க!'' என்று வரவேற்றான். காலண்டரை மேஜையின் மேல் போட்டு விட்டு எழுந்து போய்க் கைகுலுக்கினான்.

''ஒரு பர்ஸனல் மேட்டர்'' என்றான் சாரங்கன்.

''என்ன விஷயம்? உள்ளே போய்ப் பேசுவோம்'' என்ற வேணுகோபால், கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ''கன்ஸல்டிங் அவர்ஸ் முடிந்து விட்டது; கதவைச் சாத்தி விட்டு வருகிறேன்.''

சற்று நேரத்துக்குப் பின் அவர்கள் வேணுகோபாலின் வீட்டு வரவேற்பு அறையில் இரண்டு கண்ணாடி டம்ளர்களில் நிரம்பியிருந்த மோரை உறிஞ்சியபடி அமர்ந்திருந்தார்கள். ''என்னிடம் வருகிற பேஷண்டுகளில் முக்கால் வாசிப் பேர்களுக்கு நான் கொடுக்கிற அட்வைஸ் 'மோர் சாதம் சாப்பிடு; மற்றதையெல்லாம் விலக்கு' என்பது தான்.''

''ஆரோக்கியமான டிரிங்க்!'' என்று ஆமோதித்தான் சாரங்கன்.

''சரி, நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லுங்கள். பத்து நாளைக்குப் பிறகு சாரு ஆபீசுக்கு வந்தாளில்லையா?''

சாரங்கன் தான் எடுத்து வந்திருந்த சிறிய டேப் ரிகார்டரை மேஜையின் மேல் வைத்தான்.

''உங்களைப் பொறுத்தவரை சாருலதாவைப் பற்றிய ரகசியம் ஏதுமில்லை என்று அவளே சொல்லியிருக்கிறாள்.

அந்தத் தைரியத்தில்தான் இதனை எடுத்து வந்தேன்.''

''என்ன இது? டிரான்ஸிஸ்டர் ரேடியோவா?''

''இல்லை. டிரான்ஸிஸ்டரைஸ்ட் டேப் ரிகார்டர். இதைக் கேளுங்கள்!'' இப்படிச் சொல்லி விட்டுச் சாரங்கன் ரிகார்டரை இயக்கினான். சாருலதாவின் குரல் ஒலித்தது. மஹிபாலும் சந்திரபாலும் கொச்சைத் தமிழிலும் அரை குறை ஆங்கிலத்திலும் பேசுவதும் கேட்டது.

''யதேச்சையாக ரிகார்ட் ஆகிவிட்டது இந்தச் சம்பாஷணை. நான் சாருலதாவின் உத்தரவுகளை இதில் பதிவு செய்து கொள்வது வழக்கம். ஒன்றா, இரண்டா? மேலே மேலே காரியங்களைச் சொல்லிக் கொண்டே போவாள். மறக்காமலிருக்க அவ்வப்போது ரிகார்ட் செய்து விடுவேன். நேற்று மஹிபாலும் சந்திரபாலும் வந்திருந்த போது, இயங்கிக் கொண்டிருந்த இதை நிறுத்த மறந்து விட்டேன் போலிருக்கிறது.''

''அவர்களும் இதைக் கவனிக்கவில்லை!''

''பார்த்திருந்தால்கூட இதை டேப் ரிகார்டர் என்று நினைத்திருக்க மாட்டார்கள். சற்று முன் நீங்கள் தவறான முடிவுக்கு வந்தது போல் அவர்களும் இதை டிரான்ஸிஸ்டர் ரேடியோ என்றே எண்ணி யிருப்பார்கள்.''

''கரெக்ட்! ஏமாந்து போய்ப் பேசி விட்டார்கள்; அவர்கள் குரல் பதிவாகி விட்டது.''

''முன்னாலேயே அவர்களுக்குத் தெரியாமல் இந்தவிதமாக நான் அவர்கள் பேச்சை ரிகார்ட் செய்திருக்கலாம். ஏனோ தோன்றாமல் போய் விட்டது. எதிர்பாராதவிதமாக இந்த ரிகார்டிங் கிடைத்த பிறகு, 'அடடா! இதை முன்னாடியே திட்டமிட்டு நாம் செய்திருக்கலாமே' என்று எண்ணிப் பார்க்கிறேன்.''



"முன்னாலேயே தோன்றியிருந்தாலும்கூட அதனால் என்னத்தைச் சாதித்துவிட முடியும் உங்களால்?"

"அதைப் பற்றி யோசனை கேட்கத்தான் உங்களிடம் வந்தேன், வேணு! இதை வைத்துக் கொண்டு அந்த மஹிபாலையும் சந்திரபாலையும் விரட்டி அடித்துவிட முடியாதா ?"

"அதாவது பிளாக்மெயில் செய்கிறவர்களையே பிளாக்மெயில் செய்துவிடலாம் என்கிறீர்கள்!"

"எக்ஸாட்லி!"

வேணுகோபால் சில விநாடிகள் சிந்தித்தான். பிறகு, "நீங்கள் சொல்வது சரிப்பட்டுவரும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றான். "பிளாக்மெயில் செய்



வதென்பது பெருங் குற்றம்தான். அந்தக் குற்றத்தை அவ்விருவரும் புரிகிறார்கள் என்பதற்குச் சான்றும் இதில் இருக்கிறது."

"பின்னே என்ன? டேப் ரிகார்டர் சாட்சியம் கோர்ட்டில் செல்லுபடியாகாதா ?"

"அந்தச் சட்ட பாயிண்டெல்லாம் எனக்குத் தெரியாது. கோர்ட்டில் இதைச் சாட்சியமாக எடுத்துக்கொள்ளா விட்டாலும் போலீஸார் மஹிபால் — சந்திரபால் மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பிப்பதற்கு இந்தச் சாட்சியமே போதும். பிறகு தேவையான சாட்சியங்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கேஸை உருவாக்குவது அவர்கள் பொறுப்பு."

"பிறகு வேறு என்ன இடைஞ்சல்?"

"சாரங்கன்! நமக்கு இருக்கும் உற்சாகத்தில் சில சமயம் அடிப்படையான விஷயங்களை மறந்து போய் விடுகிறோம். போலீஸாரிடம் இதைக் கொடுத்து, 'ஆக்ஷன்' எடுக்கச் சொல்கிறோம் என்று வையுங்கள். கோர்ட்டில் கேஸ் வரும்போது எதற்காகச் சாருலதாவை இவர்கள் பிளாக்மெயில் செய்கிறார்கள் என்ற விவரமும் வெளியாகுமல்லவா? அதைச் சாரு பொருட்படுத்த மாட்டாள் என்றால் இப்போது இவர்களுக்கு ஏன் அவள் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்துத் தொலைக்க வேண்டும் ?"


"ஹௌ ஸ்டுபிட் ஆஃப் மி" என்றான் சாரங்கன். அவனுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. "நான் கிளம்புகிறேன்" என்று சொல்லி விடைபெற்றான்.

"சாரங்கன் ! இந்த ரிகார்டரை என்னிடம் கொடுத்துவிட்டுப் போங்கள். சாரு, 'ரிகார்டர் எங்கே?' என்று கேட்டால் 'ரிப்பேராகி விட்டது; பழுது பார்க்கக் கம்பெனியில் கொடுத்திருக்கிறேன்' என்று சொல்லி விடுங்கள்."

"இதை வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"இது ஒரு முக்கியமான சாட்சியம் என்பதை மறுப்பதற்கில்லை; பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்."

"ரிப்பேராகி இருப்பதாகச் சாருவிடம் எத்தனை நாளைக்குச் சொல்லிச் சமாளிக்க முடியும் நான்?"



பாதுகாப்பிற்கு ஒரு பூட்டு உள்ளதெனில் அது நவ-தால் ஒன்றே ஒன்றுதான்!

நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப்பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற்கேற்ற முறையில் செய்யப்பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது. தயாரிப்பவர்கள்: கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடையவர்கள்.

4 சைஸ்கள்:
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் — எப்போதும் நம்பகமான பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்

''ஒரு வாரம். பத்து நாட்கள்?''

''அதற்குள் ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''ஆமாம்.''

''என்ன நடக்கும்?''

''மஹிபாலேயும் சந்திரபாலேயும் ஒழித்துக் கட்ட எனக்குத் தெரிந்த வரையில் இரண்டே வழிகள்தான் இருக்கின்றன.''

''என்ன அவை ?''

''ஒன்று, சாருலதா தன் கடந்த கால வாழ்க்கை பற்றிய ஒரு சில விவரங்கள் வெளியானல் பரவாயில்லே என்று தைரியத்துடன் போலீஸாரை அணுக வேண்டும்.''

'' அது நடக்கப் போவதில்லே ; இரண்டாவது ?''

''அவன் என்னேக் கல்யாணம் செய்து கொண்டுவிட வேண்டும்.''

''திருமணம் நடந்துவிட்டால் அந்த இரண்டு ராஸ்கல்களும் வாலேச் சுருட்டிக் கொண்டு விடுவார்களா?''

''நிச்சயமாக !''

''அது எப்படி?''

''எப்படி, எதனுல் என்று சாருலதாவிடம் மட்டும்தான் விவரித்துக்கூறலாம் நான். உங்களிடம் சொல்லும் உரிமை எனக்கு இல்லே.''

''அப்படியானுல் சீக்கிரமாகக் கல்யாணச் சாப்பாடு போடுங்கள். பெஸ்ட் ஆஃப் லக்!''

''தாங்க்யூ'' என்று கூறிச் சாரங்கனே வழி அனுப்பி வைத்த வேணுகோபாலின் குரலில் நம்பிக்கை தொனிக்கவில்லே.

அத்தியாயம் 31

"நான் தேவதை அல்ல!"

'அபிலாஷை' என்ற பொருத்தமான பெயர் கொண்ட குதிரை முதல் ரேஸில் முதலாவதாக வந்தது. 'ஃபோட்டோ ஃபினிஷ்' தீர்ப்பு. ஜாக்பாட்டில் வெற்றி பெறக் கூடியவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு மேல் என்று இந்தக் கட்டத்தில் அறிவிப்புப் பலகை கூறியது.

'பாக்'ஸை விட்டுக் கிளம்பிக் கீழே இறங்கி வந்தாள் சாருலதா.

''ஹலோ சாரு! எனி டிப்ஸ்?''

''நாலு—ஆறு என்று வாங்குங்கள். அதையே திருப்பிப் போடுங்கள்.''

''ஷ்யூர் திங்கா?''

''ஏன் என்ன சந்தேகமாகக் கேட்கிறீர்கள்? வேங்கடாசலபதி கைவிட மாட்டார்.''

''சுவாமி பெயரை இதில் எதற்கு இழுக்கிறீர்கள்?''

''திருப்பதியில் முடியைக் 'காண்ட்ராக்ட்' எடுத்து, ஏற்றுமதி செய்து கிடைத்த பணத்தில் குதிரை வாங்கியிருக்கிறுன்.''

''இஸ் இட்?''

''சிலபேருக்கு யார் எதைச் சொன்னுலும் சந்தேகம்தான்!''

சாருலதா மேலே நடந்தாள். அடுத்த ரேஸுக்கான குதிரைகளே ஒரு வட்டப் பாதையில் சகலரும் காண மெல்ல நடத்திச் சென்று கொண்டிருந்தனர். அவற்றைக் கூர்ந்து ஆராய்ந்தாள் சாருலதா. சில சமயங்களில் குதிரையின் தோற்றம், நடை போன்றவை அவளுக்கு உபயோகமான தகவல்களேத் தெரிவித்து வெற்றி பெறும் வாய்ப்புக்களே அதிகரித்ததுண்டு.

மரத்தடிக் கடையில், ''கோல்ட் ஸ்பாட் குதிரைதான் காலே வாரிவிட்டது; கோல்ட் ஸ்பாட் டிரிங்கையாவது குடித்து வைப்போம்'' என்று ஒரு நண்பரிடம் சொல்லிக் கொண்டே, காசு கொடுத்துப் பாட்டிலே வாங்கிய டாக்டர் முதலியார் சாருவைப் பார்த்துவிட்டார்.

''என்ன சாரு, உன் குதிரை எப்போ ஓடுது?'' என்ருர்.

''ஆருவது ரேஸில்; வாட்ச் ஃபார் இட்!''

''என்ன சொல்கிருன் உன் டிரெயினர்?''

''அவரைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஆளேக் காணும். இப்போ வருவார்.''

மர நிழலில் ஒரு நாற்காலியை 'டிராக்'கை நோக்கி இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள் சாருலதா. கையில் இருந்த ரேஸ் புக்கைப் பிரித்து 'டிரிபிள் ஈவெண்ட்'டுக்குக் குதிரைகளேப் பொறுக்க ஆரம்பித்தாள்.

* * *

கார் பாஸ் இல்லாததால் வேணுகோபாலின் வாகனம் போலீஸாரால் வலது பக்கம் திருப்பி விடப்பட்டது. கிண்டி ரயில்வே ஸ்டேஷன் அருகே வண்டியை நிறுத்திப் பூட்டிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான் அவன்.

ரேஸ் ஆரம்பித்து விட்டது என்றுலும் நெருக்கி அடித்துக் கொண்டு

ஜனத் திரள் இன்னமும் வந்துகொண்டே இருந்தது. அவசரம் அவசரமாய் ரேஸ் கோர்ஸ் வாசலை நோக்கி நடந்த அந்தக் கூட்டத்தில் முக்காடிட்ட மாமிகள் இருவரும் இருந்தனர்.

அவர்களில் ஒருத்தி தன் வீட்டுக்கு மூன்றாவது வீட்டில் சமையல் வேலை செய்து மாதம் முப்பது ரூபாய் சம்பாதிப்பவள் என்பது வேணுகோபாலுக்குத் தெரியும். அவன் மனம் வேதனைப் பட்டது. 'அக்ஸெப்டன்ஸ்' வெளியான வெள்ளிக்கிழமை முதல் காரியாலய வேலைகள் எதையும் கவனிக்காமல் ரேஸ் புத்தகத்திலேயே கண்ணையும் கருத்தையும் செலுத்தியிருந்த குமாஸ்தாக்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். குபேரர்களுடன் போட்டியிடக் கூடைக்காரிகளும் முன்வரும் இந்த அபத்த நிலை அவனை ஆச்சரியத்திலும் விசனத்திலும் ஆழ்த்தியது. இத்தனைக்கும் மேலாக அவன் சிந்தனையை ஆக்கிரமித்த ஒரு பிரச்னை: 'சாருலதாவை இந்தக் கூட்டத்தில் எப்படிக் கண்டுபிடிப்பது?' நாலா பக்கமும் நோட்டம் விட்டவனுடைய கண்களுக்குப் பத்து ரூபாய் கேட்டும் ஐந்து ரூபாய் கேட்டும் தனித் தனியே இருப்பது தென்பட்டது.

பத்து ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான் அவன்.

புக்கீஸ் அவனுக்குப் புரியாத பாஷையில் ஏதோ சொல்லிக் கொண்டிருக்க அவர்களைச் சுற்றிலும் ஏகக் கூட்டம்.

''வெல்கம் வேணு! எங்க கோஷ்டியில் சேர்ந்துட்டே! குட் பாய்!''

''டேய், நல்லவேளை உன்னைப் பார்த்தேன்.''

''நீ எங்கேடா என்னைப் பார்த்தாய்? நானல்லவோ உன்னைப் பார்த்தேன்?''

''அது எப்படியாவது இருக்கட்டும்; எனக்கு அவசரமா சாருலதாவைத் தேடியாகணும்.''

''அவளைப் பார்க்கணும்னு சொல்லிக்கிட்டு இங்கே நின்னா? மெம்பர்ஸுக்கு உண்டான ஸ்பெஷல் என்கிளோஷருக்குப் போ!''

''அப்படி ஒண்ணு இருக்கா?''

''அது கெட்டுது போ! ஆமாம்; உனக்குத்தான் ரேஸிங் பற்றி ஏ.பி.ஸி. தெரியாதே! அதோ அந்தப் பக்கம் போகணும்.''

வேணுகோபால் விரைவாக நடக்க ஆரம்பித்தான்.

''நில்லு, நில்லு! கிளப் மெம்பரா நீ? கெஸ்ட் பாட்ஜ் வைச்சிருக்கியா?''

''இல்லையே; இரண்டும் இல்லை.''

''பின்னே? உள்ளே விட மாட்டார்களே?''

''நீதான் ஒரு வழி சொல்லணும்.''

''நான் என்ன பண்ண முடியும்? இங்கேயே நில்லு. யாராவது ரேஸ் கிளப் மெம்பர் உனக்குத் தெரிந்தவரு இந்தப் பக்கம் வரச்சே அவரைப் பிடிச்சுக்கோ. பதினைந்து ரூபாய் பணம் கொடு. அவன் கையெழுத்துப் போட்டு உனக்கு பாட்ஜ் வாங்கிக் கொடுப்பான்.''

நண்பன் புக்கீயிடம் பணம் கட்டப் போய் விட்டான்.

வேணுகோபாலுக்கு வெறுமனே நின்று கொண்டிருப்பது என்னவோ போலிருந்தது. நல்ல வேளையாகச் சில நிமிஷங்களில் அவனுக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் ரேஸ் கிளப் மெம்பர் மெடலை மாட்டிக் கொண்டு அந்தப் பக்கமாக வந்தார். அப்புறம் காரியம் சுலபமாய் முடிந்தது.

மின்னி ஸ்கர்ட் முதல் மடிசார் உடுத்திய புடவை வரை பலதரப்பட்ட நாகரிகங்களை மெம்பர்ஸ் என்க்ளோஷரில் காண முடிந்தது. குதிரைப் பந்தயத்துக்கு இத்தனை பெண்மணிகள் வரக் கூடும் என்று வேணுகோபாலிடம் அன்றுவரை யாரேனும் சொன்னால் கூட நம்பியிருக்க மாட்டான். குதிரை வால் கொண்டை முதல் பந்துக் கொண்டை வரை; சரசரக்கும் பட்டுப் புடவை தொடங்கி மெல்லிய நைலான் ஸாரி வரை; கருங்காலிக் கட்டையில் செதுக்கியது போன்ற கரிய எழில் மேனி முதல் தந்தத்தில் கடைந்தெடுத்தது போன்ற வனப்பு மிக்க பாவை வரை; அழகுப் போட்டியில் முதல் பரிசு வாங்கக்கூடிய மங்கைமுதல் அலங்காரப் போட்டியில் முதலிடம் பெறக் கூடிய நங்கைவரை அங்கே விதம் விதமான காட்சிகள், கோலங்கள். 'இது என்ன குதிரைப் பந்தயமா? அல்லது ஃபாஷன் பரேடா?' வேணுகோபால் திகைத்தான்.

மூன்றாவது ரேஸ் கோடம்பாக்கம் பிளேட் முடிந்ததும் ஜாக்பாட்டைப் பகிர்ந்து கொள்ளப் போகிறவர்கள் எண்ணிக்கை இருநூற்று சொச்சத்துக்குக் குறைந்து விட்டது.

சாருலதாவுக்குப் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான் வேணுகோபால்.

அவள் திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டாள். ''வேணு! நீங்களா? இங்கேயா?''

''என்னை இங்கு சந்தித்தால் உனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும் சாரு. உன்னிடம் உடனே பேச வேண்டும் என்று தோன்றியது, வந்தேன்.''

''அப்படி என்ன அவசரம்?''

''அவசரம்தான்; வா போவோம்.''

''எங்கே?''

டாப் ரகசியம்!



புதிய **பினகா டாப்** மட்டிலுமே, மறைந்துள்ள பாக்டீரியாக்களை ஒழிப்பதற்கென, பற்பசையை வாயின் எல்லாப் பகுதிகளிலும்—பல்லிடுக்குகளிலும், ஈறுகளிலும்—பரப்பும் ரகசியப் பொருள் அடங்கியுள்ளது. எனவே நீங்கள் நாள் முழுவதும் வாயில் 'டாப்' தூய்மையைப் பெறுவீர்கள்!


என்ன சான்று என்று கேட்கிறீர்களா? ஆராய்ச்சிக் கூடத்தில் நிரூபிக்கப்பட்ட இந்தச் சோதனையை நீங்களே செய்து பாருங்கள்!



முதலில், கண்ணாடித் தட்டு ஒன்றில் சிறிதளவு தண்ணீர் ஊற்றிக் கொள்ளுங்கள். இந்த நீரில் சிறிதளவு கரிப் பொடி அல்லது கலர்ப் பொடியைத் தூவுங்கள்.



சிறிதளவு நீரில் பினகா டாப் கலந்து, கரைசலின் ஒரு துளியை கண்ணாடித் தட்டின் நடுவில் தெளியுங்கள்.



பினகா டாப் எப்படி எல்லாத் திசைகளிலும் அதி வேகமாகப் பரவி... அழுக்கைஅகற்றி, தண்ணீரை நிர்மலமாக ஆக்குகிறது என்பதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.



பினகா டாப்... தூய்மையான வாய்ப் பாதுகாப்பின் 'டாப்' ரகசியம்!

mcm/ciba/150a/tam

''எங்கே வேணுமானாலும் போக லாம். இந்தக் கூட்டத்தை விட்டுக் கிளம்பினால் சரி.''

சாருலதா கடிகாரத்தைப் பார்த்தாள். ''மணி மூன்றே முக்கால் ஆகிறது. ஆறு மணிவரையில் காத்திருக்கக் கூடாதா?''

''காத்திருப்பதானால் நான் இங்கே ஏன் ஓடி வருகிறேன்? உன்னிடம் மனம் விட்டுப் பேசத் துடித்துக் கொண்டிருக்கிறேன் நான். புரிய வில்லையா உனக்கு?''

''குட் ஆப்டர்நூன் சாரு!'' என்றான் அப்போது அங்கு வந்த அண்டோனி.

''எப்படி இருக்கிறது நிலைமை? ஒன்பதாயிரம் சம்பாதித்துத் தருவீர்களா?'' என்று டிரெய்னரைக் கேட்டாள் சாரு.

''நீங்க ஏன்ஜெல்லாக நடந்துகொண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டான் அவன்.

''நானா? ஆர் யூ கிட்டிங்? வர்த்தக உலகில் புகுந்த பிறகு தேவதையாக விளங்குவதாவது? 'டெவில்'லாகத்தான் இயங்கலாம்.''

''நீங்க ஏன்ஜெல்லாக இல்லாதவரை 'ஐ ஆம் நோ ஏன்ஜெல்' ஜெயிக்கும், கவலைப்படாதீர்கள்!''

''வேணு, என் குதிரையின் பெயரைக் கேட்டீர்களா? பொருத்தமாயில்லே?''

''எனக்கு இந்த ஜோக் பிடிக்கவில்லே'' என்றான் வேணுகோபால்.

சாருலதா சிரித்தாள். ''டாக்டர் வேணுகோபால் எப்பவுமே ரொம்ப ஸீரியஸ்தான்'' என்றாள் அண்டோனியைப் பார்த்து. ''வேணு! மீட் அண்டோனி.''

அறிமுகப் படலம் முடிந்ததும் அவள் டிரெய்னரை நோக்கிச் சொன்னாள் : ''இன்று நம் குதிரை முதலாவதாக வந்தால் உங்களுக்கு ஒரு விசேஷப் பரிசு வைத்திருக்கிறேன், தருவேன். இரண்டாவதாக வந்தால் கிடையாது!''

''இதென்ன அநியாயம்? கொண்டு வந்த பரிசை யாராவது திருப்பி எடுத்துச் செல்வார்களா?'' வேணுவிடம் புகார் செய்தான் அவன்.

''அப்படியானால் ஜாக்கிக்குக் கொடுத்து விடுகிறேன். முதலாவதாக வந்தால்தான் உங்களுக்கு. என்ன சொல்கிறார் ராஜ்?''

''ராஜ் என்பவர்தான் ஜாக்கியா?'' வேணுகோபால் கேட்டான்.

''ஆமாம்'' என்று அவனுக்குப் பதிலளித்து விட்டு அண்டோனி சாருலதா பக்கம் திரும்பினான். '' 'வெய்ட் ஏற்றி விட்டார்கள். ஆனாலும் தாக்குப் பிடிக்கலாம்' என்று ராஜ் நம்பிக்கையுடன்தான் பேசுகிறான். பாக்ஸுக்குப் போவோமே.'' இப்படிச் சொல்லி விட்டு விங்குகள் இருந்த திசை நோக்கி நடந்தான் அண்டோனி.

அவனை முன்னே போகவிட்டுத் தாமதித்து நின்ற வேணுகோபால், சாருவின் கையைப் பிடித்தான். ''என்னோடு வா, சாரு.''

''பிளீஸ், வேணு! இந்த ஒரு ரேஸ் முடியும் வரையாவது பொறுமையாக இருங்கள். 'கோல்ட் கப் ஈவெண்ட்.' எலிஸபெத் ராணி சென்னைக்கு விஜயம் செய்தபோது ஏற்படுத்தப்பட்ட பரிசு. பார்க்க வேண்டாமா? வாருங்கள் போவோம்'' என்றாள். (தொடரும்)



டாக்டரின் ஆசை !

மேற்கிந்தியக் கிரிக்கெட் பந்து வீச்சு நிபுணர் கில்கிரைஸ்ட் கொஞ்சம் கரடுமுரடான ஆசாமி என்று பெயர் பெற்றவர். அவர் பல தடவை வேண்டுமென்றே சண்டையை விலைக்கு வாங்கிக் கொள்வார். அவருடைய வெளிப்படையான விமர்சனங்கள் அவருக்குப் பல கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளன. அவரது பந்து வீச்சு சரியானது தானா என்பது பற்றிக் கிரிக்கெட் உலகமே கூடி விவாதித்தது. அவரது மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது. அவர் ஒவ்வொரு ஓவர் பந்து வீச்சின்போதும் சளைக்காமல் எந்தவித கடுமையான வெய்யிலிலும் களைப்பின் அறிகுறியே தென்படாமல் பந்து வீசுவது அனைவருக்கும் வியப்பைக் கொடுக்கிறது. இந்த அமானுஷ்ய சக்தி இவருக்கு எப்படி வந்தது என்பது கிரிக்கெட் ரசிகர்களுக்குள் அடிபடும் பிரச்னை. ஏன், தலைசிறந்த டாக்டர்களுக்குக்கூட இது வியப்பைத் தந்துள்ளது. ஒருதடவை இதய நிபுணரான டாக்டர் ஒருவர் மேற்கிந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விருந்தின் கில்கிரைஸ்டையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். இதைக் கண்டு மேற்கிந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர் கன்ஹாய் டாக்டரிடம், ''கில்கிரைஸ்டையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே காரணம் என்ன?'' என்று கேட்டார்.

''இந்தச் சின்ன மனிதர் கில்கிரைஸ்டைச் சோதனை செய்ய விரும்புகிறேன். இந்த அதிசய மனிதருக்கு என்ன பரிசு வேண்டுமானாலும் தரச் சித்தமாக இருக்கிறேன். இவர் மட்டும் இவரிடமுள்ள இருதயத்தைப் பரிசோதிக்க என்னை அனுமதித்தால்!'' என்றார், இருதய நிபுணர். -- குண்டுமணி

MOD
MODE
MODERN
MODERNBRE
MODERN BREAD




வளமுடன் வைட்டமின் 'ஏ' ஊட்டம் செய்யப்பட்டது 'மாடர்ன் ரொட்டி' ஆரோக்கியமான கண்களுக்கு இதுவே தேவை

வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையினால் அநேக இந்திய மக்கள் கண்கள் வலிமை குன்றி பார்வை இழக்கின்றனர். 800 கிராம் எடையுள்ள ஒரு மாடர்ன் ரொட்டி மட்டிலுமே ஒருவருக்கு ஒரு நாளைய வைட்டமின் 'ஏ' தேவையைப் பூர்த்தி செய்கிறது. தவிர வைட்டமின் பி1, பி2 மற்றும் லைசினும் சேர்ந்தது அது. சுட்ட மணம் மாறாத மாடர்ன் ரொட்டியில் புரதச் சத்துக்கள், வைட்டமின்கள் மற்றும் தாதுப் பொருள்கள் அதிகமாகவே சேர்க்கப் பட்டிருக்கின்றன. இந்திய உணவில் இவை அனைத்தும் மிகவும் தேவை.

எந்த உணவுடனும் இணைந்து சுவை கூட்டுகிறது மாடர்ன் ரொட்டி.
சிறந்ததையே உங்கள் குடும்பத்திற்கு உகந்தவை.

அவர்களுக்குக்கொடுங்கள் மாடர்ன்—ஒரு சத்தான ரொட்டி.



மாடர்ன்

இந்தியாவிலேயே
மெத்தவும் சத்துள்ள ரொட்டி

மாடர்ன் பேகரீஸ் (இந்தியா) லிமிடெட். (ஒரு இந்திய அரசினர் நிறுவனம்)
பேகரீஸ்:
அகமதாபாத். பெங்களூர். பம்பாய். கல்கத்தா. கொச்சி. டெல்லி. ஹைதராபாத். கான்பூர். சென்னை.

விவசாயத்தில் இன்று



எனது சாதனை

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு பஞ்சாயத்து யூனியன், கோடங்கிபாளையம் கிராமத்தில் எனது தோட்டக்கால் பூமியில் சரியாய் எழுபது செண்ட் நிலத்தில் ஐ.ஆர்.-8 நெல் கடந்த 15–1–70 அன்று அறுவடை செய்தேன். அதன் முழு விவரம் பின்வருமாறு:

கடந்த செப்டம்பர் இரண்டாந் தேதி யன்று நாற்றங்காலில் நெல் விதைக்கப்பட்டது. இருபத்திநான்காம் தேதி ஜப்பான் முறையில் நடப்பட்டது.

நடவின்போது அடியுரமாகப் பத்து வண்டி தொழு உரமும், டை அமோனியா பாஸ்பேட், மூரியேட்டா பொட்டேஷ், யூரியா, ரகத்துக்கு 50 கிலோவும், 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கும் போடப்பட்டன.

பின்னர் இரு முறை யூரியா 50 கிலோ மேலுரமாகப் போடப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு முறைகள் கவனமாக அநுசரிக்கப்பட்டன.

கடந்த 15–1–70, 135வது நாளில் அறுவடை செய்து நன்கு உலர்த்தித் தூற்றி எடுத்ததில் 52 பட்டணம் படி கொண்ட மூட்டைகள் 36 கிடைத்தன. இதன் எடை மூட்டை ஒன்றுக்கு 60 கிலோ வீதம் 2160 கிலோ காணப்பட்டது. இதை ஓர் ஏக்கருக்குக் கணக்கிட்டுப் பார்க்கையில் 3000 கிலோ அல்லது 52 படிகள் கொண்ட 50 மூட்டைகளாகின்றன.



இரண்டு ஆண்டுகளுக்கு முன் இதே எழுபது செண்ட் நிலத்தில் ஆடுதுறை 27 இருபத்தேழு மூட்டைகள் கண்டுமுதல் காணப்பட்டது. அது ஏக்கருக்கு 2160 கிலோ எடையாகிறது.

அதற்கு முந்திய ஆண்டில் கார்த்திகைச் சம்பா எனப்படும் டி. எம். 6 — பதினைந்து மூட்டைகள்தான் கிடைத்தன.

ஒரு யோசனை

தஞ்சை ஜில்லாவிலே பொதுவாகப் பூமிகள் உள்ளங்கை போன்று சமதை இருக்கும்.

கோவை ஜில்லாவில் அதற்கு நேர்மாறான நிலை. பொதுவாகப் பூமிகள் ஒரு பக்கம் சரிவாகவே காணப்படுகின்றன. இதனால் மழைக் காலங்களில் மேல் மண் அரிக்கப்பட்டுப் பூமி பிரயோசனமற்றதாகி விட்டது.

மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் பல இடங்களில் சிறு சிறு வரப்புகள் போடப்பட்டு வருகிறது. நாளாவட்டத்தில் அந்த வரப்புகளும் அழிந்து போகின்றன.

செய்ய வேண்டுவது யாதெனில், சரிவுள்ள பூமிகளை யெல்லாம் புல்டோசர்களால் சமன் செய்து, அதன் பிறகு நான்கு புறமும் உயரமான வரப்புக்கள் போடப்பட வேண்டும்.

இதைச் சர்க்கார் செலவிலே, பலவந்தமாகச் செய்து அதற்காகும் செலவைப் பூமியின் சொந்தக்காரர்களிடமிருந்து இருபது வருடங்களில் சன்னஞ்சன்னமாக வசூலித்துவிடலாம்.

ஒவ்வொரு பிளாக்கிலும் குறைந்தது இருபது டிராக்டர்கள் வாடகைக்கு விட ஏற்பாடு செய்ய வேண்டும்.

எல்லாவற்றையும் விட அதி முக்கியமாக டிராக்டர்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள், இரும்புக் கலப்பைகள், இதர விவசாயக் கருவிகள் பழுது பார்க்க ஒரு வொர்க்ஷாப் ஒவ்வொரு பிளாக்கிலும் இருக்கச் செய்ய வேண்டும். அவற்றில் கிராமவாசிகளுக்குப் பயிற்சியும் அளிக்க வேண்டும்.

சிங்கராம்பாளையம் **கோவை அ. அய்யாமுத்து**

லஞ்சம் ஒழியுமா ?

நான் என் புஞ்சை நிலத்துக்கு, மின் விசை மோட்டார் — பம்பு அமைத்தேன். 'பம்பு செட்' அமைக்கத் தேவையான எல்லா உரிமைப் பத்திரங்களும் பெற்றுக் கொண்டேன். பதினைந்து நாட்களுக்கு முன் கம்பம் நட்டனர். இதற்காக என்னிடம் ரூபாய் கேட்டனர். பிறகு கம்பி இணைத்தனர். பெரிய மீட்டர் வைக்கும் பெட்டியை, கம்பி இழுத்த பதினைந்து நாட்களுக்குப்பின் அமைக்கும்படி கேட்டேன். 'பதினைந்து ரூபாய் இருந்தால் வா' என்று கூறினர். பத்து ரூபாய் கொடுத்தேன். இன்னும் சர்வீஸ் கொடுக்கவில்லை.

ஐ. ஆர். — 8 நெல் நட்டு இருப்பதால், நீர் அதிகமாக வாங்குகிறது. கவலையில் இறைத்தால் நீர் போதவில்லை. எல்லா வேலையும் ஆகிவிட்டதே, சர்வீஸ் இன்று தருவார்கள், நாளை தருவார்கள் என்று எண்ணிக் காத்திருக்கிறேன். சர்வீஸ் என்று தருவீர்கள் என்றால், 'ஒரு வாரமாகும். பீஸ் கட்டை இல்லை' என்று போக்குக் காட்டுகின்றனர். அக்கம் பக்கம் உள்ளவர்களைக் கேட்டேன். அவர்கள், 'கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் இப்போதே சர்வீஸ் தருவார்கள்' என்று கூறினர். சர்வீஸ் தரப் பத்து ரூபாய் கேட்பார்கள் என்று பலர் கூறுகின்றனர். இவற்றை லஞ்ச ஒழிப்பு அதிகாரிக்கு எழுதி அனுப்பினால், அவர்கள் இல்லாத கேள்விகள் கேட்கின்றனர். 'எந்த தேதி? நோட்டாகக் கொடுத்தாயா? சில்லறையாகக் கொடுத்தாயா? கடனாகக் கொடுத்தாயா?' என்று குறுக்கு விசாரணை செய்கின்றனர். படிக்காத விவசாயிகள் எவ்வாறு இவற்றை நிரூபிக்க இயலும்? ரூபாய் இல்லை எனில், வேலை நடக்கமாட்டேன் என்கிறது. 'தலைவிதி' என்று கொடுத்து விடுகிறோம். ஒரு 'சர்வீஸ்' வாங்குவதற்குள் முப்பத்தைந்து ரூபாய் லஞ்சமா? 'அரிசி விலையைக் குறைத்திடுவோம் — இந்த 'லஞ்ச' ஊழலை ஒழித்திடுவோம்' என்று கூறிய தமிழக அரசுதான் ஆவன செய்ய வேண்டும்.

கடவாடி **அ. கோபாலகிருஷ்ணன்**

வைரியின் வைரி



(இக் கதை ஆங்கிலக் கதையின் தழுவல். எப் போதோ எங்கோ படித்த தொரு கதை அது. ஆசிரியர் பெயர்கூட நினைவில்லை. அக் கதையின் எதிர்பாராத திடீர் முடிவே என் சிந்தனையில் நிற்கிறது. அதிலி ருந்து உருவானதே இந்த என் கற்பனை. இக் கதை யின் 'எதிர்பாரா முடிவு'க்குரிய பெருமைகள் மூலக் கதையின் ஆசிரியருக்கே உரியதாகும்.)

ஆரோக்கிய மாதா ஆலயத்தின் ஸ்தூபியிலிருந்த ஆலாட்சி மணி 'ஹங் ஹங்' என முழக்கமிட்டுப் பிரார்த்தனைக்கு அழைத்துக் கொண்டிருந்தது. பிரார்த்தனை முடித்திருந்த முதலாம் பகுதியினர் சாரி சாரியாக வெளியேறிக் கொண்டிருந்தனர். அக்கூட்டத்தில் ஒருவராக வந்து கொண்டிருந்த வில்லியம் தயங்கித் தயங்கி நின்று இரு வரிசைக் கூட்டத்தையும் நோட்டம் விட்டான். அவன் தேடின இருவரைத்தான் காணோம்.

'ஜோரா ஏன் வரவில்லை? அவனுக்கு ஏதாவது அசந்தர்ப்பம் – அவனது பாட்டனுக்கு உடல்நிலை எப்படியாகி விட்டதோ? அவன்தான் வரவில்லை; இந்தத் தடியன், ஜோசப்புக்கு என்ன கேடு பிரார்த்தனைக்குக் கூட வரமுடியாமல்?' என்று வில்லியத்தின் உதடுகள் முணுமுணுத்தன. அந்த எண்ணத்தைத் தொடர்ந்தே, 'அப்படி ஏதாவது நேர்ந்து ஜோராவின் வீட்டுக்குப் போயிருப்பானோ? ஊஹூம், இருக்காது! எதுவாக இருந்தாலும் அவன் சொல்லாமல் இருக்க மாட்டானே!' என்றவாறாக அவனுடைய மனம் சமாதானத்தையும் சொல்லிக் கொள்ளத் தவறவில்லை.

சர்ச்சு காம்பவுண்ட் சுவரின் வலது புறத்து மூலையை நோக்கி வில்லியத்தின் பார்வை எதேச்சையாகத் திரும்பவும் ஒரு கணம் திகைத்து விட்டான். அங்கே இருந்த சிமிட்டி பெஞ்சில் ஜோசப்பும், மற்றொரு நண்பர் டேனியலும் அமர்ந்திருந்தனர். ஜோசப் ஏதோ ஒரு கடிதத்தை மிகுந்த பரபரப்பாக ஒரு காகித உறைக்குள் செலுத்தி மடக்கி விட்டு, அவ்வுறையின் விளிம்பை நாக்கு எச்சிலில் தோய்த்து மூடி ஒட்டிக் கொண்டிருந்தான். டேனியல் சிரித்தபடி அமர்ந்திருந்தார். சிமிட்டி பெஞ்சில் பிரித்தபடி கிடந்த பேனாவும் துண்டுக் காகிதமும் ஜோசப் ஏதோ ஒரு கடிதத்தை எழுதி முடித்திருக்கிறான் என்பதை விளக்கி வைத்தன.

துரோணன்



டேனியல் காகிதத்தை வாங்கிக் கொண்டு விடை கூறிச் சென்றார்.

வில்லியம் ஜோசப்பிடம், ''ஏண்டா, ஜெனாரா இன்னிக்குப் பிரார்த்தனைக்கு ஏன் மட்டம் போட்டுடுச்சு?'' என்றான்.

''என்னைக் கேட்கிறியேடா? உனக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதானே எனக்கும் தெரியும். முந்தாநாள் காலையிலேதானே நீயும் நானும் அவள் வீட்டுக்குப் போய் வந்தோம்? அவளுடைய பாட்டன் விஷயம் இப்போ எப்படியாச்சுதோ? நம்ப ரெவரண்ட் ஃபாதர் கூடக் கிழவருக்கு மூன்று நாட்கள் கெடு தானே வைச்சாரு? பாவம்! ஜெனாரா என்ன செய்யப் போவுதோ! அவளுக்கு இந்த உலகத்திலே உள்ள உறவெல்லாம் இந்தப் பாட்டன் ஒருவர்தான்'' என்றான் ஜோஸப் மிகுந்த கழிவிரக்கமாக.

ஊரில் அறிந்தோரெல்லாம் நட்புக்கு உவமையாகக் குறிப்பிடப்பட்டவர்கள் வில்லியம், ஜோஸப் இருவரும். கல்லூரியிலோ, கடை வீதிகளிலோ பிரார்த்தனையின்போதோ இவர்களைத் தனித்துப் பார்த்தவர்கள் எவருமில்லை. ஏற்றத் தாழ்வில்லாத இருபத்தைந்து வயதும், மிடுக்கான உருவ அமைப்பும், சுதந்திர வாழ்க்கையும் ஒருங்கே அமைந்திருந்த இவர்களுக்கிடையே முன்பின் உறவு என்கிற பிணைப்பு இருந்ததில்லையே, அதுதான் ஆச்சரியம்!—அது ஒருகுறையும்கூட!

ஜோசப்பின் தந்தை காரைக்காலில் பெரிய நிலக்கிழாராக வாழ்ந்து, தனது ஒரே வாரிசுக்கு மூன்று தலைமுறைக்கும் போதுமான பொருள் சேர்த்து வைத்துவிட்டுப் போயிருந்தவர். வில்லியத்தின் தந்தை பாண்டிச்சேரியில் பிரபல டாக்டராக இருந்து, பெரிய ரசாயன மருந்துக் கடை நிர்வாகத்தையும் இரண்டு லட்சம் ரூபாய்களையும் ஒப்படைத்துவிட்டு மறைந்தவர். இருவர் தந்தைகளும் சிறிது காலம் பழகியிருந்ததன் காரணமாக ஜோசப் பாண்டிச்சேரி கல்லூரியில் படிக்கச் சேர்க்கப்பட்டிருந்தான். பத்து வருஷப் பழக்கத்தில் பட்டதாரிகளான இருவரும் ஒருமித்துவிட்டவர்கள். இவர்களுக்குள்ளாகக் கருத்து வேற்றுமையோ, மறைபட்ட தனி இரகசியமோ எதுவும் இருந்ததில்லை. ஆனால், ஜெனாராவின் நட்பும் தொடர்பும் ஏற்பட்டதே—அதுமுதல் அவர்களுடைய நெஞ்சுக்குள் கொஞ்சம் கொஞ்சமாகப் பாசி பரவத் தொடங்கியிருந்தது. அது அவர்களது நெஞ்சுக்குள்ளாகவே புரையோடிக் கொண்டிருந்ததே தவிர வார்த்தையளவில் இந்த இரண்டு வருஷங்களாக வெளியானதில்லை.

இந்த உலகத்திலுள்ள கன்னிப் பெண்களையெல்லாம் ஒருங்கே கொண்டு வந்து நிறுத்தி வில்லியத்தையும் ஜோசப்பையும் நடுவர்களாக்கி, அவர்களில் சிறந்த அழகியைத் தேர்ந்தெடுக்கும்படி சொன்னால், அவ்விருவரின் தீர்ப்பிலும் முதன்மையாக வரக்கூடியவள் ஜெனாரா ஒருத்தியாகத்தான் இருக்க முடியும். இத்தகைய அழகி ஜெனாராவின் நட்பும் தொடர்பும் இவர்களுக்கு ஏற்பட்டிருந்த விதம் ஓர் அதிசயமான சம்பவம்.

ஊருக்கு ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த அந்தோணியார் தெருக் கோடியில் ஒரு சின்னத் தர்கப் பட்டறை வைத்துப் பிழைத்துக் கொண்டிருந்தான் ஜெனாராவின் பாட்டனான சாமுவேல். இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் அவன், மாதா கோவில் காம்பவுண்டுக்குள் ஏதோ ஒரு மூலையில் கிடந்த

மணிபர்ஸ் ஒன்றைக் கண்டெடுத்துப் போய், பெரியபாதிரியார் மைக்கேலிடம் கொடுத்து, உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கோரினான். ஏறக்குறைய ஆயிரம் ரூபாய் வரையில் நோட்டாகவும் சில்லறையாகவும் இருந்த அந்தப் பையையும், ஏழைமை மிக்க சாமுவேலின் சீலத்தையும் ஆராய்ந்து பார்த்த பாதிரியார், அவனிடம் அளவிலா அன்பைக் கொண்டு விட்டார். அந்த மணிபர்ஸை இழந்திருந்த உடைமைக்காரன் ஜோசப் என்பதைத் தெரிந்து கொண்டிருந்த அளவிலே அவனிடம் அதைச் சேர்ப்பித்ததுடன், இந்த இணைபிரியா நண்பர்களையும் சாமுவேலுக்கு அறிமுகமாக்கியிருந்தார். உண்மைக்குப் பரிசாக ஜோசப் கொடுக்க முன்வந்த இருநூறு ரூபாய் சன்மானத்தையும் சாமுவேல் வாங்க மறுத்து விட்டான். அந்தச் சம்பவத்தின் விளைவாக அவன் அனைவரது கருத்திலும் உயர்வைப் பெற்றுவிட்டான். அப்போது அறிமுகமாக்கப்பட்டவள்தான் லௌரா.

லௌரா சாமுவேலுக்கு மகள் வயிற்றுப் பேத்தி. அவள் தாயையோ தகப்பனையோ கண்ணால் கண்டவளில்லை. நினைவுக்குத் தெரிந்த நாள் முதல் பாட்டன்தான் அவளுக்கு அனைத்தும்.

கள்ளம் தெரியாத லௌராவின் நெஞ்சுக்குள் ஒரு தீர்க்க முடியாத பிரச்னை! ஒருசமயம் அவளுடைய நினைப்பில் வில்லியத்தின் முகமும், மறு நிமிஷம் ஜோசப்பின் முகமும் எதிர்ப்பட்டு வந்து அவளிடம் இரந்து குழையும். இப்படி ஏற்பட்டுள்ள குழப்பத் தொடர்களில் இரண்டு வருஷங்களாக அவள் முடிவுக்கு வந்தபாடில்லை. அவளது பாட்டனாவது தன் உரிமைப்படி அவளை எவருடன் முடி போட்டிருந்தாலும் அவள் மறுக்காமல் ஏற்றிருப்பாள். அவனோ ஆசைப் பேத்தியின் இலட்சியத்துக்கே முழு மதிப்பளித்தவனாய் இருந்து விட்டு, முடிவாக மண்டையைப் போட்டு விட்டுப் போய் விட்டானே!

லௌராவின் உள்ளத்துக்குத் தீராப் பிரச்னையாக இருந்த பொருள் எதுவோ அதுவேதான் இவ்விரு நண்பர்களின் உள்ளங்களிலும். அவள் தனக்கே உரியவளாகப் போகிறாள் என்கிற நம்பிக்கை — அவ்விருவரையும் படாத பாடும் படுத்திக் கொண்டிருந்தது.

சாமுவேல் மறைந்துவிட்ட நாலைந்து நாட்களுக்குப் பின் லௌரா பெரிய பாதிரியாரிடம் தனிப்படப் போய் நின்று அழுதாள். அவர் தீர்மானமாகச் சொல்லி விட்டார்:

''மகளே! உன் வாழ்க்கைக்கு ஏற்ற துணைவன் வில்லியமா, ஜோசப்பா என்பதை உன்னால் தீர்மானிக்க முடியவில்லை. எனக்கும் அது கஷ்டம்தான். வயதிலோ படிப்பிலோ அல்லது பெண்கள் விரும்பக் கூடிய அழகிலோ ஒரே தரத்தில் உள்ள அவர்களில் நான் யாரை விலக்கிச் சொல்ல முடியும்? அவ்விருவரும் — ஏன், உன்னையும் சேர்த்து, நீங்கள் மூவருமே எனக்குச் சமம்தான். ஒரே ஒரு சோதனை மட்டும் சொல்லுகிறேன்: நமது பரம பிதாவான கர்த்தரின் அருள் வாக்குப்படி யார் ஏழைகளை அதிகம் நேசிக்கிறாரோ, எவர் தன்னுடைய எதிரியையும் தோழமையுடன் மதிக்கிறாரோ அவனைத் தானே நாமும் போற்றிக் கூற முடியும்? இந்த அளவுக்கு என்னால் ஆராய முடியாததை நீ ஆராய்வது எளிதாகும். இந்தக் கருத்தின்படி பார்த்து நீ நன்றாகச் சிந்தித்து முடிவுக்கு வந்து தெரிவி. உங்களுக்கு ஆசிகள் வழங்குகிறேன்.''

பாதிரியாரின் அறவுரை லௌராவைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டது.

எப்படியோ! மறு வாரத்தில் ஆரோக்கிய மாதா ஆலயத்தில் ஜோசப்புக்கும் லௌராவுக்கும் மிக விமரிசையான திருமணம் நடந்து விட்டது. ஜோசப் திருமணச் செலவுகளைக் கணக்கில்லாமல் நடத்தி விட்டான். பலப் பல ஊர்களிலிருந்தும் வராதவர்கள் வந்திருக்க, வரக்கூடியவன் வரவில்லையே— அவன்தான் ஆருயிர் நண்பன் வில்லியம்!

இதையெல்லாம் விவரித்து என்ன பயன்? இதெல்லாம் போன வருஷம் வரையில் நடந்து முடிந்திருக்கிற பழைய கதை! இப்போது ஒரு வருஷமாக ஜோசப்—வில்லியம் இருவரின் வாழ்வுகள் எப்படி என்பதில் தானே நம் கவனம் ஆழ்ந்திருக்கிறது?

லௌராவுக்கு ஜோசப்புடன் திருமணம் என்கிற செய்தியை முதல் முதலாக எந்த விநாடியில் கேள்விப்பட்டானோ, அதே விநாடி வில்லியத்தின் கருத்திலே பாதிரியார் ஒரு பெரிய சூழ்ச்சிக்காரராகவும், லௌரா நயவஞ்சகக்காரியாகவும், ஜோசப் கொடிய எதிரியாகவும் உறைந்து விட்டனர். அன்றைக்கே பாண்டிச்சேரியை விட்டுக் காரைக்காலில் இருந்த அவனுடைய ரசாயனச்சாலையின் கிளைக் காரியாலயத்துக்குச் சென்று விட்டான். ஏறக்குறைய ஒரு வருஷத்தில் அழகி லௌராவின் ஏக்கத்தினால் — ஏமாற்றத்தினால் — அவமதிப்பினால் பொருமிப் பொருமி இரக்கம் என்கிற நெஞ்சின் ஈரம் வற்றி அரக்கனின் மனநிலையை அடைந்து விட்டான் வில்லியம். அவன் ஜோசப்புக்குப் பரம வைரி!

சட்ட மன்றத் தேர்தல் காலம் நெருங்கியிருந்தது. ஊருக்கு ஊர் விளம்பரங்களும், பிரசாரங்களும் அமர்க்களப்பட்டன. காரைக்காலில் இருந்த வில்லியத்துக்குத் திடீரென்று ஒரு செய்தி கிடைத்தது. பெரிய பாதிரியாரின் ஆதரவுடன் ஜோசப் பாண்டிச்சேரித் தொகுதிக்கு நிறுத்தப்படுகிறான் என்கிற செய்தி அவனுக்கு இடியாக உணர்த்திற்று. அத்துடன், ஜோசப்பே போட்டியின்றியும் தேர்ந்தெடுக்கப்பட்டு விடலாமென்கிற செய்தியும் பரவலாக இருக்கவே, வில்லியத்தின் எண்ணத்தில் தீ பரவி விட்டது.

வேட்பாளர் மனு தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாளன்று — அந்தக் கடைசி விநாடியில் ஜோசப்புக்குப் போட்டியாக ஒரு புதுப் பெயர் தாக்கலாக்கப்படவே, ஊரே அதிர்ச்சியுற்று விட்டது. ஜோசப் இரண்டு முக்கியமான சகாக்களை அழைத்துக் கொண்டு வில்லியத்தை வீட்டில் வந்து சந்தித்து, தனக்கு விட்டுக் கொடுக்குமாறு மிக மிக நயமாக வேண்டினான்: எவ்வளவோ சொன்னான். ஆனால் வில்லியம் வேங்கைப் புலியாகச் சீறினான்: ''அடேய்! உன் ஆயுள் உள்ளளவும் உனக்கு விதி நான்தான். இந்தத் தேர்தல் மாத்திரமில்லை — நீ லௌராவுடன் வாழ்வதையும் இனி உலகம் காணப் போகிறது! உன்னை எதிர்த்து நின்று நான் வெற்றி அடை

அன்னையின் அன்பைப்போல் மென்மை மிக்கது — அதன் அளவுக்கு வீரியமும் கொண்டது.

அனோலியம்

கோல்ட் ரப்



ஜலதோஷம் மற்றும் இருமலை அறவே அகற்ற வீரியமுள்ள புதிய சக்தி

பெரியவர்களுக்கு ஏற்ப தீவிரமாகவும் சிறியவர்களுக்கு ஏற்ப மென்மையாகவும் செயல்படுகிறது அனோலியம்.

சளி, இருமல், மூக்கடைப்பு முதலிய உபாதைகளுக்கு மூக்கு, தொண்டை, மார்பு முதலிய பகுதிகளில் சிறிதளவு அனோலியம் தடவுங்கள். ஆற்றல் மிகுந்த ஆறு மருந்துகள் சேர்ந்துள்ள அது விரைவிலேயே குணப்படுத்துகிறது. ஏனெனில் இதன் மருந்து சக்திகள் உடலினுள் ஆழ்ந்து ஊடுருவிச்சென்று செயற்படுவதே காரணம்.

அனோலியம் மலிவானது.

மறவாதீர். இதைத் தயாரிப்பது: அமிர்தாஞ்சன் லிமிடெட்

KS.CJ 468 TM

க்ருஷன்

எந்த வயதிலும் உங்களை 'இளமையோடு' இருக்கச் செய்கிறது

தினமும் க்ருஷன் சாப்பிட்டு என்றும் இளமையோடு விளங்குங்கள். க்ருஷனில் சரிசமமாகச் சேர்ந்துள்ள முக்கியமான ஆறு தாது-உப்புகள் மலச்சிக்கல், மூட்டுவலி, ஈரல் மற்றும் மூத்திரப்பைக் கோளாறுகள், பிடிப்பு வலி முதலியவை வராமல் தடுக்கின்றன.

க்ருஷன் உங்களை இளமையோடு வைத்திருப்பதன் விதம் இதுதான்: மூத்திரப் பைகளைக்கழுவுகிறது • ஈரலை நன்றாக இயங்கச் செய்கிறது • இரத்தத்தை சுத்தமாக்க உதவுகிறது • மலச்சிக்கல் அகல உதவுகிறது • ஜீரண சக்தியைப் பெருக்குகிறது • பசி பெருக்க வைக்கிறது • மூட்டுவலிகளை அகற்றுகிறது.

எளிய முறையில் என்றும் இளமையோடு விளங்க தினந்தோறும் ஒரு ஸ்பூன் **க்ருஷன்** சாப்பிடுங்கள்.



CTC டஸ்ட் டீ தரமான தேநீரின் சுவையையும் அழுத்தமான தேநீர் சத்தையும் அளிக்கிறது

சூப்பர் டஸ்ட் கிடைப்பவற்றுள் மிகச்சிறந்த CTC டஸ்ட் டீ

ப்ரூக் பாண்ட் நிபுணர்களால் பக்குவம் செய்யப்பட்டிருப்பதே அது சிறந்து விளங்கக்காரணம்



*கிரஷ், டியர், கர்ல் — இந்த தனிப்பட்ட டீ தயாரிக்கும் முறையானது விரைவில் கரையவும், மிகுந்த தேயிலைச்சத்துக் கிடைக்கவும் உறுதியளிக்கிறது.

வதில் எனக்குப் பெருமை இல்லை: என்னுடைய கூலி ஆள் — என் தொழிற்சாலையில் கண்ணாடிக் குப்பிகள் கழுவிக் கொண்டிருக்கும் ராபர்ட்டைக் கொண்டு உன்னைக் கவிழ்ப்பதில்தான் எனக்குப் பெருமை! அதை நடத்திக் காட்டுகிறேன் — ஓடிப் போ!''

அப்போதே ஜோசப்புக்கு ரோஷம் உக்கிரமாயிற்று. அதை மிகக் கட்டுப்பாடாக அடக்கிக் கொண்டு திரும்பினான்.

தேர்தல் பிரசங்கங்கள் இருதரப்பிலும் வலுவடைந்து, கேவலமான மொழிகள் — ஊர் இரண்டுபட்டது. முடிவாக, சூதாட்டமாக வருணிக்கப்படுகிற தேர்தலின் முடிவு — எவரும் எதிர்பார்க்காத அதிசயம்தான்! சில வாக்குகளே வித்தியாசம் என்றாலும் வெற்றி என்பதை ஒப்புக் கொண்டுதானே ஆக வேண்டும்? அந்த வெற்றி — வில்லியத்தின் கூலி ஆளாகக் குறிப்பிடப்பட்ட ராபர்ட்டை வந்து தழுவிக் கொண்டது. இதற்காக வில்லியம் நடத்தி வைத்த வெற்றி விழாவின் கோலாகலங்களால் சிறு குழந்தைகளுக்குக்கூட ஜோசப் கேலிப் பொம்மையாகி விட்டான்.

இப்போது — ஜோசப் வில்லியத்துக்குப் பரம எதிரி. அதாவது — வைரியின் வைரி!

மிக அமைதியாக நான்கு மாதங்கள் புரண்டு விட்டன.

அன்று — பாண்டிச்சேரியில் மீண்டும் பரபரப்பு மிகுந்தது. ஜோசப் ஆயிரம் பேருக்குத் தேநீர் விருந்து வைப்பதன் மூலம், தன்னுடைய பிறந்த நாள் வைபவத்தைச் சிறப்பாக்கத் திட்டம் செய்திருந்தான். இந்த வைபவத்தைப் பற்றிப் பொதுமக்களிடையே விதம் விதமான கருத்துக்கள் பரவலாகிக் கொண்டிருந்தன. குறிப்பாக, தேர்தலில் தோற்றுப் போன இழிவு, அவமானங்களையெல்லாம் இந்த விருந்தின் மூலமாகப் போக்கிக் கொள்ளுவதற்காகவே ஜோசப் விருந்து நடத்துவதாகப் பேசிக் கொள்ள எவரும் தவறவில்லை.

ஜோசப்பின் பங்களாத் தோட்டத்தில் பெரிய பெரிய கனவான்கள், அதிகாரிகள் — ஏன், தேர்தலில் வெற்றி பெற்ற ராபர்ட் உள்படக் குழுமியிருந்தனர். பத்து வரிசைகளில் போடப்பட்டிருந்த விருந்து மேஜைகளின் அலங்காரங்களே அனைவரையும் கவர்ந்து விட்டது. பங்களாவின் நுழைவு வாசலில் இளாராவுடன் நின்று வரவேற்றுக் கொண்டிருந்த ஜோசப், அடிக்கடி நிலைகொள்ளாமல் அங்குமிங்குமாக ஓடுவதும் திரும்புவதுமாக இருந்தான். அவனது துடிப்பும், பரபரப்பும் எவருக்குமே புரியாத ஒரு ரகசியம்!

கடிகார முட்கள் காலை பத்து மணியை நெருங்கவும், இனி வரக் கூடியவர்கள் எவருமில்லை என்ற நிச்சயமும் ஏற்பட்டது. ஜோசப்புக்கு உள்ளூறப் பெருத்த ஏமாற்றம்! அவனுடைய கருத்தில், வழியை வழியைப் பார்த்து வந்துவிடக் கூடியவனாகவே எதிர்பார்த்திருந்த வில்லியம் வரவில்லையே!

ஜோசப் விருந்தைத் தொடங்கி விட்டான். பலவித இனிப்பு வகைகளையும் சாப்பிட்டு முடித்து, அரை விருந்து முடிந்திருந்த சந்தர்ப்பம். தபால்காரன் ஒரு கவரைக் கொண்டு வந்து ஜோசப்பிடம் நீட்டினான். அது—வில்லியத்தின் கையெழுத்தைக் காட்டிய கடிதம்!

செங்கல் சுகம்!

ஏழு ஆண்டுகளைச் சிறையில் கழித்துவிட்டு விடுதலை செய்யப்பட்ட இருளப்பன் தன் கிராமத்திலுள்ள தனது வீட்டை அடையும்போது இரவு பத்து மணி ஆகிவிட்டது. அவனுடைய மனைவி அவனை ஆவலுடன் வரவேற்றுச் சோறாக்கிப் படைத்துத் தானும் உண்டாள். பிறகு திண்ணையில் உட்கார்ந்து பேசத் தொடங்கினர். பேச்சின் நடுவே திடீரென்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

''ஆமாம், நான் 'அரெஸ்ட்' ஆகும்போது உன் வயித்துலே புள்ளை இருந்துச்சில்லே?'' என்று கேட்டான் ஆவலுடன்.

''அதோ திண்ணைக் கோடியிலே காலைப் பரப்பிகிட்டு உறங்கறது யாருன்னு நெனைச்சே? அதும் மவன்தான்!'' என்றாள் அவள்.

கிட்டத்தில் சென்று உறங்கிக் கொண்டிருந்த மகனைப் பார்த்தான் இருளப்பன். ''அப்படியே என்னையில்ல உரிச்சுட்டுப் பொறந்திருக்கான்! பய நல்லாத்தான் இருக்கான்; பெரியாளாகுவான்'' என்றான் பெருமிதத்துடன்.



அதற்கு அவள், ''பொழைச்சிக்குவானோ இல்லையோ அது நம்ம கையிலே இல்லே. நாளைக்கு ஒலகம் எப்படியிருக்குமோ என்னமோன்னு என் வித்தான் சோகம் காட்டாமே அவனை வளர்த்திருக்கேன். தலைக்கு அவன் எதை வச்சுகிட்டுப் படுத்திருக்கான் பாத்தியா? வெறும் முழுச் செங்கல்லு!'' என்று பகர்ந்தாள் அவ்வில்லக் கிழத்தி.

ஆனால் மறு கணமே இருளப்பன் முகத்தில் இருள் சூழ்ந்தது. கோபமும் உண்டாயிற்று. ''இன்னா மனுஷி நீ? புள்ளையை இப்படியா வளர்ப்பாங்க? கெடுத்திட்டியே!'' என்று சீறினான்.

வள்ளி நடுங்கினாள். என்னதான் இருந்தாலும் பெற்ற மகனை இன்னும் கொஞ்சம் வசதியுடன் வளர்த்திருக்கலாமோ? ஏதோ கூற ஆரம்பித்தாள். அதற்குள் பாக்கியையும் சொல்லி முடித்தான் இருளப்பன். ''ஜெயிலுக்குள்ளே ஜெகமம் ஒரு அரைச் செங்கல்லு கூடக் கிடைக்கிறதில்லே, தெரியுமா ஒனக்கு?'' என்று கத்தினான்! ''வாசன்''

அடுத்த கணமே கையை மேஜைக்குக் கீழ கழுவினான். உறையைக் கிழித்து உள் கடிதத்தை உருவி நோக்கினான்:

''அன்பார்ந்த ஜோசப்,

அன்பு சொரியும் உன் கடிதமும், அத்துடன் இணைந்துள்ள அழைப்பிதழும் கண்ட நிமிஷத்திலேயே நான் யாவற்றையும் மறந்துவிட்டேன். உனது பிறந்த நாள் வைபவம் மிகச் சிறப்பாக நடைபெறக் கர்த்தர் அருள்புரிவாராக. நான் கலந்து கொள்ள இயலாமைக்கு நீயும் இளாராவும் என்னை மன்னிக்க வேண்டும். எனக்குத் திடீரென்று ஏற்பட்ட பல்வலி தோன் காரணமே நான் வர இயலவில்லை. நாளை மறுதினம் நடைபெறவிருக்கிற கல்லறைத் திருநாளை மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடும் திட்டத்தில் இங்கு பெரிய ஏற்பாடுகள் செய்து வருகிறேன். நீயும் இளாராவும் இவ்விழாவுக்குத் தவறாமல் வந்து என்னுடன் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைக்கிறேன் — எதிர்பார்க்கிறேன். நீயும் பகை மறந்த தூயவன் என்பதற்குச் சான்றாக, உன்னுடைய உடனடியான பதில் மறு தபாலி

லேயே எதிர்பார்க்கிறேன். அதற்காகவே எனது முகவரியிட்ட உறையையும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அன்புள்ள வில்லியம்''

கடிதத்தைப் படித்து முடித்த அதே கணத்தில் ஜோசப்பின் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகி விட்டது. ஏதோ ஒரு துயரம் அவனது நெஞ்சைப் பிளப்பது போல் இருந்தது. சட்டென்று எழுந்தான். விருந்துப் பந்தியின் முதல் ஆசனத்திலிருந்த பெரிய பாதிரியாரைக் கைப்பிடியாகப் பற்றி அழைத்துக் கொண்டு கனவேகமாகத் தோட்டத்தின் தனியான அறைக்குள் வந்து சேர்ந்தான். அங்கே காவலாக இருந்த வேலைக்காரனை ஜாடை காட்டி வெளியே போகச் செய்துவிட்டு, அறைக் கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டான். பாதிரியார் ஒன்றும் விளங்காமலே திகைத்து நின்றார்.

ஜோசப் அங்கே அலமாரிக்குள் மின்விசை அடுப்பின் மீதுள்ள கொதிநீர் தாலத்துக்கு நடுவில் வைக்கப்பட்டிருந்த சிறிய பீங்கான் கெட்டிலை எடுத்தான். அதைக் கைக்கெட்டிய உயரத்துக்குத் தூக்கிப் பிடித்துக் கீழே உள்ள கல் தரையில் ஓங்கி அடித்தான். அது சுக்கு நூறாக உடைந்து அதிலிருந்து தேயிலைப் பானம் சிதறித் தெறித்தது. அதே நேரத்தில் பாதிரியாரின் எதிரே மண்டியிட்டு அமர்ந்து, அவரது கால்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு குழந்தை போல் தேம்பத் தொடங்கிவிட்டான் ஜோசப்.

''சாமி, சாமி! நான் பெரும் பாவத்தைச் செய்யச் சதித் திட்டம் போட்டிருந்தேன். வில்லியத்தின் கடிதம் என் கண்களைத் திறந்து விட்டது; கர்த்தர் என்னைப் பாவத்தினின்றும் காப்பாற்றி விட்டார். வில்லியம் தூயவன்! அவன் வந்திருந்தால், இந்த ஒரு கப் தேநீர் அவனது உயிரைக் குடித்திருக்கும். அதை இந்தப் பெரு விருந்தில் கண்டுபிடிக்கவே இயலாது! எனக்கு மன்னிப்பு அளிக்குமாறு கர்த்தரிடம் நீங்கள் முறையிட வேண்டும்'' — ஜோசப்பின் விம்மல்களுக்கிடையே வெளிப்பட்ட வார்த்தைகள் இவை.

வில்லியத்தின் கடிதத்தையும், ஜோசப்பின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்த பாதிரியார் அவனை இறுகத் தழுவிக் கொண்டார். அவனது கொடிய கருத்துக்காகக் கடிந்துரையையும், திருந்தியதற்காக இரக்கத்தையும் சம அளவிலே காட்டத் தவறவில்லை அவர். முடிவாக, தோழமை நிறைந்த வில்லியத்தின் கடிதத்துக்கு உடனே பதில் எழுதுமாறு அவனுக்குப் போதித்து விட்டு, அறையை விட்டு நீங்கினார் பாதிரியார். ஜோசப் அப்போதே கையில் பேனாவை எடுத்து வில்லியத்துக்கு எழுதத் தொடங்கிவிட்டான்.

பதினைந்தே நிமிஷங்களில் நடந்து முடிந்திருந்த இச்சிறு நாடகம், பாதிரியாரையும், ஜோசப்பையும் ஒதுங்கிப் போன வேலையாளையும் தவிர, வேறு எவருமே அறியாத அந்தரங்கம்! ஜோசப் மீண்டும் தன் நாற்காலிக்குத் திரும்பி வந்து அமர்ந்த போது, விருந்து முடிகிற சமயம். நாற்காலியில் சாய்ந்த ஜோசப், ஜொராவின் அன்பான கேள்விகள் எதற்குமே பதில் சொல்லவில்லை. ஏன், அப்புறம் அவன் எவருடனுமே பேசவில்லை. பேச முடிந்தால்தானே?

மறுநாள் —

தபால்காரனின் கையிலிருந்து கடிதத்தை வாங்கிக் கொண்ட கணத்திலேயே, வில்லியம் துள்ளிக் குதித்தான். அதை எடுத்துக் கொண்டு தனி அறைக்குள் போனதும், கடிதத்தைப் பிரித்துப் பார்க்குமளவுக்குக் கூட அவனது மகிழ்ச்சிப் போதை இடம் தரவில்லை. ஒரு வழியாக, மேல் உறையின் ஓரத்தைக் கத்திரித்துவிட்டுக் கடிதத்தை எடுத்து நோக்கினான். அதிலிருந்த செய்திகள் அவன் எதிர்பார்த்தபடியே இருந்தன! ஜோசப், வில்லியத்தை மிக உயர்வாகப் போற்றியிருந்ததுடன், அவனது அழைப்பின்படியே தானும் தன் காதலி ஜொராவும் மிகச் சந்தோஷமான விருந்தாளிகளாக வரப் போவதை விவரித்திருந்தான். இந்தச் செய்திகளுக்காகவா வில்லியத்துக்குக் குஷி பிறந்திருந்தது? இல்லவேயில்லை!

வில்லியம் தன் கைகளை உயரத் தூக்கி ஆட்டியவண்ணம், ''வெற்றி, வெற்றி! ஹிப் ஹிப் ஹுர்ரே! ஜோசப் கடிதமா எழுதியிருக்கிறான்? இல்லை, இல்லை! நான் அனுப்பிய மரணத்தை ஏற்றுக் கொண்டுவிட்டதை அல்லவா உறுதிப்படுத்தியிருக்கிறான்? சபாஷ், சபாஷ்! இதோ, இன்றைக்கே கல்லறைத் திருவிழா அவனுக்கு. நாளைக்குத்தான் எல்லாருக்கும் விழா!'' என வெறி கொண்ட குரலில் கூறிக் குதித்தான் — நகைத்தான் அடித் தொண்டையுடன்.

உண்மைதான்! வில்லியத்தின் சவாலுக்கு அவனது குறிக்கு — ஜோசப் தப்பிவிடவில்லை. நேற்று — பாதிரியாரின் போதனைப்படி வில்லியத்துக்குப் பதில் எழுதி அனுப்பிவிட்டு, நாற்காலியில் வந்து சாய்ந்தவன், அதே வாட்டத்திலேயே — அவனது பிறந்த தினத்திலேயே பிணமாக மாறிவிட்ட கோலமும், அதன் விளைவாக அன்று நிகழ்ந்த அலங்கோலங்களும் காரணம் கண்டுபிடிக்கமாட்டாத டாக்டர்களின் தவிப்பு நிலைகளும் சோதனைகளும் கொண்டுள்ள செய்திகளை இனி மேல்தானே உலகம் படித்தறியப் போகிறது? முதல் வைரிக்கே வெற்றி!

ஜோசப்பின் திடீர் மரணத்துக்குரிய காரணம், எவ்வகையிலும் கண்டுபிடிக்கப்படாமலே புதைபட்டு விட்டது! ஆனால் ஒரு வருஷத்துக்குப் பின், வில்லியம் தானாகவே ஓடி வந்து பாதிரியாரின் கால்களிலும், அரசாங்கத்தின் பிடியிலும் விழுந்து கதறியவாறுத் தன்னைக் கொலைகாரனாக ஒப்புக் கொண்ட உண்மையை எவரும் மறக்கவில்லை.

ஜோசப்பின் துடிப்பு மிகுந்த பழக்கவழக்கங்களை நேரிடக் கண்டவனாயிற்றே வில்லியம்? அந்த அனுபவம்தான் அவனது சபதத்துக்கு வெற்றியளித்தது. ஜோசப்புக்கு விடுத்திருந்த கடிதத்துடன், உடனுக்குப் பதில்— வேண்டி ஓர் உறையையும் இணைத்திருந்தான் அல்லவா? அந்த உறையின் மடிப்பு நுனியில் தடவியிருந்த விஷப் பசையும், அதை உடலுக்குள் செலுத்தி வைத்த ஜோசப்பின் நாக்கு எச்சிலுமே அவனுக்கு யமனாயிற்று என்கிற உண்மையை இப்போதுதான் வந்து தடயத்துடன் நிரூபித்தான் வில்லியம். தண்டனையையும் ஏற்றுக் கொண்டான். காரணம், **அவனது பத்து வருஷ நட்பின் மனச்சாட்சி!**



திடீர் நகர்த் தம்பதிகள்!

வேப்பத்தூர் கிட்டு

காளியம்மா: மச்சான்!

மாரியப்பன்: என்னாம்மே?

காளி: ஒரு வெளக்கம் கேக்கலாமா?

மாரி: வர வர நீ ரொம்ப பத்தான் நுணுக்குக்கிறே வர்றே, உடம்புக்கு ஆவாது, ஆமாம் சொல்லிப்புட்டேன். கேட்டுத் தொலே.

காளி: அதானது மச்சான், இருவது வருசத்துக்கு முன்னாலே ஒரு மோர் மார்க்கெட்டு, ஒரு சோதாப் பேட்டே, ஒரு தில்லேணி... இப்படிப்பட்ட பேட்டைங்களிலே மட்டுமேதான் கூவத்தோடே கும்பி நாத்தம் வீசும்....

மாரி: ஆமாம், அதுக்கு என்னா வந்துச்சு இப்போ?

காளி: அதுக்கு ஒண்ணும் வந்திடல்லே மச்சான்; ஆனா இப்பவெல்லாம் இந்தச் சென்னைப் பட்டணத்து நகரத்திலே எந்தப் பேட்டேலே எந்த மூக்குலே போய் நின்னாலும் கூவம் வாடை வீசுதே....

மாரி: நிறுத்திக்க அத்தோடே.... அதெல்லாம் உனக்குப் புரியிற விஷயமா, இல்லே கேக்கறேன்?

காளி: சொன்னாப் புரியுது.

மாரி: நல்லது கெட்டது எல்லாத்தையும் பொது உடைமையாக்கறத்துக்காக ஆட்சி புரியிறவங்க எம்மாம்பாடெல்லாம் படறாங்க தெரியுமா உனக்கு? இதிலெல்லாம் இனி நீ தலையிடாதே. ஆம்மாம் சொல்லிப்புட்டேன்.

காளி: மச்சான்!

மாரி: மறுபடியும் எதுக்காச்சும் வெளக்கம் கேக்கப் போறியா?

காளி: ஆமாம். நாலு வருசமா நம்ம தெருவு கேட்பாரில்லாமே தொடியும் பள்ளமும் குழியும் மேடுமா இருந்திச்சல்லே?

மாரி: அதான் போன மாசத்துலே தருங்கல்லு செல்லி, மணலு, தாரு, சிமிட்டி எல்லாத்தையும் உருக்கிக் கலந்து இஞ்சின் போட்டு உருட்டி நல்லா சுத்தமா செம்மையாச் செய்தாங்களே? பிறகென்னவாம்?

காளி: நாலஞ்சு நாளா நீ காயலாவாப் படுத்துக் கிடக்கறே. வெளியே போகல்லே. மூணு நாள் முன்னாலே ஒரு பத்து பேருங்க வந்து தெருவு பூராவும் தோண்டிக் குழிக் குளாயைப் பழுது பார்த்துட்டு, மறுபடியும் மண்ணைத் தள்ளி மேடும் பள்ளமுமா மூடி ரொப்பிட்டுப் போயிட்டாங்க!

மாரி: பின்னே குளாய்ங்களைப் பழுது பார்க்க வாணாங்கறியா நீ?

காளி: இப்போ தெருவு பழைய தெருவைக் காட்டிலும் மோசமாயிட்டுதே; குளாய்ங்களையெல்லாம் பழுது பார்த்தப்புறம் தெருவுக்குத் தாரு போட்டு உருட்டியிருக்கலாமுல்லே?

மாரி: போதும் நிறுத்து. உன் அதிகப் பிரசங்கத்தை. பெரிய ரோசனை சொல்ல வந்துட்டா ரோசனை! ஆட்சியைச் செய்யிறவங்களுக்கு தெரியாதா! ரோட்டைப் பழுது பார்க்கற இலாக்கா வேறே, குளாயைப் பழுது பார்க்கற இலாக்கா வேறே. மின்சாரத்தைப் பழுது பார்க்கிறவங்க வேறே. டெலிபோனைப் பழுது பார்க்கறவங்க வேறே! அவங்கவங்க சோலிங்களை அவங்கவங்க ஒழுங்காச் செய்யிறாங்களான்னு கண்காணிக்கப் பெரிய பெரிய ஆபீசருங்க வேறு இருக்காங்க. அத்தெல்லாம் புரிஞ்சுக்க மொதல்லே. வேலை வாய்ப்புக்களைப் பகிர்ந்து கொடுக்கிறதும், சோசலிசத்திலே ஒரு அம்சம். இனி புரிஞ்சுக்காமே எதையும் பேசாதே.

*

மாரி: காளி, ஏன் இப்படி ஒரு மாருதியா மூஞ்சைத் தொங்கப் போட்டுக்கிறே?

காளி: ஒன்னுமில்லே மச்சான்.

மாரி: அட, சொல்லுவியா!

காளி: சொன்னாத்தான் கோவிச்சுக்கிறியே.

மாரி: பின்னே அறிவில்லாமே கேள்வி கேட்டாப் பாராட்டுவாங்களா? சரி கோவிச்சுக்கல்லே, சொல்லு.

காளி: இந்தச் சென்னைப் பட்டணத்திலேதான் சன நெருக்கடி அதியமாயிக்கிட்டே வருதே. மொதல்லே இந்தப் பெரிய ஆபீசுகளையெல்லாம் ஏன் வெளியூரிலே கொண்டு போய் வச்சு நடத்திக்கப்படாது?

மாரி: எந்த ஆபீசுங்களையெல்லாம்?

காளி: பொதுவாத்தான் மச்சான் சொல்றேன்..... சொல்லப் போனா, இந்த இந்து சமய அறுவலகம் இருக்குதே....

மாரி: இந்து ரிலீச்சஸ் எண்டௌமெண்ட் போர்டு ஆபீசு?

காளி: இல்லே, தெரியாமெத்தான் கேக்கறேன், அந்த ஆபீசு எதுக்காக இந்த நகரத்துலே இருக்கணும்?

மாரி: அடங்கொப்புருட்டி! அப்புறம்?

காளி: அதைச் சிதம்பரத்திலே வச்சு நடத்திறு என்ன குடி முழுகிப் போயிடுமாம்? அதே போல, இந்த நகரத்துலேதான் இயங்கணுங்கற அவசியமில்லாத ஆபீசுங்க எத்தனையோ இருக்கு. அதை யெல்லாம் வெவ்வேறு ஊர்களிலே கொண்டு போய் வச்சு நடத்திறு சென்னையிலே சன நெருக்கடியும் கொறையும், பல ஊர்களும் முன்னேறும் இல்லையா?

மாரி: நெசமாத்தான் சொல்றேன் காளியம்மா, உனக்கு மூளையிலே ஏதோ கோளாறுதான் உண்டாயிருக்கு.

காளி: ஏனும்?



அமைச்சரின் கனவு!

அமைச்சர் ஒருவர் தம்முடைய நண்பர் சிலரிடம் கூறினார்:

"...அன்று ஒரு நாள் சட்டசபையில் மிகக் காரசாரமாய் எதிர்க் கட்சியைத் தாக்கி நான் சொற்பொழிவாற்றுவது போலக் கனவு கண்டுகொண்டிருந்தேன். திடீரென்று எனக்கு விழிப்பு உண்டாயிற்று. என்ன ஆச்சரியம் தெரியுமோ? அது கனவல்ல; உண்மையிலேயே அப்போது சொற்பொழிவு தான் நிகழ்த்திக் கொண்டிருந்தேன்!" "வான்"

மாரி: நான் கேக்குற கேள்விக்குச் சரியா பதில் சொல்லு.

காளி: கேளு.

மாரி: நம்ப நாட்டுக்கு சனநாயக சோசலிசம்? வேணுமா வாணாமா?

காளி: அப்படீன்னா என்னா மச்சான்?

மாரி: குறுக்குக் கேள்வி போடாதே! வேணுமா? வாணாமா?

காளி: எதையாச்சும் கொடுத்தா வாணாம்னு சொல்லுவாங்களா?

மாரி: அப்போ கேளு. ஆபீசுங்களைப் பிரிச்சா சனங்க பிரிஞ்சுடுவாங்க. சனங்க பிரிஞ்சா சனநாயகம் பிரிஞ்சுடும். சனநாயகம் பிரிஞ்சா சோசலிசம் பிரிஞ்சுடும். சோசலிசம் பிரிஞ்சப்புறம் தேசியமயமாக்க முடியாது! அப்பாலே நம்மைப் போன்றவங்களுக்கு விடிமோச்சம் இல்லே. புரிஞ்சுதா?

காளி: எங்கே புரியுது?

மாரி: புரியலேல்லே! புரியாது. அதுதான் அதன் தனிச் சிறப்பு. போ. போய் உன் வேலையைப் பாரு. போ.

*

காளி: மச்சான்!

மாரி: கேளு.

காளி: எல்லாத் தொழிலேயும் தேசியமயமாக்கிப்புட்டு அப்புறம் அந்த அடிப்படையிலே சனநாயக ஆட்சி நடத்துறதுதானே சனநாயக சோசலிசம்னு சொன்னே?

மாரி: ஆமாம்.

காளி: அப்படீன்னா ஒண்ணு செய்தா என்ன? அரிசியைச் சர்க்காரே வாங்கி ரேசன் முறையிலே பங்கிடு செய்தாங்க இல்லே?

மாரி: ஆமாம். அதுதான் தூக்கிட்டாங்களே!

காளி: அதை விடு மச்சான். இப்போ தூக்குவாங்க. நாளைக்கே திரியும் இணிச்சுடுவாங்க!

மாரி: ஏன் அப்படிச் சொல்றே?

காளி: பத்தாக்குறை வர்றப்போ பெரிய வேபாரிங்க, எல்லா அரிசியையும் பதுக்கிக் கள்ள மார்க்கெட்டிலே போடுவாங்க. அதைத் தடுக்க மறுபடியும் ரேசனைக் கொண்டாருவாங்க. இல்லையா?

மாரி: சரி, கொண்டாரட்டும்.

காளி: அப்படிக் கொண்டாறபோது சில பேருங்களுக்கு நல்ல அரிசியும் வேறு சில பேருங்களுக்கு அவிச அரிசியும், கல்லரிசியும், நெல்லரிசியும் பச்சரிசியுமா மாறி மாறிக் கிடைக்குமில்லே?

மாரி: உம்?

காளி: இதையே இன்னும் ஒரு படி மேலே போனசி....

மாரி: போனசி?

காளி: மாடன் ரொட்டி செய்து விக்கிறப்பலே....

மாரி: ...க்கிறப்பலே?

காளி: எல்லா ரக அரிசியையும் ஒண்ணாக் கலந்து, சோறு வடிச்சுக் கொட்டி, பட்டை போட்டு அன்றாடம் கடைங்களுக்கு ரூவி வச்சு சப்ளை செய்துட்டா சனங்க எல்லாருக்கும் ஒரே மாதிரியான சோறு கிடைச்சுடும் இல்லையா? இப்படிச் செய்தா ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டமும் கொறையுமில்லையா?

மாரி: என்ன கிண்டலா செய்யிறே?

காளி: இல்லே மச்சான். வந்து...

மாரி: வந்து என்னாமே வந்து...? தேசியமயமாக்க வேண்டியது இன்னும் எத்தினியோ இருக்கு. தெரிஞ்சுக்கோ. அப்போ இதையும் செய்யாமலா விட்டுடுவாங்க? பேச வந்துட்டா பேச!

காளி: 'இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று'ன்னா என்னா அருத்தம் மச்சான்?

மாரி: ஏதேது, எங்கிட்டுப் படிச்சே இந்தக் குறள் பாட்டை?

காளி: பஸ்ஸுலே படிச்சேன். வெளக்கம் கேட்டாச் சொல்லுவியா?

மாரி: அது... இனிய சொல்லுங்க இருக்கச்சே வன்சொல்லுங்களைப் பேசறது இருக்குதே, அது தித்திப்பான பழத்தைத் துண்ணாமே புளிக்குற காயைத் துண்றது போலேன்னாரு வள்ளுவரு.

காளி: அவரு ஏதோ சொன்னாரு. அதை ஏன் பஸ்ஸுலே எழுதிப் போட்டிருக்காங்க?

மாரி: பஸ்ஸுலே பயணம் செய்யிறவங்க படிச்சுத் தெரிஞ்சுக்கத்தான்.

காளி: பயணம் செய்யிறவங்க மட்டும் தான் படிச்சுத் தெரிஞ்சுக்கணுமோ? கண்டக்டர் பணியைச் செய்யிறவருக்கு அது தேவை இல்லையோ?

மாரி: என்ன விதமா கேள்வி கேக்குறே நீயி? எல்லாருக்கும் பொதுவாத்தான் வள்ளுவரு எழுதினாரு.

காளி: அப்படீன்னா முக்கியமா சர்க்காருலே ஒரு விதியை ஏற்படுத்தணும். சர்க்காருலே பணி செய்ய வர்றவங்க எல்லாருக்கும் திருக்குறளைச் சொல்லிக் கொடுத்து, ஒரு வருசமாயினும் பயிற்சியளிச்சு, கூடுமான வரையிலும் அதன்படி நடக்குறாங்களான்னு பார்த்தப்புறம் வேலையைக் காயமாக்கணும்.

மாரி: அடசெய்! ஒரு மனுசனை இன்னொரு மனுசன் திருத்தவே முடியாது. அவனேதான் திருந்தணும். அதைப் புரிஞ்சுக்க மொதல்லே.

சமுதாய வளர்ச்சிக்கான நன்மைகளை வழங்க முன் வருகிறது இண்டியனாயில்

படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்போருக்கு ஒரு புதிய வாய்ப்பு!



இண்டியனாயில், பொருளாதாரத் துறையில் ஒப்பற்ற சாதனையை நிகழ்த்தியுள்ள – இந்தியாவின் மிகப்பெரிய – [illegible] கம்பெனியாகும். சமுதாய வளர்ச்சிக்கான இலட்சியங்களை அடைய ஒரு பொதுத்துறை ஸ்தாபனம் பாடுபடவேண்டுமென்ற கொள்கைக்கு ஏற்ப, கடந்த காலத்தில், வெள்ளம், பஞ்சம், வறட்சி போன்றவற்றால் அல்லலுற்ற, நாடு முழுவதிலுமுள்ள மக்களுக்கு உதவி வந்திருக்கிறது இண்டியனாயில். அதோடு பசுமைப் புரட்சியின் அறைகூவலை ஏற்று, ஏற்றமிகு வகையில் பணியாற்றி வருகின்றது இண்டியனாயில். இப்பொழுது, படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டு இருக்கும் பட்டதாரிகள், தாங்களே வேலை வாய்ப்பினை வழங்கிக் கொள்ளும் வகையில், வியாபார வாய்ப்பிற்கு ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது இண்டியனாயில்.



இண்டியனாயில் கம்பெனியால் விற்கப்பட்டுவரும் பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்களுக்கான டீலர்ஷிப்புகள், [illegible] மற்றும் பிற பட்டதாரிகளுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் டீலர்ஷிப்புகளுக்குத் தகுதிபெற, பட்டதாரிகள் வேலையில் இல்லாமலும், 30 வயதிற்கு உட்பட்டும், குறைந்த வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், டீலர்ஷிப்புகள் தரப்படும் பகுதிகளில் வசிப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

வியாபாரத்தை நல்ல முறையில் நடத்த சிறந்த உதவியினை வழங்க வகை செய்யும் இண்டியனாயில்.

முழு விவரங்கள் நாளிதழ்களில் விரைவில் அறிவிக்கப்படும் குறிப்பிட்ட விளம்பரத்தைக் குறித்தே விண்ணப்பிக்கவும்

INDIANOIL

பொருளாதார வளர்ச்சிக்கான தேசிய ஸ்தாபனம்.

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்



செலவு பத்து வராகன்!

—ஆர். எஸ். மணி

"அம்மா! அம்மா!" என்று கத்திக் கொண்டே உற்சாகத்துடன் உள்ளே ஓடினான் ரகு.

"அந்த மாதிரியான பொம்மைதான் எனக்கு வேணும். என் பள்ளிக்கூடப் பையன் பாஸ்கரன்கூட அதைப் போலத்தான் வைச்சிருந்தான். இங்கே வந்து பாரேன்!"

பலவந்தமாகத் தன் தாயாரை இழுத்து வந்து மேஜையின் மீதிருந்த அட்டைப் பெட்டியைச் சுட்டிக் காட்டினான் ரகு.

அதைப் பார்த்தவுடன் லக்ஷ்மியின் மனம் 'சுருக்'கென்றது. கறுப்புத் தோற்றம் அள வுக்கு மீறி அகன்று அச்சத்தை உண்டாக்கும் வெண்ணிற விழிகள், சிவந்த நாக்கு, கை களிலும் கால்களிலும் நீண்ட நகங்கள்—பெட் டியின்மீது வரையப்பட்டிருந்த பொம்மை பார்ப்பதற்கு விகாரமாகவும் பயங்கரமாக வும் காட்சியளித்தது. கலங்கி விட்டாள் லக்ஷ்மி.

ஒரு வாரமாக ரகு தன் அப்பாவிடம் பொம்மை வாங்கிக் கொடுக்கும்படி நச்சரித் துக் கொண்டிருந்தான். 'ஒருவேளை அவர் வாங்கிக் கொண்டு வந்திருப்பாரோ? கதவு பூட்டப்பட்டிருந்ததனால் ஜன்னலைத் திறந்து உள்ளே வைத்துவிட்டு எங்கேயாவது போயிருக்காரோ என்னவோ? குழந்தைக்கு இத்தனை விகாரமாகவா ஒரு பொம்மை வாங்கி வருவது? சே!'

காலடியோசையிலிருந்தே தன் கணவர் வந்து விட்டதை அறிந்து கொண்டுவிட்டாள் லக்ஷ்மி.

அந்தப் பொம்மையைத் தன் கணவர் வாங்கிக் கொண்டு வரவில்லை என்பதை உணர்ந்தபோது லக்ஷ்மியின் உள்ளத் துடிப்பு உயர்ந்து விட்டது. வீட்டினுள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பது போன்ற பயம் ஏற் பட்டது.

விஷயத்தை உணர்ந்த சீனுவாசன் அவளைச் சமாதானப்படுத்தினான். "சின்ன விஷ யத்தை யெல்லாம் நீ ரொம்பப் பெரிதாக்கிக் கொண்டு அனாவசியமாகக் குழப்பிக்கொள் கிறாய். பக்கத்துப் போர்ஷனில் குடியிருக் கிறானே தஞ்சம்மாள் அவள் பையன் விச்சு வின் வேலையாக இருக்கும். அவன்தான் கன்னாபின்னாவென்று எதையாவது வாங்கிக் கொடுத்து விடுகிறான். அவன்தான் மறந்து போய் இங்கே வைத்துவிட்டுப் போயிருப் பான். போனதடவை இப்படி மறந்துபோய்ப் பந்தை வைத்துவிட்டுப் போனதினால்தானே அவ்வளவு பெரிய சண்டை வந்தது!" என் றான் சீனுவாசன்.

தஞ்சம்மாளை விசாரித்தபோது அது தன்னுடையதல்லவென்று கூறிவிட்டு அது எப்படி வந்திருக்கும் என்பதற்கு ஒரு விளக்கி யானமும் கொடுத்தாள். "சரிதான்? நீ வெளி யில் போயிருந்தபோது யாரோ இதைக் கொண்டு வந்திருக்கா. மூடியிருந்த ஜன்னல் கதவை வெளிப்பக்கமாகத் திறந்து இதை உள்ளே வைத்துவிட்டுப் பழையபடி கதவை மூடிவிட்டுப் போயிருக்கா" என்றாள் தஞ் சம்மாள் பெரிய உண்மையைக் கண்டுபிடித்த வள் போல.

"நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனால் இதை யார் இங்கே கொண்டு வந்து வச்சிருக்கான்னுதான் புரியல்லே. எனக்கு ஒரே பயமாக இருக்கிறது" என்று அங்க லாய்த்தாள் லக்ஷ்மி. பொங்கி வந்த அழுகையைப் பிரயாசையுடன் அடக்கிக் கொண்டாள்.

"லக்ஷ்மி! நான் கேட்கறேனென்று வித்தி யாசமா நினைக்காதே. உனக்கு யாராவது வேண்டாதவர்கள் இருக்கிறார்களா? யாருட னாவது சண்டை போட்டிருக்கிறாயோ?"

"எனக்குத் தெரிஞ்சு யாருமில்லே. ரகு வின் அப்பாவுக்கும் யாருடனும் பேசற துக்கும் நேரமில்லே. நாங்கள் ஏன் அநா வசியமாக ஒருவர் ஜோலிக்குப் போகிறோம்?"

"நாம் ரொம்ப நல்லவான்னு நினைச்சுண் டிருக்கிறவாளே நமக்கு எதிரா ஏதாவது செய் துண்டு இருப்பா. நாலைந்து மாசங்களுக்கு முன்னே உன் மைத்துனர் ஏதோ பண விஷய மாக உன் வீட்டுக்காரருடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தாரே அது என்ன வாயிற்று?" என்று ஆரம்பித்தாள் தஞ் சம்மாள். பிறகு தொடர்ந்து, "இது ஏன் அவருடைய வேலையாக இருக்கக்கூடாது?" என்று கேட்டபோது லக்ஷ்மிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அப்படியும் இருக்கலாமோ இல்லையோ. இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது. உன் மைத்துனர் நல்லவராக இருக்கலாம். உன் ஓர்ப்படி சும்மா இருப்பாளா? இதெல் லாம் ரொம்பச் சாதாரணம் லக்ஷ்மி. ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னே எங்க ஊரில் கூட இப்படி ஒரு சமாசாரம் நடந்தது. சொத்து விஷயமாகத் தகராறு ஏற்பட்டு அண்ணன் காரனுக்குத் தம்பி சூன்யம் வச்சுட்டான். இந்த மாதிரிதான் வீட்டிலே ஏதோ கிடந் தாம். வீட்டிலே இருக்கிறவா அதைத் தொட்டார்களோ இல்லையோ, உடனே அது தன் சேஷ்டைகளை ஆரம்பிச்சுடுத்து.. திடீர்னு துணி மணி எல்லாம் நெருப்புப் பிடிச் சுண்டுடும். தடதடன்னு கல் விழும். ராத்திரி வேளையிலே யாரோ அழறப்போலும் சிரிக் கிறப்போலும் சப்தம் கேட்கும். உனக்கு உலகம் தெரியாது. வெறுத்ததெல்லாம்

பாம் என்று இருக்கே. எதுக்கும் நீ கொஞ்சம் ஜாக்கிரதையாய் இரு. நன்னாத் தெரியற வரையிலே இந்தக் கண்றாவியைத் தொட்டுக்கிட்டு ஒண்ணும் செய்துடாதே.'' என்று கூறிவிட்டு தன் போர்ஷன் பக்கம் நகர்ந்தாள் தங்கம்மாள்.

ஆத்திரத்துடன் தன் அறையை விட்டு வெளியே வந்தான் சீனுவாசன்.

''இவளைப் போய் யோசனை கேட்கிறயே. உனக்குப் புத்தி இருக்கா? கலகம் பண்றது தானே இவள் வேலை. நானும் என் தம்பியும் ஒற்றுமையாய் இருப்பது இவளுக்குப் பிடிக்க வில்லை. எதையோ உளறிவிட்டுப் போகிறாள். குண்டாமாம், குண்டு!'' என்று ஆவேசத் துடன் மேஜையின் மேல் இருந்த அட்டைப் பெட்டியை எடுக்க விரைந்தான் சீனுவாசன்.

லக்ஷ்மி அவனைத் தடுத்து நிறுத்தினாள்.

''நடந்ததைச் சொன்னாள். ஏன் அவள் பேரில் கோபப்படறேள்? அப்படி ஏன் இருக்கக் கூடாது? எத்தனையோ பேருக்கு நம்ம பேரில் பொறாமை.''

''பொறாமைப்பட நம்மகிட்டே என்ன இருக்கு? இரவு பகலாய் உழைத்துக் கடன் வாங்காமல் கௌரவமாய்க் குடும்பம் நடத்துகிறோம்.''

''அது வெளியாருக்கு எப்படித் தெரியும்? ஏதோ புரண்டு விழுவது போலத்தான் எண்ணுகிறார்கள். தங்கம்மாள் சொன்ன தெல்லாம் கேட்ட பிறகு எனக்கு இந்த வீட் டில் இருக்கவே பயமாக இருக்கிறது'' என்று கூறிவிட்டு விக்கி விக்கி அழ ஆரம் பித்துவிட்டாள். சீனுவாசன் அவளைச் சமா தானப் படுத்தினானே தவிர உள்ளூற அவ னுக்கும் பயம் ஏற்படத்தான் செய்தது.

மறுநாள் காலை சுமார் ஏழு மணிக்கு சைக் கிளில் வந்திறங்கினான் சீனுவாசனின் தம்பி ராதாகிருஷ்ணன். ஊரிலிருந்த நிலத்துக் வேறு பிரிவோ சம்பந்தமாகப் பங்காளன் தபால் எழுதியிருந்தான். அது விஷயமாக அண்ணனிடம் பேச வந்திருந்தான் தம்பி.

அவனுக்குக் கோடம்பாக்கத்தில் குடி. நந்த னத்தில் வேலை. தினமும் சைக்கிளில்தான் ஆபீசுக்குப் போவான். சில சம யங்களில் ஆபீசுக்குப் போகும்போது அண்ணனைப் பார்க்க வருவான். ஒரு வாரமாகக் காணவில்லை. திடீ ரென்று அன்று அவ்வளவு காலையில் வந்தது லக்ஷ்மிக்கு ஆச்சரியமாக இருந்தது.

'என்ன நடக்கிறது என்று பார்க்க வந்திருக்கிறார் போலிருக்கிறது. செய் வதையெல்லாம் செய்து விட்டுப் பரம சாதுபோல் இருக்கிறாரே. சே! இவர்களும் மனிதர்களா?' என்று பொருமினாள். வழக்கம்போல் காப்பி டிபன் ஒன்றும் கொடுக்க வில்லை. ரகுவும் குமுவும் சித்தப்பா வந்ததைக் கவனியாதவர்கள் போல் உள்ளேயே அடைந்து கிடந்தார்கள்.

ராதாகிருஷ்ணனுக்கு எல்லாம் ஆச் சரியமாக இருந்தது. சீனுவாசன் விஷயத்தை விளக்கினான்.

''ஓஹோம்! இதுவா விஷயம்? அந்த அயோக்கிய ராஸ்கல் முருகேசன் இருக்கி றானே அவனுடைய வேலைதான். நான் அப்பவே நினைச்சேன். அது சரியாய்ப் போச்சு.''

ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான் சீனுவாசன். சமையல் அறைக் கதவின் பின்னால் வந்து நின்று விட்டாள் லக்ஷ்மி.

''முருகேசனைப் பாகஸ்தனாகச் சேர்த்துக் கொண்டு பிரைவேட்டாக பிஸினெஸ் செய் தீர்களே, அதனால் வந்த வினைதான் இது'' என்று ஆரம்பித்தான் ராதாகிருஷ்ணன்.

முருகேசன் ஓர் அப்டாப்புப் பேர்வழி. பேச்சுத் திறமை மிகுந்தவன். பல கம்பெனி களில் வேலை பார்த்தவன். 'எனக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. வியாபார நுணுக்கங்க ளெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். மூல தனம் மட்டும் நீங்கள் போடுங்கள். மற்ற விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று நச்சரித்துச் சீனுவாசனைத் தன் வழிக் குக் கொண்டு வந்து விட்டான்.

வியாபாரம் பிரமாதமாக நடந்தது. ஆனால் முருகேசன் தன் சுயரூபத்தைக் காண் பிக்க ஆரம்பித்தான். பொய்க் கணக்குகளை எழுதினான். பணத்தைத் தன் விருப்பம்போல் செலவு செய்தான். சீனுவாசன் பணம் கொடுப்பதை நிறுத்தினான். கம்பெனியிலிருந்து வரவேண்டிய பணங்களைத் தன் அனுமதி யின்றி முருகேசனிடம் கொடுக்கக் கூடாது என்று நோட்டீஸ்கள் விட்டான். கம்பெனி மூடப்பட்டது. கோர்ட்டில் வழக்கு ஆரம்ப மாகியது. முருகேசன் சீனுவாசனின் விரோதி யானான்.

''பத்து நாளைக்கு முன்னே அவனை எக்ஸி பிஷன்லே பார்த்தேன். ரொம்பக் கோபமாகப் பேசினான். 'உங்க அண்ணா என்ன பாடு படப் போகிறார் பாரு' என்றான். நானும் அவன் மூக்கை உடைக்கிறாற்போல் பேசினேன். அவன் சுத்த அயோக்கியன். அவனைச் சேர்க் காதீர்கள் என்று சொன்னேன். நீங்கள்தான் கேட்கவில்லை. நம்ம வீட்டு விஷயம் அவ னுக்கு நன்றாகத் தெரியும். எங்கு போகிறோம், என்ன செய்கிறோம் என்று கவனித்துக்கொண் டிருந்து அவன்தான் இந்தக் காரியம் செய்



திருக்கிறான்" என்றான் ராதாகிருஷ்ணன், திட்ட வட்டமாக.

முருகேசனின் பேச்சை எடுத்தவுடன் சீனுவாசனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "எனக்கும் அப்படிச் செய்யத் தெரியாதா? கெட்டிக்கார மந்திரவாதி இருக்கிறான். அவன்கிட்டே சொல்லி இவனை என்ன பாடு படுத்தறேன், பாரு. பைத்தியம் பிடிக்க அவனைத் தெருத் தெருவாக அலைய வைக்கல்லே என் பேரு சீனு இல்லே" என்று ஆவேசத்தோடு எழுந்தான் சீனுவாசன்.

"அப்படிச் செய்தால் வீணாக விரோதம் தான் வளரும். நீங்க ஒன்று செய்ய அவன் ஒன்று செய்ய அதுக்கு முடிவே இல்லாமல் போய்விடும். குழந்தை குட்டிகளோட நாம் நன்றாய் இருக்க வேண்டாமா? அவன் செய்த வினை அவனையே தாக்கும். முதல்லே இந்தச் சூன்யத்தை எடுக்க ஏதாவது வழி செய்யுங்கள்" என்று லக்ஷ்மி அவனைச் சமாதானப் படுத்தினாள்.

சீனுவாசன் தாமதிக்கவில்லை. பக்கத்துத் தெருவில் இருக்கும் குறிமேடை குப்புசாமி நாயக்கரை அழைத்துக் கொண்டு வந்தான். பில்லி, சூனியம், பேய், பிசாசு எல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடு. விஷயத்தை அவனிடம் விளக்கினான் சீனுவாசன்.

"ஆமாம் சாமி! இது சூன்யம்தான். ஆனால் ரொம்பச் சாதாரணம். ஒன்றும் பயப்பட வேண்டாம். பத்து வராகன் செலவழியும். அதாவது முப்பத்து அஞ்சு ரூபாய்! நான் சொன்னபடி செய்யுங்கோ. அப்புறம் ஒன்றும் கிட்ட நெருங்காது" என்றான் குறிமேடைக் குப்புசாமி.

பத்து வராகன் கையில் வந்தவுடன் பரிகாரத்தை ஆரம்பித்தான் அவன். நாலு எலுமிச்சம் பழத்தை எடுத்தான். மந்திரங்கள் ஜபித்தான். அந்தப் பெட்டியைப் பலமுறை சுற்றினான். கடைசியில் எலுமிச்சம் பழங்களை இரண்டாக அறுத்துக் குங்குமத்தை அடையாக அதன் மீது அழுத்திப் பூசி அந்த அட்டைப் பெட்டியின் நாலா பக்கமும் அவைகளை வைத்துவிட்டு வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் என்று இருந்தவைகளை யெல்லாம் மேல் துண்டில் மூட்டை கட்டிக் கொண்டு, "ஒரு நாழிகை பொறுத்து இதைத் தெருவில் கொண்டு போய்ப் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்கு வந்து விடுங்கள். தப்பித் தவறி இதை யாராவது தொட்டு

தலைகளை எண்ணும் தலையாய வேலை

'சென்சஸ்' என்ற வார்த்தை எப்படி வந்தது? ரோமாபுரியில் வயது வந்த குடிமக்களின் பெயர்களையெல்லாம் கொண்ட ஒரு பதிவேடு எப்போதும் உண்டு. அதிலுள்ள விவரங்களைக் கொண்டுதான் அந்த நாட்டில் வரி விதிக்கப்பட்டு வந்தது. அந்தப் பதிவேட்டின் பெயர் 'சென்சஸ்' என்பது. அப்பெயரே ஜனக் கணிடு எடுக்கும் வேலைக்கு வைக்கப்பட்டு விட்டது. ரோமில் அக்காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சென்சஸ் எடுக்கப்பட்டது. அகஸ்டஸ் மன்னன் தான் ரோமாபுரி முழுவதற்கும் இதை அமுல் நடத்தினான்.

பிரிட்டனில் 1753ல் ஜனகணிடு எடுக்க வேண்டும் என்கிற யோசனை காமன்ஸ் சபையால் நிராகரிக்கப்பட்டது! 1790ல் அமெரிக்க நாட்டில் முதல் ஜனக் கணிடு எடுக்கப்பட்டது. பிரிட்டனில் இந்த ஏற்பாடு 1801ல்தான் ஏற்பட்டது.


நம் நாட்டில் ஜனக்கணிடு வேலை புதிதல்ல. இம்மாதிரி கணக்கெடுக்கும் வேலையை மௌரியர் காலத்திலே வாழ்ந்த கௌடில்யர் தம் அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு சண்டை ஏற்பட்டால் அதில் ஈடுபட எவ்வளவு பேர் உடல் வலிமையும் மன வலிமையும் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேலையை நடத்தி முடிக்க ஆள் பலம் எவ்வளவு இருக்கிறது என்பதை யெல்லாம் அக்காலத்தில் இந்த ஜனக்கணிடு மூலமே அறிந்து செயலாற்றி வந்துள்ளனர். இந்த ஜனக்கணிடுப் பணி அந்நாட்டினர் படையெடுப்புக்களில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக நடைபெற முடியாமல் போய்விட்டது.

இக்காலத்தில் சென்சஸ் எடுக்கும்போது ஜனத் தொகை எவ்வளவு என்பது மட்டுமின்றி வேறு பல விவரங்களும் திரட்டப்படுகின்றன. ஒரு சதுர மைலில் எவ்வளவு மக்கள் வசிக்கிறார்கள், கிராமங்களில் எவ்வளவு பேர் வசிக்கிறார்கள், நகரங்களில் எவ்வளவு பேர் வசிக்கிறார்கள். ஒரு வீட்டில் எவ்வளவு பேர் வசிக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் சேகரிக்கப்படுகின்றன. மேலும் வேலை வாய்ப்பு, கிராமத் தொழில், நகர்த் தொழில் இவைகளின் பாகுபாடு, எழுத்தறிவு, மொழி, மதம், ஜாதி, இனம், குலம் ஆகிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு சென்சஸ் எடுக்கும்போது கார் வைத்துக் கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர், சொந்த வீடு வசதி பெற்றவர்கள் எவ்வளவு பேர் போன்ற சில சுவாரசியமான தகவல்களும் சேகரிக்கப்படும்.

ஒருவரால் ஜன கணிடுயின்போது அறிவிக்கப்படும் செய்திகள் எப்பொழுதும் அவருக்கு எதிராக எந்த நிர்வாக சட்ட மன்ற விசாரணைகளின்போதும் வெளியிடப்படமாட்டாது என்று அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

-நஜன்






நெருங்கி உறவாடும்,



நெஞ்சைக் கவரும் நறுமணமுள்ள

லக்மே டால்கம்



உங்கள் இதயம் கவரும் நறுமணத்தை மணிக் கணக்கில் வீசிக்கொண்டிருக்கும் டால்கம்—நெஞ்சை விட்டகலாத லக்மே! அந்த இணையற்ற இன்பத்தை அனுபவிக்கத் தாமதமேன்? இன்றே உங்கள் மேனியின் மீது இன்மணம் கமழும் லக்மே டால்கம் தூவுங்கள். அது பட்டுப் போன்ற மென்மையானது; நேர்த்தியானது; இணைபிரியாதது. ஒரு கனி 'லக்மி' வாசனைத் தூவல். இதை விட இன்பம் தருவது வேறென்ன இருக்கப் போகிறது!

இது நூதன மணம் வீசி, உங்களை அன்புடன் அணைய வருகிறது. லேவெண்டர், வெட்டிவேர், லெமன், சந்தனம் ஆகிய நான்கும், மேலும் மற்றும் ஜாஸ்மின் வாசனைகளிலே வருகின்றன. ஐந்தாவதான ஃப்ளோரல் மிஸ்ட் பேபிஃபேமிலி சைஸில் வருகிறது. எல்லாமே நீங்கள் வாங்கக்கூடிய விலையில்; எல்லாமே இன்ப மணம்; எல்லாமே இன்ப மயம்!


ஆரஞ்சு காண்டீஸ்
கோகோனட் பான் பான்
பைனாப்பிள் டாஃபி ரோல்ஸ்
லாக்டோ நாவல்டீஸ்
நியூட்ரின்
வழங்கும்
4
புதிய விருந்துகள்
லாக்டோ நாவல்டீஸ் — பாலும் மால்டும் தேனும் நிறைந்த புதுமைப் படைப்பு
ஆரஞ்சு காண்டீஸ் — கதிரவன் கொஞ்சிக் கனியவைத்த ஆரஞ்சுச் சாற்றின் ருசி.
பைனாப்பிள் டாஃபி ரோல்ஸ் — கனியின் மணமும் குணமும் கூடிக் கமழ்ந்திடும் இனியதொரு மிட்டாய்.
கோகோனட் பான் பான் — பிரசித்திபெற்ற எமது லாக்டோ பான் பான் மிட்டாய்க்கு இனியதொரு மாற்று இது.
nutrine
தின்னத் தின்ன, திகட்டாத மிட்டாய்கள்
நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், பலமனேர் சாலை, சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்).

விடப் போகிறீர்கள்'' என்று எச்சரிக்கை செய்துவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

ஒரு நாழிகை நேரம் முடிந்தது. நாயக்கர் எச்சரிக்கை செய்திருந்தபடி மிகுந்த பய பக்தியுடன் அந்த அட்டைப் பெட்டியை விரல்களினால் பிடித்து உடம்பில் எங்கும் படாமல் நடந்து வாசல் பக்கம் வந்தான் சீனுவாசன். அப்பொழுது வீட்டு வாசலில் 'விர்' ரென்று ஒரு டாக்ஸி வந்து நின்றது. வண்டியினுள் சீனுவாசனின் மைத்துனன் பாலு உட்கார்ந்திருந்தான்.

''பாலு வண்டியை விட்டு இறங்காதே. அப்படியே இரு'' என்று எச்சரிக்கை செய்த வண்ணம் படிக்கட்டுக்களில் இறங்கினான் சீனுவாசன்.

பாலுவுக்கு விஷயம் புரியவில்லை. டாக்ஸியை அனுப்பிவிட்டு ''என்ன அர்த்தம் பேரே, என்ன விஷயம்?'' என்று பதற்றத் துடன் கேட்டான்.

''பாலு, யாரோ சூன்யம் வச்சுட்டாடா! ஒன்னும் பேசாமல் உள்ளே வாடா, சீக்கிரம் வாடா'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள் அவன் அக்கா லக்ஷ்மி.

சீனுவாசன் அந்தப் பெட்டியை வீதியில் வீசிப் போடுவதற்கு முன்பு அதைத் தன் கையில் வாங்கிக் கொண்டு விட்டான் பாலு.

''ஐயோ! அதைத் தொட்டுட்டையேடா! அநியாயமாக் காரியத்தைக் கெடுத்துட்டை யேடா! குடி முழுகிப் போச்சேடா! ஏண்டா உனக்கு இவ்வளவு தைரியம்?'' என்று லக்ஷ்மி அலறியவாறு வீட்டினுள் ஓடினாள்.

சீனுவாசன் பதற்றத்துடன் விஷயத்தை விளக்கினான். பாலு குபீரென்று சிரித்தவாறு வீட்டினுள் நுழைந்தான். அட்டைப் பெட்டியைப் பிரித்தான். உள்ளே இருந்த பொம் மையை எடுத்துச் சாவி கொடுத்து மேஜையின் மீது வைத்தான். அந்தப் பொம்மை கைகளைக் கொட்டியது. கண்களைச் சிமிட்டியது. வாயைத் திறந்து சிரித்தவாறு தலையை ஆட்டியது.

''இந்தப் பொம்மையை நான்தான் டில்லியி லிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன். போன தடவை வந்திருந்தபோது ரகு பொம்மை வேண்டுமென்று எவ்வளவு அழுதான்?'' என்று பாலு கூறியபோது லக்ஷ்மிக்கு வியப்பாக இருந்தது.

''நீ இப்போதானேடா வரே...?'' என்று ஆரம்பித்தாள் லக்ஷ்மி.

''இல்லே அக்கா! நேத்திக்கே வந்துவிட் டேன். ஆபீஸ் கேஸ் விஷயமாக நானும் ஓர் அதிகாரியும் ஒரு பெரிய வக்கீலைப் பார்க்க வந்தோம். நேத்து சாயந்திரம் ரகுவுக்கு இந்தப் பொம்மையைக் கொடுத்துவிட்டுப் போகலாம் என்று இங்கே வந்திருந்தேன். வீடு பூட்டியிருந்தபடியால் ஜன்னலைத் திறந்து உள்ளே வைத்துவிட்டுப் போய்விட் டேன். நேற்று ரொம்ப நேரமாகிவிட்ட தால் ரயில் தவறி விட்டது. அதிகாரியுடன் ஹோட்டல் அறையிலேயே இருந்துவிட்டேன். இன்று ராத்திரி புறப்பட வேண்டும். சாயந் திரம் வருவதாகச் சொல்லி விட்டு வந்திருக் கிறேன். பக்கத்துப் போர்ஷனிலே ஒருவரும் இல்லாததினால் சொல்லிவிட்டுப் போக முடிய வில்லை. மறுபடியும் வர முடியுமோ முடி யாதோ என்ற சந்தேகத்தினால்தான் பொம் மையை வைத்துவிட்டுப் போனேன். அது என்னடாவென்றால், எல்லாரையும் குழப் படித்துவிட்டது!'' என்றான் பாலு.

தலையில் ஏற்றி வைத்திருந்த பெரிய பாரம் கீழே இறங்கியது போலிருந்தது இருவருக்கும்.

''நீ வருகிறேன் என்று ஒரு கடிதாக போட்டுத் தொலைத்திருக்கக் கூடாதா? கொஞ்ச நேரத்திலே என்ன பாடு படுத்தி விட்டாய் போ!'' என்றான் சீனுவாசன்.

''எப்படியோ, தலைக்கு வந்தது...'' என்று ஆரம்பித்தாள் அக்கா.

''தலைப்பாகையோடு போயிற்று!'' என்று முடித்தான் தம்பி.



குருவாயூரப்பனின் தரிசனத்தை முடித்துக் கொண்டு குருவாயூரிலிருந்து பஸ்ஸில் பழனிக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். விடியற்காலைத் தென்றலில் இறைவன் புகுந்து விளையாடுவதைப் போல் குளுமை பரவியிருந்தது.

வேகமாகப் போய்க் கொண்டிருந்த பஸ்ஸின் இரு புறத்திலும் கேரளத்தின் இயற்கைக் காட்சிகள் பறந்து கொண்டிருந்தன.

பஸ் புறப்பட்டு ஒரு மணி நேரமாகியிருக்கும். இந்த ஒரு மணி நேரமும் நானும் அவனும் கடந்த இரு நாட்களாகக் குருவாயூர் அப்பன் அளித்த விதம் விதமான திருக் காட்சிகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். எங்களுடைய மூன்று வயதுப் பையன் மணிகண்டனோ அவன் மேல் தலையும் என் மேல் காலுமாக வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

எல்லாவற்றுக்கும் மேலே அந்த விடியற்காலத்துக்குச் சற்று நேரத்துக்கு முன்னால், ஆனந்த மயமான பிரம்ம முகூர்த்த வேளையில், குருவாயூரப்பன் அளித்த நிர்மால்ய தரிசனம் உண்டே —

மீனு கண்ணில் நீர் பனிக்கச் சொன்னாள் : ''மறுபடியும் குருவாயூருக்கு எப்போ அழைச்சிண்டு வருவேள் ?''

ஆச்சரியம். ஒரு மணி நேரம்தான் ஆகிறது குருவாயூரை விட்டு ; அதற்குள்ளே இவள் இப்படி மறுபடியும்....

என் நினைவு நேற்றைய தினத்துக்குச் சற்றே தாவுகிறது.

மடியில் எடுத்து வைத்துக் கொஞ்சலாம் போன்று அலங்காரம் செய்திருந்தார்கள் 'அவனுக்கு'. சந்நிதியில் அதிகமான கூட்டம் இல்லாதிருந்த அந்தச் சமயத்தில் மணியைக் கரத்தில் தூக்கிக் கொண்டு நானும் மீனுவும் அந்த அழகை அநுபவித்துக் கொண்டிருந்தோம்.

பச்சைப் பட்டுடையில் தகத்தகாயமாய் ஒளிர்ந்து கொண்டிருந்தான் அந்தத் 'தெய்வக் குழந்தை'.

சந்நிதியை விட்டுச் சுற்றுப் பிராகாரத்துக்கு வந்தோம் நாங்கள், துலாபாரத் தராசுகள் இருந்த இடம் நோக்கி. அங்கே நல்ல கூட்டம் !

நம் உடலை எடை போடுவதாக நினைத்து அந்தத் தராசுத் தட்டில் அமர்கிறோம் நாம்; ஆனால் ஆண்டவன் நம் மனத்தையல்லவா அங்கே எடை போடுகிறான்! மிகவும் கனமான பேர்வழியின் நிறையைச் சில எடைகள் நிறையுள்ள நேந்திரம் பழத்திலேயே திருப்தியாக்கி விடுகிற ஆண்டவன், ஒரு மெலிந்த பேர்வழிக்கு — அல்லது குழந்தைக்கு—எத்தனை நிறையைக் கேட்கிறான்! இதன் அளவில்தான் ஆண்டவனின் சக்தியும் நமக்கு இருக்க

தெய்வத்தின் தராசு

க. பஞ்சாபகேசன்

வேண்டிய பத்திரமே எடைபோடப்படுகின்றனவோ....

பஸ் ஓடிக் கொண்டிருந்தது. ஏதோ முடிவற்ற ஒரு பிரயாணத்தை நிகழ்த்துவதைப் போல்.

என் மனத்தில் என்னையும் அறியாமல் என் கடையைப் பற்றிய எண்ணம் தலைதூக்கலாயிற்று. திருச்சி டவுனில் எனது மளிகைக் கடைக்குப் பிரசித்தி அதிகம். கடையை விட்டு இப்படி நான் புறப்பட்டு நாலைந்து நாட்களாகி விட்டன.

வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நேரம் கிடைப்பது அபூர்வம்தான். கடையைப் பொறுப்பானவர்கள் கவனித்துக் கொள்ள இருந்தது உண்மைதான். ஆனால் மனிதனுக்குச் சொந்தம் கொண்டாடும் எண்ணம் இருக்கும் வரை மற்றவர் எவருடைய பொறுப்பிலும் தன்னுடைய சொத்தை விட மனம் வருமா?

திடீரென்று எனக்கொரு நினைவு வந்தது.

பத்து நாட்களுக்கு முன்பு கடையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி; கடைப் பையன் ஒருவனை நான் வேலையை விட்டு நீக்கிவிட்ட சம்பவம் —

கடையின் நட்ட நடுவில் மாட்டப்பட்டிருந்த பெரிய தராசில் நெய்யை நிறுத்துக் கொண்டிருந்தான் அந்தப் பையன். இரண்டு கிலோ நெய். அதன் மூலம் எனக்கு — என் 'கல்லா'வுக்கு — வரக் கூடிய தொகை இருபத்தி நாலு ரூபாய்.

கல்லாவில் உட்கார்ந்து தராசையே பார்த்துக் கொண்டிருந்த எனக்குச் சிறிது ஐயம் உதிக்கவே, எடைக் கற்களைக் கொண்டு வரச் சொல்லிப் பார்த்த போது. கால் கிலோ அதிகமாக இருந்தது. பையனை முறைத்துப் பார்த்தேன். பன்னிரண்டு வயதுப் பையன்; மிரண்டு போய் என் எதிரே நின்றவனை, நான் கவனிக்காமல் வேறோர் ஆளை மறுபடியும் நெய்யைச் சரியானபடி நிறுக்கச் சொல்லி விட்டுக் 'கல்லாவை'த் திறந்து —

அடுத்த சில நிமிடங்களில் அந்தப் பையன் என்னிடம் இறைஞ்சிக் கொண்டிருந்தான்: "ஐயா! ஐயா! பார்க்காமல் தவறிப்போய்ச் செஞ்சிட்டேன்; ஐயா! இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்..."

அவனுடைய கைகளில் அது நாள் வரையுமான அவனது சம்பளப் பணமான இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

"எத்தினி நாளாய் இப்படிச் செஞ்சு என் சொத்தை அழிச்சுக்கிட்டு...."

"எஜமான்!.... அப்படியெல்லாம் இல்லிங்க. இந்தப் பெரிய தராசுப் பக்கம் இன்னிக்குத்தான் நான் வந்தேன் நிறுக்கறதுக்கு." கடையின் மற்ற சிப்பந்திகளும் பையனுக்கு ஆதரவாய்ப் பேச வந்தனர்.

"வெளியிலே போடா..." என்று கர்ஜித்தேன் நான்.

கடையை விட்டு இறங்கிய அந்தப் பையன், "ஐயா! ஐயா!... எங்கம்மா நிறை மாசப் பிள்ளைத்தாய்ச்சி ஐயா! அவங்களுக்கு உடம்பு இப்போ தேவில்லே...காயலாவா இருக்காங்க... எனக்கு இந்த வேலை போயிட்டா..." என்று கெஞ்சியதைக் காற்றில் கரையவிட்ட நினைவு இப்போது எனக்கு ஏற்பட்டது.

உள்ளமெல்லாம் சிலிர்த்தது எனக்கு.... நினைவு மறுபடியும் முந்தின நாள் கோயிலில் என் பிள்ளைக்குத் துலாபாரம் போட்ட சம்பவத்துக்குத் தாவியது.

தராசில் உட்கார மாட்டேன் என்று மணி ஒரே பிடிவாதம் பிடித்தான். ஒரே அழுகை. அச்சூழ்நிலையால் குழந்தை சற்றே பரபரத்திருந்ததுதான் இதற்குக் காரணம்.

'குருவாயூரப்பா, இதென்ன சோதனை?' என்று நானும் மீனுவும் செய்வதறியாது தயங்கி நின்ற போது, அங்கே நின்றிருந்த ஒரு பெரியவர் மணியின் அருகில் வந்து குழந்தையின் முதுகைத் தடவியபடி சிரித்தார்! சாந்தி நிலவிய முகத்திலிருந்து வந்த குளிர்ந்த சிரிப்பு! மணி உடனே தன் அழுகையையும் பிடிவாதத்தையும் நிறுத்திக் கொண்டான். அவனை அவரே தூக்கித் தராசுத் தட்டில் வைத்தார். பழங்கள் மறு தட்டில் வைக்கப்பட்டன. சில நிமிடங்களில் பிரார்த்தனை முடிந்தது. உரிய கட்டணத்தை நான் செலுத்தி விட்டுத் திரும்பியபோது, "மீனு, அந்தப் பெரியவர் எங்கே?" என்று கேட்டேன்.

"நானும் அவர் எங்கே என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்...." என்றாள் மீனுவும்.

கூட்டம் அதிகமாகவே இருந்தது. அந்தப் பெரியவர் கண்ணில் தட்டுப் படவே இல்லை.

அப்போது என் மகன் மணி சொன்ன மழலை வார்த்தைகள் என்னைச் சிலிர்க்க வைத்தன:

"தாத்தாவையாப்பா தேடறே? தாத்தா அப்பவே கோயிலுக்குள்ளே போயிட்டாரே? ஏம்ப்பா, நம்ப கடையிலேகூட இவ்வளவு பெரிசா ஒரு தராசு வச்சிருக்கே இல்லே யாப்பா? அதிலே வெண்ணெய், நெய்யெல்லாம்தானே நிறுக்கறோம்?...." அதற்கப்புறம் குழந்தை வார்த்தைகளால் தன் எண்ணத்தைக் கூற வந்தும், கூறாமல், நினைவு குழந்தைத்தனமாக வேறெங்கோ நகரச் சும்மாயிருந்து விட்டான்.

ஆனால் —

குழந்தைக்கு ஏனென்று புரியாத அந்த ஆச்சரியத்தை நான் மீனுவிடம் வெளிப்படையாகச் சொன்னேன்: "நம்ம கடைத் தராசிலே பொருளையெல்லாம் நிறுக்கிறோம்;

இங்கே மனிதர்களை நிறுக்கிறார்களே என்று தான் மணி இப்படி ஆச்சரியப்படுகிறான்.... உனக்குப் புரிகிறதோ மீனு?'' என்றேன்.

''கோவிலுக்கு வந்தால்தான் உங்களுக்கு எங்கேயிருந்தெல்லாமோ வேதாந்தப் புத்தி வந்து விடும்.... மணிக்குப் பசி வந்துவிடும். வாருங்கள் வெளியே போகலாம்'' என்று அழைத்தாள் மீனு....

பஸ் பழனியை நெருங்கிக் கொண்டிருந்தது. மணி நன்றாக விழித்துக் கொண்டு அவன் அம்மாவிடம் விளையாடிக் கொண்டிருந்தான்.

இன்னொரு முறை அவசியம் குருவாயூர் வர வேண்டும் என்று மீனு அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்ததைப் போலவே, மணி சற்று நேரத்துக்கு ஒரு முறை அந்தத் துலாபாரத்தைப் பற்றி — தராசைப் பற்றி — ஏதாவது மழலை மொழியால் பேசிக் கொண்டே வந்தான்.

''....நம்ம கடைத் தராசைப் போலே...'' இப்படியேதான் அந்தப் பேச்சு வளர்ந்தது.

பழனியில் முருகனின் தரிசனத்தை முடித்துக் கொண்ட போது என் மனம், ''பழனியாண்டவா! ஊருக்குப் போனதும் முதல் காரியமாக அந்தப் பையனை வேலையில் சேர்த்துக் கொள்ள வேணும்!'' என்று மறுகிக் கொண்டது.

அன்று இரவு திருச்சியில் எங்கள் இல்லத்தை அடைந்த போது இரவு மணி பத்து.

கணக்குப் பிள்ளை கடையை மூடிவிட்டுத் திறவுகோலை வீட்டில் கொடுக்க வந்தார்.

''நல்லபடியா தரிசனமெல்லாம் முடிஞ்சுதா ஐயா?'' என்று கேட்டார்.

''எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது. அதிருக்கட்டும், அந்தப் பையன் — வேலையை விட்டு நீக்கப்பட்ட அந்தப் பையன் —''

கணக்குப் பிள்ளை சிரித்துக் கொண்டே, ''உங்க அனுமதி கிடைக்கும்னிட்டு அந்தப் பையனை மறுபடியும் கடையில் வேலை செய்ய அனுமதிச்சிருக்கேன், ஐயா! கோவிலுக்குப் போய் வந்ததும் உங்க மனசு சமாதானமாகப் போயிடும்னு நம்பிக்கையிலே.... அவன் ரொம்ப நல்லவனுங்க....'' என்றவரை இடையில் மறித்து — ''பரவாயில்லை. அவன் கடையில் வேலை செய்யட்டும்....'' என்றேன்.

''ஐயா மனசு எனக்குத் தெரியும். ஆனா தராசுப் பக்கம் அவனைப் போக விடறதில்லீங்க.... இப்போ கால் கிலோ கூட நிறுத்தவன், ஒரு கிலோவா நாளைக்கு....''

கணக்குப்பிள்ளை புறப்பட்டுச் சென்று விட்டார். நல்ல வேளை, இறைவனுடைய தராசில் என் மனத்தின் நிறை சரியானபடி எடை போடப்பட்டு விட்டது.

மறு நாள் கடையில் வழக்கம் போல் அந்தப் பையன் சுறுசுறுப்பாகத்தான் வேலை செய்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அவன் கண்களில் சற்றே மிரட்சி தோன்றினாலும் —

''என்னடா தம்பி, உங்க அம்மாளுக்கு இப்போ உடம்பு எப்படி இருக்குது?'' என்று நான் கேட்கவும் அதற்கு அவன் பதில் சொல்லவும், அதன் பிறகு அந்த மிரட்சி சரியாகப் போய் விட்டது.

'கல்லா'வுக்கெதிரே போய் உட்கார்ந்திருந்த என் கண்களுக்கு எதிரே கடையின் நட்ட நடுவே மாட்டியிருந்த பெரிய தராசு தட்டுப்பட்டது. கடை திறக்கப்பட்டு இரவு மூடப்படும் வரை அந்தத் தராசு சதா இயங்கிக் கொண்டிருப்பதைப் போலவே —

நமது மனங்களை எடை போடும் ஆண்டவனின் தராசும் — துலாபாரமும் — சதா சர்வதா இயங்கிக் கொண்டேதான் இருக்கிறது. எடை குறைவு அல்லது அதிகம் என்பதற்காக என்னை அவர் எப்படி நீக்கிவிடவில்லையோ, அதே மாதிரி நானும் அந்தச் சிறுவனை வேலையிலிருந்து நீக்கிவிட முடியாது தான்.

எதிரே இருந்த தராசு குருவாயூர் துலாபாரமாகவே கண்களுக்குக் காட்சி தந்தது.



''நீங்க காசு தராவிட்டால் போகிறது. உங்கள் ஃப்ளாஸ்க்கிலே வச்சிருக்கிற காப்பியையாவது ஒரு மடக்கு இந்த ஏழையின் பசிக்கு ஊற்றுங்களேன் சாமி!''



''அக்கா! இன்று உன் முகம் பளிச்சென்று இருக்கு! ஏன் தெரியுமா? டூத் பவுடர் டப்பியில் ஃபேஸ் பவுடரையும், ஃபேஸ் பவுடர் டப்பியில் டூத் பவுடரையும் மாற்றி வச்சேனே! அதனாலேதான்!''



புகைப்படக் கலையின் புதிய உச்ச
எல்லைகளுக்கு எழும்ப...
உதவுவது
அமிகோ
'பளிச்'செனப் படம் பிடிப்பது அமிகோ
அமினிந்த் பிரைவேட் லிமிடெட்.



ஜனவரி இருபத்தைந்தாம் தேதி கல்கி இதழில் ஃபாக்ட் ஸ்தாபனம் (FACT) மானேஜ்மெண்ட் டிரெய்னி என்னும் பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபாய் ஐம்பது வசூல் செய்வதைக் கண்டிக்கும் வகையில் ஒரு கடிதம் பிரசுரமாகியிருந்தது.

இந்தப் பதவிக்கு மனுப் போடுபவர்கள் மூன்று பரீட்சைகள் எழுத வேண்டும்; தவிர, நிர்வாகத் துறையில் அநுபவம் பெற்ற அறிஞர்கள் முன் நேரடிப் பரீட்சைக்கு வர வேண்டும்; மனோதத்துவ நிபுணரால் பரிசோதிக்கப்பட வேண்டும். இதற்கெல்லாம் கணிசமான அளவுக்குக் கம்பெனி செலவழிக்க வேண்டியிருக்கிறது. பரிசோதகர்களுக்காகவும் பரீட்சைகளுக்காகவும் ஆகும் செலவுகள் மட்டுமின்றிப் பரீட்சை எழுத வருகிறவர்களின் போக்குவரத்துச் செலவும் சாப்பாட்டுச் செலவும்கூட இதில் அடக்கம். ஆயிரத்து ஐந்நூறு பேர் இந்த ஆண்டு பரீட்சை எழுத வந்தார்கள். மொத்தச் செலவில் ஒரு பகுதியே

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பெறுகிறது.

பரீட்சைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. கட்டணம் இல்லையென்றால் தகுதியற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எக்கச்சக்கமாக வந்து குவியும்.

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், ராணுவத்தில் பணியாற்றியவர்கள் ஆகியோருக்கு விண்ணப்பக் கட்டணத்தில் சலுகை தருகிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்னை-18
20-2-70

ஆர். பார்த்தசாரதி
(பொதுஜனத் தொடர்பு ஆலோசகர்)

நம் நாடு சுதந்திரமடைந்து இருபத்திரண்டு ஆண்டுகளாகியும், நாம் எதில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றில் மட்டும் நிச்சயமாக முன்னேறியுள்ளோம் என்பதை அண்மையில் செய்திப் பத்திரிகைகளில் கண்டேன். அதாவது நாடு விடுதலை அடைவதற்கு முன் ஐந்து லட்சமாக இருந்த பிச்சைக்காரர்கள் தொகை இப்போது பத்து லட்சமாகப் பெருகியுள்ளதாம். அரசினரின் பொருளாதாரக் கொள்கைகளும் திட்டங்களும் தவறானவை என்பதற்கு மற்றும் ஒரு சான்று.

பெங்களூர்-33
23-2-70

பி. ஜி. கணேசன்

கல்வித் துறையில் இயன்ற அளவு அரசாங்கத்தின் குறுக்கீடு இல்லாமல் இருக்கவேண்டும் என்பது முன்னாள் துணைவேந்தர் திரு இலட்சுமணசாமி முதலியார், வினோபாபாவே போன்ற பல அறிஞர் பெருமக்களின் கருத்து. பாடப் புத்தகங்களை அரசாங்கத்தாரே வெளியிடும் ஏற்பாடு இந்த உன்னதமான கருத்துக்கு நேர் மாறானது ஆகும். இந்த ஏற்பாட்டால் கல்வித் துறையில் அரசாங்கத்தின் குறுக்கீடு வளர்ந்து, கல்வியின் தரம் குறையும். மாணவர்களின் அறிவு வளர்ச்சியும் குன்றும். பாடப் புத்தகங்களைப் பள்ளிக்கூடங்களில் வைக்கும்படி சிபாரிசு செய்வதில் ஓரளவு லஞ்சமும் நிலவி வருகிறது என்று பேசப்படுகிறது. இந்த மாதிரி செய்பவர்களைத் தண்டிப்பதுதான் சரியானது. குளத்தில் பாசி இருந்தால் பாசியை எடுத்துச் சுத்தம் செய்வதுதான் சரி. அதற்காகக் குளத்தையே தூர்த்து விடுவதா? பாடப் புத்தகங்களை நாடு முழுதும் ஒரே மாதிரியாக்குவதால் பலவித நூதன ஆராய்ச்சிகளுக்கும் புதுமைக் கருத்துக்களுக்கும் இடமில்லாமல் போய்விடும்.

தனியார் பதிப்பகங்களுக்குப் பாடப் புத்தகங்கள் எழுதிக் கொடுத்து அதன் மூலம் ஓரளவு வருமானத்தைப் பல ஆசிரியர்கள் பெறுகிறார்கள். அரசாங்கம் வெளியிட்டால் இரண்டோர் ஆசிரியர்களைத் தவிர ஏனையவர்களுக்கு இந்த வருமானம் கிடைக்காது. தனியார் துறையிலிருந்து பாடப் புத்தகங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டால் தனியார் துறையில் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கானோர் வேலை இழப்பர். தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேறு எங்கு வேலை தேடிப் போவார்கள்?

மாணவர்களுக்கேற்ற புத்தகங்கள் எழுதுவது கடினம். இதற்குத் தனிப்பட்ட திறமை அவசியம். இந்தத் திறமை எங்கெங்கு இருக்கிறது என்பதைத் தேடிப் பிடித்து அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் பிரசுரகர்த்தர்கள். மேலும், பதிப்பாளர்கள் பலராக இருக்கிற காரணத்தால் அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டு, பாடப் புத்தகத்தின் அமைப்பிலும், அழகிலும், கருத்துச் செறிவிலும், நடையின் இனிமையிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சும் வகையில் புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள். போட்டியின் காரணமாகக் குறைந்த விலையில் புத்தகங்கள் வெளியாகின்றன.

ஆகவே, கல்வியின் தரம் குறையாமலிருக்கவும், மாணவர்களின் அறிவு வளர்ச்சி விரிவடையவும் தனியார் பதிப்பகங்களுக்கு நல்ல முறையில் பாடப் புத்தகங்களை வெளியிட அரசாங்கம் ஊக்கமளிக்க வேண்டுகிறேன்.

கலியாணபுரம், சென்னை—6
18—2—70

வி. நாகராஜன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon